6

# சக்தி



# சுதந்திரத்தின் சின்னம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
௪௪௮௭௭
சென்னை-600 008





இந்திய
சுதந்திரக் கொடி

No.1506 அசோகா MILD SCENTED ASOKA No.1506

சுதந்திர குணமுள்ளது

# அசோகா

## சுகந்த பாக்குத் தூள்

1930 முதல் குணத்திலும்
மணத்திலும் தனித்து நிற்பது

தயாரிப்பவர் :

எஸ். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்

JL
M211.N36.5
N47447


SRB
வாலாயமான பழைய கடை !
ஆகாய வீதியில் அந்திவானத்தின் அழகிய வர்ணங்களை அப்படியே
பிடித்து அடைத்தாற்போல் பல நூதன பட்டு ஜவுளி தினுசுகள்
தற்சமயம் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன
நேரில் வந்து பாருங்கள் !
S. R. B. குப்புசாமி அய்யர் & சன்ஸ்
(பழைய விலாசம்) S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்
No. 117, நயினியப்ப நாய்க்கன் தெரு, P. T. மதராஸ்.
No. 230, கீழமாரெட் வீதி, மதுரை



# இந்தியன் பாங்க்
## [லிமிடெட்]

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்**
**நார்த் பீச் ரோட், மதராஸ்**

*மதராஸ் ஆபீஸ்கள்:*

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

*தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன*

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | | ரூ. 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ... | ரூ. 62,00,000 |

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்,**
செக்ரெடரி.

IBN/101


நான் இப்பொழுது ரொம்பவும்
சுகமாய் இருக்கிறேன்



ஜம்மியின்
# லிவர்க்யூர்

**மருந்திற்கு எனது மனமார்ந்த வந்தனம்**

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர் மதராஸ் 4 (போன் நெ. 8139)
தெப்பகுளம் திருச்சி, பெரிய தெரு கும்பகோணம்
பெங்களூர், பம்பாய் 4. (போன் நெ. 41593)
மற்றும்: லக்னோ, கல்கத்தா.

ADARTS J236 TAMIL



## காலையில் குதூகலத்துடன் எழுந்திருங்கள்

காலை நேரத்தில் குதூகலமாயிருப்பது சாத்தியமே. இரவில் படுக்கச் செல்லுமுன் "மில்க் ஆப் மெக்னீஷியா" உட்கொண்டால் புளியேப்பம், அஜீரணம், அமிதமாக ஆகாரம், பானங்கள் உட்கொண்டதால் ஏற்படும் உபாதைகளை நீக்கி நல்ல தூக்கம் அளிப்பதுடன் விரைவில் சுகம் உண்டாகிறது. நீங்கள் நன்ருகத் தூங்குகிறீர்கள். தூங்கும்பொழுது "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" உபாதைகளைப் போக்கி, மலத்தை ஙளினமாகவும் பூரணமாகவும் இளக்குகிறது. ஆதலால் மறுநாள் காலையில் சுறுசுறுப்பாகவும், குதூகலமாகவு மிருக்கிறது.

*Remember...*

**PHILLIPS**

**"MILK OF MAGNESIA"**

*Tonight!*




LIQUID or TABLETS

No. 2




பால் பிளேடுகள் உட்குழிவோடு உள்ளன - அதனால்தான் ரேஸர்களில் உபயோகிக்கும் பொழுது வளைந்து கொடுக்கும் தன்மையன - மற்ற வைகளைப் போல மடங்காத கடினமானவையல்ல.

உட்புறம் குடைந்துள்ளதால் பிளேடுகள் லேசாக வளைந்து கொடுத்து க்ஷவரம் செய்யும் முனைகள் குறையாதபடி அனுகூலம் செய்கின்றது. மெல்லிய தோல்களுக்கும் சவுகரியமானவை: பால் பிளேடுகளை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்.







இரண்டு முனையுடையது 4 க்கு 5 அணா

# PAL

அமெரிக்காவில் கண்டு பிடிக்கப் பட்டது.

PBC.IA

## உட்குடைந்து தீட்டப்பட்ட ரேஸர் பிளேடுகள்

எல்லா சாதாரண ரேஸர் மிஷின்களிலும் சரியாக பொருந்துகின்றன.

சோல் விநியோகஸ்தர்கள்: இந்தியன் கமர்ஷியல் கம்பெனி லிட்.

45-47, அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்.

தென் இந்தியாவிற்கு பூரண வினியோகஸ்தர்கள்:—மெஸர்ஸ் பாரி அண்ட் கம்பெனி லிமிடெட் தபால் பெட்டி நெ. 12, மதராஸ் மற்றும் கிளைகள்

ஐந்து வருடங்கள்

பயிற்சி பெற்றதற்கு

பிறகு தான் ஒரு

டாக்டர் ஆகமுடியும்.

அதே போல ஒரு முக்கிய

விமான நிலயத்திலுள்ள

பர்மா - ஷெல் ஏவியேஷன்

சர்வீஸ் ஸூபரின்டென்டெண்ட்

ஆகவும் ஐந்து வருடங்கள்

நீடித்த கடினமான பயிற்சி தேவை.

அவர்களையும் சர்வீஸைப்போலவே

நம்பலாம் . . .

**பர்மா-ஷெல்**
**ஏவியேஷன்**
**சர்வீஸ்**

'விமான கம்பெனிகளால் நம்பப்படும் சர்வீஸ்'

SHELL

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்டு டிஸ்டிரிபியூடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜன்டுகள்.

பெண்களின்
சொந்தப் பத்திரிகை

# மங்கை

●

தமிழ் நாட்டிலே பெண்களுக்கென வெளிவரும் பத்திரிகைகளில் தலை சிறந்தது 'மங்கை' தான். அது சக்தி காரியாலயத்திலிருந்து வெளிவருகிறது. மாதப் பத்திரிகை.

●

வருட சந்தா ரூ. 6
இரண்டு வருட சந்தா ரூ. 11

தனிப்பிரதி அணா எட்டு

## சக்தி காரியாலயம்

சென்னை 14

# பொருள் அடக்கம்

**மலர் 14 : இதழ் 7**

●


| | | | |
|---|---|---|---|
| சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள் | ... | தலையங்கம் | 9 |
| கிழவி | ... | 'இலக்கியமாணவன்' | 12 |
| நடுத்தெருவில் நாட்டியம் | ... | மஞ்சேரி ஈச்வரன் | 14 |
| சோக நாடகம் | ... | ஜகம் | 19 |
| இருதய நோய்க்குப் புதிய சிகிச்சை | ... | வைத்தியர் | 25 |
| நண்பனுமல்ல ; விரோதியுமல்ல ! | ... | எம். இஸ்மத் பாஷா | 29 |
| பொதுமக்களும் இலக்கியமும் | ... | ம. ரா. சண்முகசுந்தரம் | 35 |
| இந்தியாவில் குருடர்கள் | ... | பி. ஜி. கேட் | 43 |
| காப்பியின் பூர்வீகம் | ... | டீன் பிரீடே | 50 |
| மலையும் மடுவும் | ... | அரு. சொக்கலிங்கம் | 53 |
| மா சே-துங் | ... | ராபர்ட் பெயின் | 59 |
| படங்கள் | ... | | 65-72 |
| உள் நாட்டுக் கலகம் ஏன் ? | ... | ஆர். ராமநாதன் | 73 |
| காதல் வழி | ... | மாப்பஸான் | 77 |
| உயர்வு நோய்—தாழ்வு நோய் | ... | சி. ந. வைத்தீஸ்வரன் | 87 |
| காஷ்மீரச் சிங்கம் | ... | ஆண்ட்ரு ராத் | 91 |
| வலியும் வனப்பும் | ... | ஜான் கிப்ஸன் | 101 |
| சாக்கடையிலிருந்து (தொடர்கதை) | ... | பி. கேசவதேவ் | 105 |
| புத்தக உலகம் | ... | கு. அ. | 116 |


அட்டைப் படம் : எம். டி. வின்ஸென்ட்

✲


சர்வசித்து

சக்தி

ஐப்பசி,
கார்த்திகை

# நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்




முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

## பாபாலால் & கம்பெனி

**கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்**

மதராஸ்

**DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.**

சர்வசித்து

மலர் 14

# சக்தி

ஐப்பசி
கார்த்திகை

இதழ் 7

மெய்ப் பொருள் காண்பது அறிவு

•

## சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள்

இந்தியா சுதந்திரம் பெற்று விட்ட போதிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வரப்பிரசாதங்களான பஞ்சம், பட்டினி போன்றவைகளால், இந்தியா இன்னும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனக்கு இந்திய மண்ணில் ஏற்பட்ட அழிவுக்குப் பழி வாங்கும் முறையில் நய வஞ்சகமாய்த் தன் விஷப் பற்களால் தீண்டியதன் விளைவாக, வகுப்புக் கலகங்கள் பேயாட்டம் போட்டன. அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சமாளிக்கும் முன்பே காஷ்மீரத்தின் மீது ஆப்பிரதி மலை ஜாதியினரின் தாக்குதல் தொடங்கிவிட்டது. காஷ்மீரத்து முஸ்லிம்களைக் காப்பாற்றவும் இஸ்லாத்தைக் காப்பாற்றவும் வந்ததாகப் பறைசாற்றிக் கொண்டு வந்த ஆப்பிரதிக் கூட்டம் எண்ணற்ற முஸ்லிம்களைக் கொன்று குவித்தது; பள்ளிவாசல்களை எல்லாம் விபசார விடுதிகளாக்கியது. இது தான் அவர்கள் இஸ்லாத்தைக் காப்பாற்றும் முறை! அந்த மலை ஜாதிக் காட்டுமிராண்டிகள் மட்டும் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கவில்லை; பாகிஸ்தான் தலைவர்களும் ஆப்பிரதிகளைப் போலவே "இஸ்லாத்துக்கு ஆபத்து" என்ற அந்தப் பழைய பல்லவியையே பாடுகிறார்கள்.

'இந்தியாவுக்கு நாடு பிடிக்கும் ஏகாதிபத்தியப் பேராசை பிடித்து விட்ட தென்றால் உலகமெங்கும் அதன் எதிரொலி கேட்கும்' என்று பொறுப்பற்ற தனமாகப்பேசிப் பூச்சாண்டி காட்டுகிறார், பொறுப்புள்ள பதவி வகிக்கும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான். ராவல்பிண்டியில் பேசும்போது, அகதிகள் மந்திரி கஜனபர் அலிகான் மிகவும் சூரத்தனமாக, 'யுத்தம் வந்தால் நாங்கள் வெள்ளைக் கொடி பிடிக்க மாட்டோம்' என்று மார்தட்டுகிறார். எல்லை மாகாணப் பிரதமரோ, ஆப்கானிஸ்தானத்தை உதவிக்கு அழைக்கிறார். பிற நாடுகளின் உதவியையும் கொண்டு, காஷ்மீரத்தில் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும் என்று துணிந்துள்ள அவர்களுடைய பகற் கனவு பாழாகும் படியாக, ஆப்பிரதிப் படைகள் தோல்விக்கு மேல் தோல்வியடைந்து ஜம்முவரைக்கும் ஓட்

டம் பிடித்து விட்டன. காஷ்மீர மக்களின் தனிப் பெருந் தலைவரும், இஸ்லாமிய மதத்தினிடம் வீகர்களைவிடக் குறையாத பக்தி கொண்டவருமான ஷேக் அப்துல்லாவின் தலைமையில் பொது மக்களின் ஆட்சி உதயமாகி விட்டது. ஆப்பிரதிப் படைகளைப் பரிபூரணமாக முறியடித்த பின்பே இந்திய யூனியனின் படைகள் காஷ்மீரத்தைவிட்டு வாபஸாகும். அதன் பிறகு காஷ்மீர மக்கள் தமக்குள் ஓட்டெடுத்து, காஷ்மீரம் இந்திய யூனியனில் சேருவதா, அல்லது பாகிஸ்தானில் சேருவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இப்போது அங்கே பாகிஸ்தானைத் திருப்திப் படுத்துவதற்கென்று ஓட்டெடுப்பதாக உத்தேசம் இல்லை. ஷேக் அப்துல்லாவின் தலைமையில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஏகோபித்து ஒன்று திரண்டு நிற்பது உலகறிந்த உண்மையாக இருக்கும் போது, அங்கே ஓட்டெடுத்து முடிவு செய்யவேண்டிய சந்தேகாஸ்பதமான விஷயம் எதுவும் இல்லையல்லவா?

இத்துடன் ஜுனகத், ஹைதராபாத் சமஸ்தானங்களால் ஏற்பட்ட இடைஞ்சல்களும் குறிப்பிடத் தகுந்தவையாகும். ஜுனகத் நவாப் கராச்சிக்கு ஓட்டமெடுத்ததுடன், தம் திவான் மூலமாகத் தம் ராஜ்யத்துக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்திய யூனியனிடம் முறையிட்டார். அதன்படி இந்திய யூனியனின் பாதுகாப்புக்குள் ஜுனகத் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்போது ஜுனகத் திவான் ஷா நவாஸ் புட்டோ, தாம் ஜுனகத்தின் கலவரங்களை நிறுத்திப் பாதுகாப்பளிக்குமாறு தான், இந்திய யூனியனின் உதவியை நாடியதாகவும், இந்திய யூனியனிடம் ராஜ்யத்தை ஒப்படைக்கவில்லை என்றும் கராச்சியிலிருந்து கொண்டே குதர்க்கவாதம் பண்ணுகிறார். ஜுனகத் நவாப், தம் சமஸ்தானத்தில் 100-க்கு 80 பேருக்கு மேலாக இந்துக்கள் இருக்கும்போது, அதைப் பாகிஸ்தானோடு சேர்க்கையில் அவர் சமஸ்தானத்துக்குப் பாதுகாப்பளிக்க, இந்திய யூனியன் ராணுவம் அவரிடம் சம்பளமா வாங்குகிறது? இதை அவர் மறந்துவிட்டார். முதலில் சொன்னதற்கு மாறாகக் குதர்க்கம் பேசும் புட்டோவின் வாதம் இனிச் செல்லாது. பாகிஸ்தான் சர்க்காரின் உபதேசத்தினால் இனி ஆயிரம் தினுசாக அவர் குதர்க்க வாதம் பண்ணினாலும் கிடைக்கக்கூடிய பலன் ஒன்றுமில்லை.

கடைசியாக உள்ள ஒரு பெரிய பிரச்னை ஹைதராபாத் தகராறு. இந்திய யூனியனில் சேரமுடியாது என்று பிடிவாதம் பிடித்து, இன்னும் வழிக்கு வராமல் இருக்கும் ஒரே சமஸ்தானம் இது. இந்திய யூனியனில் சேரவேண்டுமென்று பொதுமக்கள் செய்யும் கிளர்ச்சியை நசுக்குவதற்காக, இங்கே சர்வ சாதாரணமாகத் துப்பாக்கிப்பிரயோகம், கற்பழித்தல், சமஸ்தானத்தை விட்டு இந்துக்களைத் துரத்துதல் முதலிய அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. இந்தச் சமஸ்தானத்தில் 100-க்கு 85 பேர் இந்துக்கள் முஸ்லிம்கள், 100-க்கு 12 பேர்தான். ஆனால், இந்துக்களை வீட்டை விட்டுத் துரத்திவிட்டு அங்கே முஸ்லிம்கள் குடியேறுகிறார்களாம். குடியேறவும் முடிகிறதாம்! இப்படிச் சிறுபான்மைக் கூட்டத்துக்கும் அசுர பலத்தைத்

தந்து கப்சிப் தர்பார் நடத்தும் நிஜாம், இந்திய யூனியனுடன் சேருவது சம்பந்தமாகக் கடிதப் போக்கு வரத்தும் பேச்சு வார்த்தைகளும் நடத்தி வருகிறார். இந்தக் காரியத்தை இம் மாதம் 25-ம் தேதிக்குள்ளாக முடித்துவிட வேண்டும் என்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள் மக்களின் கோரிக்கையைப் பூர்த்திசெய்யாமல், இதே மூர்க்கத்தனமான பிடிவாதத்துடன் அடக்குமுறை ஆட்சியை நடத்திக் கொண்டு வந்தால், பிற சமஸ்தானாதிபதிகளைப் போலவே நிஜாமும் கூடிய சீக்கிரத்தில் படுதோல்வி யடைந்து, தலை பணிய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

ஹைதராபாத்திலிருந்து ஆந்திர ஜில்லாக்களில் வந்து குவியும் அகதிகள் பிரச்னையைத் தீர்ப்பதில் சென்னை சர்க்கார் மிகவும் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சமஸ்தானத்துக்குள்ளும் வெளியிலும் நிஜாம் சர்க்காரினால் பொது மக்களுக்கு மேலும் மேலும் இடைஞ்சல்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. இதே போலத்தான் பாகிஸ்தான் சர்க்காரினால் காஷ்மீர மக்களுக்கும், இந்திய யூனியனுக்கும் பல இடைஞ்சல்களும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரும்பாடு பட்டுச் சம்பாதித்த நம் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் இப்படி நாலா பக்கங்களிலிருந்தும் தொடுக்கப்பட்ட தாக்குதல்களை நாம் உடனே முறியடிக்க வேண்டும். அதற்குக் கட்சி, மதம் முதலிய வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல் எல்லோரும் ஒரே அணியில் நின்று நம் சுதந்திர சர்க்காருக்கு வேண்டிய பலத்தையும் ஆதரவையும் அளிக்க வேண்டும். இன்று வகுப்பு வெறியையோ கட்சிப் பூசல்களையோ தூண்டி விடுகிறவர்கள் தேசத்துக்குப் பெருந் துரோகம் இழைக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. அப்படிப்பட்டவர்களின் சந்தடியையும், பித்தலாட்டங்களையும் உடனே ஒடுக்கியாக வேண்டும்.

✱

## வாழ்க, பல்லாண்டு !

கடந்த பல ஆண்டுகளாக இந்தியநாட்டு மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருந்த இந் நாட்டின் ஒப்பற்ற தவப்புதல்வர் பண்டித நேரு, இன்று இதய சிம்மாசனத்திலும், ராஜ சிம்மாசனத்திலும், உலகின் நாற்கோணங்களிலும் உள்ள 'தகவுடையார் சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்'கிறார். இந்த மகா புருஷர் உலகிலுள்ள சுதந்திரப் பிரியர்களுக்கெல்லாம் அசையாத நம்பிக்கையாகத் திகழ்கிறார்; இந்திய நாட்டுக்கு அதன் மூலம் நாளும், பெருமை தேடி அளித்து வருகிறார். அவருடைய 58-வது பிறந்த நாள் வைபவத்தை நவம்பர் 14-ம் தேதியன்று, உலகின் பல பகுதிகளிலும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். அவர் இன்னும் எண்ணற்ற வருஷங்கள் வாழ்ந்து நமக்குத் தலைமை தாங்கி சுக வாழ்வும், சுபிட்சமும் நல்கும் முன்னேற்றப் பாதையில் நம்மை நடத்திச்செல்ல வேண்டுமென்று, பல்லாண்டு பாடி வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர் : சக்தி




# கிழவி

"இலக்கிய மாணவன்"

கலையுதிர்த்த மதி வானில் கரந்து நிற்க,
　　கடுவெயிலும் சோர்வுற்றுக் களைப்பில் தூங்க,
உலைகொதிக்கும் வெப்பத்தைப் பசுங்கரத்தால்
　　உயிர்த்தென்றல் மெய்வருடித் தணித்துச்செல்ல,
அலையலையாய் நடந்துவரும் மனிதவெள்ளம்
　　அணிவிதி வழியோடித் திருப்பம் சுற்றி
தலைத்தெருவில் ஒன்றாகிச் சுழித்தோர் சந்தில்
　　தனித்தேகும் சதுக்கத்தின் புறத்தில், ஆங்கே　　1

இலையுதிர்த்து, இளம்பருவப் பசுமை தன்னை
　　இழந்திட்ட புளியமர நிழற் கீழே
தலைநரைத்த முதுகிழவி, கவனம் தப்பி
　　தன் நினைவை மனித வெள்ளத் திடையே பாய்ச்சி,
வலைவிரித்து லட்சியத்தைப் பிடிக்க எண்ணும்
　　மனிதனைப் போல், மலைத்தெங்கோ எதையோ தேட,
சிலைநிகர்த்துக் கண்ணிரண்டும் இமைத்தல் செய்யாள்;
　　சிறுவர் தரும் காசுக்குப் பழமும் விற்பாள்.　　2

குழிந்து துயர்க்குட்டையிலே மிதக்கும் கண்மேல்
　　குனிந்திட்ட விற்புருவம் குடையாய்த் தொங்கும்;
கழிந்தழிந்த நினைவுசென்ற சுவடுகாட்டிக்
　　காலத்தைக் கணக்குரைக்கும் வளைந்தகோடு,
இழந்தபொருள், அவமானம்—இவற்றிற்காக
　　ஏங்கிநின்ற நாட்களையே நினைவுகூறும்;
தெளிந்து செலும் வரிகளெல்லாம் துயரரேகை!
　　நினைவுக்கோர் வரிவடிவம் கிடைத்த விந்தை!　　3

வேலையிலும், தனிமையிலும், உணவு கொள்ளும்
　　வேளையிலும் மனக்கண்முன் வந்துவந்து
பாலென்னும் இதமொழிகள் பலவும் பேசி
　　பழம்நாட்கள் நினைவுதரும் பருவத்தோழன்
தாலிகட்டிக் கைபிடித்த புதுமைக்கோலம்
　　தான்வந்து தோன்றிடினும் அசையாள்; இன்று,
மூலமென வாழ்விற்கு வாய்த்த, அன்னோன்
　　முடிந்த கதை சொன்னாலும் பொருளொன்றில்லை!　　4

பவனிவரும் காதலரைக் கண்ணில் கண்டாள் ;
பாலர்களின் சிரிப்பொலியைக் காதில் கேட்டாள் ;
சிவனென்றும் அரியென்றும் சிலையைத் தாங்கித்
தெருவில் கும்பனுக்குக் கல்லாய்ப் போனாள் !
அவனியிலே அவள்கண்ட காட்சியாவும்
அர்த்தமற்றுப் பொய்க்கனவாய் அழிந்துபோகக்
கவனமெலாம் வேறெங்கோ லயித்தே நின்றாள் ;
கருத்தினிலே அவள்தேட்டம் யாரேகண்டார்? 5

உலகத்து வாழ்வதனைச் சுவைத்துப் பார்த்து,
ஒன்றிலுமே சுவைகாணா தொதுக்கித்தள்ளும்
பலகலையைக் கற்றுணர்ந்த அறிஞன் என்ன
பகல் இரவும் முயற்சிதனில் சலித்தல் இன்றி,
நிலவுலகின் பொருளையெலாம் கூர்ந்துநோக்கி
நித்தியத்தின் உண்மைதனைக் காண எண்ணி,
நிலையாத முதுவாழ்வில் பலவும் தேடி,
நினைவுலகில் உழலுகின்ற நரை, மூதாட்டி, 6

அந்தியிலே மனைதேடித் திரும்பும் மாட்டின்
அசைந்தாடும் மணியினிலும், மாந்தர்கூடும்
சந்தையொலி முழக்கினிலும், வீணை மீது
சஞ்சரிக்கும் இசையினிலும், ஒன்றே கேட்பாள் !
விந்தையைப்போல் குரலொன்றாய்ப் பொருளும் ஒன்றாய்
விளங்குகின்ற அப்பொருளை, விண்ணில், மண்ணில்
கந்தை மனச்சிலையினில், கனவில், இந்த
கண்ணவித்த முதுமையினில், துயரில் காண்பாள் ! 7



ஏழைப்பெண்ணுக்கும் கூட விபசாரி என்றால் பயம்; அவமானம். ஆனால் அந்த யுவதிக்கு...?

# நடுத்தெருவில் நாட்டியம்

மஞ்சேரி ஈச்வரன்

அந்தச் சாலையின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது, ஹில்மான் மின்க்ஸ் கார். அப்போது அங்கே ரிப்பேர் நடந்துகொண்டிருந்தது. நகரத்திலேயே அது மிகவும் ஜனசந்தடியான இடம். வியாபாரஸ்தலங்களெல்லாம் அங்கேதான் இருக்கின்றன. குடியிருக்க வீடில்லாத ஏழை ஜனங்கள் சாலையின் ஓரத்தில் உள்ள மேடான நடைபாதையில் சமையல் பண்ணிச் சாப்பிடுவார்கள்; அங்கேதான் துணி மணிகளைத் துவைத்துவிட்டு, வாளியிலுள்ள அழுக்குத் தண்ணீரைக் கொட்டுவார்கள். குப்பை கூளங்களையும் சாணியையும் அங்கேயே கூட்டி ஒதுக்கிக் குவித்து வைப்பார்கள். இதனால் அந்த நடைபாதையெங்கும் உடைப்புக்களும், குப்பை கூளங்களுமாக இருந்தன. இந்த இடத்திற்குச் சிறிது தூரம் தள்ளி, ஒரு எஞ்சின் சிமிட்டியையும் சாந்தையும் கலந்து குழைத்துக் கொண்டிருந்தது. அடுத்த நாள், அந்த எஞ்சின் அங்கே வரும் என்றும், அதனால் அங்குள்ள ஓட்டாண்டிகள் எல்லாம் தங்கள் ஜாகையைப் பெயர்த்து, சற்றுத் தூரத் தள்ளிப் போய் முகாம் போடவேண்டும் என்றும் சொல்லி எச்சரிப்பதுபோல இருந்தது அந்த எஞ்சினுடைய சப்தம். ஏற்கெனவே ரிப்பேர் செய்யப்பட்டிருந்த இடத்தில் புதிதாகப் போடப்பட்ட காங்க்ரீட் இறுகுவதற்காக ரப்பர் குழாய் வழியாகப் பாய்ச்சப்பட்ட தண்ணீர் அங்கே சிறு சிறு குட்டைகளாகக் கட்டிக் கிடந்தது. அந்தக் குட்டைகள்தான் கொசுக்களுக்குத் தற்காலிகமான ஊட்டுப் புரைகள்!

கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் விலைக்கு வாங்கி வந்தது போல அவ்வளவு புத்தம் புதிதாக இருந்தது, ஹில்மான் கார். காரின் மேல் பூசப்பட்டிருந்த நீல நிற இனாமல் வர்ணத்துக்கு வானையும் கடலையும் உவமை கூறலாம்போல் இருந்தது. அழகு ரசனையில் பண்பட்ட கண்களுக்கு அது அழகினும் மேம்பட்ட ஒன்றாகத் தோற்றமளித்தது. அதிலிருந்த வளைவு கோடுகள் அலை எறிந்த வண்ணம் பரிபூரணத்துவத்தை எட்ட முனைந்தன. ஆனால் சுற்றுப் புறத்திலிருந்த மோசமான ஸ்திதியினின்றும் முழுக்க முழுக்க மாறுபட்டுத் தோற்றமளிக்கும் இந்தக் காரைக் காணும்போது, மானிட வர்க்கத்தின் இளம் பிராயத்தில் மனிதர்கள் நாகரிகக் குட்டை ஊறிக் கிடந்ததன் பலனாக தம் சரீர வனப்புக்களை எல்லாம் இழந்துவிட, அந்த வனப்புக்கள் யாவும் அதியற்புதப்போல உயிரற்ற வஸ்துக்களில் பரிபூரணமாகப் போய்க் குடியேறிக் கொண்டது மாதிரித் தோன்றியது.

அப்போது நேரம், பிற்பகல். மேகப் படலங்கள் சூரியனை ஏகதேசமாக மறைத்துக்கொண்டிருந்ததால் சூரியன் மங்கலாகத் தோன்றினான். காரின் பின் புறமானது, தொங்க விடப்பட்ட நிலைக் கண்ணாடிபோல, பள பள

வென்று மின்னியது. அந்தப் பக்கமாக ஒரு சிறு பெண் வந்து அந்தக் 'கண்ணாடி'க்கு முன்னால் நின்றாள். அவளுக்கு ஒன்பது அல்லது பத்து வயது இருக்கும். மா நிறமான ஒற்றை நாடி உடல் கட்டு. முகத்திலே அளவு கடந்த ஜீவத் துடி துடிப்பு நிறைந்திருந்ததை எடுத்துக் காட்டுவது போல, அவளுடைய நாசித் துவாரங்கள் பெரிது பெரிதாக இருந்ததுடன், அங்கே கார் வந்து நிற்கும் இந்த அசாதாரணமான சம்பவத்தின் காரிய காரணங்களைத் துருவி ஆராய்வதுபோல தன் கண்களையும் அகல விழித்துப் பார்த்தாள் அந்தப் பெண். தலையில் பொட்டல் விழுந்திருந்தாலும் கூட, அவளுடைய தலைமயிர் காக்கைச் சிறகுபோல கன்னங் கரேல் என்றிருந்தது. அப்போது அவள் தலையில் எண்ணெய் தேய்த்துப் படியப் படிய வாரிவிட்டுக்கொண்டு வந்திருந்தாள். ஆகவே, அவளுடைய கூந்தல் பள பளவென்று மின்னியது. பின் புறமாகத் தொங்கும் சடை, நாய் வாலைப்போல வளைந்திருந்தது. இடுப்பு வரைக்கும் அவளுடைய கன்னங் கரேலென்றிருக்கும் மேல் தோல்தான் அவளுக்கு உடை. இடுப்பில் கந்தையாய்ப்போன பழைய சேலைத் துணியை உடுத்தியிருந்தாள். இனிமேல் அழுக்குப் படிவதற்கோ, தையல் போடுவதற்கோ, இடம் வைக்காத கடைசி கட்டத்தை அடைந்திருந்த முண்டு அது. கழுத்தைச் சுற்றி இறுக்கமாக சிவப்புப் பாசியைக் கோத்துக் போட்டுக்கொண்டிருந்தாள்; கையிலே கண்ணாடி வளையல்.

கண்ணாடிபோல் பளபளக்கும் காரின் பின் பக்கத்தில் தன் உருவம் பிரதிபலிப்பதைக் கண்டதும் அந்தப் பெண்ணுக்கும், ஒட்டி மெலிந்து ஆபாசமாக இருந்த அந்தப் பெண்ணுக்கும், குஷி பிறந்து விட்டது. உடனே நாட்டிய மாடத் தொடங்கிவிட்டாள். லாகவமாகவும், 'பளிச் பளிச்' என்றும் முன்னும் பின்னும் போவதும், ஒரு தடவை இடுப்பிலே கரங்களை வைத்தும், மற்றொரு தடவை உள்ளங் கைகளைக் குவித்த வண்ணமுமாக ஆடிக் கொண்டிருந்தாள். தலையை அசைப்பாள்; கண்களைச் சுழற்றுவாள். அப்புறம் அடி எடுத்தூன்றி ஒரு கணம் சாவதானமாக ஆடுவாள்; ஒரு கணம் தயங்கி அப்படியே நிற்பாள். பிறகு குனிந்து நிமிர்வதும், பறப்பதைப் போல தரையில் கால் படாது நகருவதும், விறு விறு வென்று சுற்றிச் சுழன்று வருவதுமாக இருக்கும் போதே இடை இடையே ஏக தேசமாகத்தன் முகத்தைக் காரில் பார்த்து விட்டுப் புன்னகை செய்வாள். அப்புறம் மட்டுக்கு மீறிக் குதூகலிப்பாள். 'கண்ணாடி'யைப் பார்த்துப் புன்னகை செய்யும்போது, முன்னால், பொங்கலன்று கடைவீதியில் அரிதாரம் போட்டு மினுக்கிக் கொண்டு அலிகள் நாட்டிய மாடியதைப் பார்த்தது கூட அவளுக்கு ஞாபகத்துக்கு வந்திருக்கலாம். இந்திர லோகமாகத் தோற்றும் நாட்டிய அரங்கிலே வித விதமாக வர்ண ஜாலங்கள் புரியும் விளக்கொளியில், தேவ கானமாகக் காதில் விழும் பின்னணி வாத்தியங்களின் கீத ஒலியைக் கேட்டு ஆடும் எந்த ஒரு மேல் நாட்டு நாட்டியக் காரியுங்கூட இவ்வளவு அனாயாசமாகச் சுழன்று ஆடியிருக்க மாட்டாள். கோவிலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் தெய்வங்களின் சிலை

களுக்கு முன்பாக நாட்டிய மாடும் ஒரு தேவதாசியும் கூட சாக்கடையில் பிறந்து வளர்ந்த இந்தக் குழந்தையைப் போல் இவ்வளவு அலட்சிய பாவத்துடன் ஆடியிருக்க முடியுமா? ஆடினாள். அவளுடைய நாட்டியத்தை அந்தச் சாலை தான் போக்கு வரத்து யந்திரங்களின் இரைச்சல்தான் அவள் நாட்டியத்துக்குப் பின்னணிக் கீதம்! மேலும் மேலும் ஆடிக் கொண்டிருந்தாள். அவளுடைய உல்லாசமும் ஒய்யாரமும் குறையவே இல்லை. அவளுடைய கண் பார்வை காரின் முதுகுப் புறத்திலே பதிந்திருந்தது.

திடீரென்று போக்கு வரத்துச் சாதனங்களின் இரைச்சலை ஊடுருவிக்கொண்டு ஓர் உரத்த குரல் கேட்டது.

"அன்னக் கிளி! அன்னக் கிளி!!"

இதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ஜதி மிதித்துக் கொண்டு, அபிநய பாவங்களுடன் ஆடிக் கொண்டிருந்தாள் சிறுமி.

மறுபடியும் அந்தக் குரல் இரைந்து அலறியது.

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தாள். அப்படிக் கூக்குரலிட்டு அவளை அழைத்தது அவளுடைய தாய்தான். அவள், அருகாமையிலேயே ஒரு சில கெஜ தூரத்துக் கப்பரல் நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கமாக ஓர் அடுப்பு புகைந்துகொண்டிருந்தது; அதில் ஒரு பழைய மண் பானை. தன்னுடைய தாயாருக்குக் கோபம் வந்து விட்டது என்பதை அறிந்து கொண்டாள் சிறுமி. அடுப்பு புகைந்துக் கொண்டிருந்ததைப் பார்த்த மாத்திரத்தில், கஞ்சி காய்ச்சுவதற்காக அரிசியை எடுத்து வைத்ததும், அதைக் கொதிக்கவைக்க இரண்டொரு சருகுகளும், சுள்ளிகளும் வேண்டியிருந்ததும் அவளுக்கு ஞாபகத்துக்கு வந்து விட்டன.

"நீ விறகு பொறுக்கி வருகிற லட்சணமா இது?" என்று உரத்த குரலில் கேட்டாள் தன் குழந்தையின் ஆட்டபாட்டங்களைப் பார்த்துக் கொண்ட தாய். "வாடி இங்கே, தேவடியாச் சிறுக்கி. உன் முதுகுத் தோலை உரிச்சிப் போடறேன். நாட்டிய மாடி தேவடியாளாகப் பார்க்கிறியா? எண்ணைக்காவது ஒரு நாள் நீ ஊர்மேலே போகத்தாண்டி போறே" என்று சீறினாள்.

சிறுமி தலையைக் குனிந்து கொண்டு அங்கேயே தயங்கி நின்றாள். தாயார் அடித்து விடுவாளே என்று பயம். அந்தச் சந்தர்ப்பத்தில் சினிமாக்காரி போல நவ நாகரிகமாக உடை உடுத்திக் கொண்டு ஓர் இளம் பெண் கையில் சில பொட்டலங்களுடனும், வெறும் டம்பத்துக்காக எடுத்துச் செல்லும் ஒரு பையுடனும் வந்தாள். வந்து காரில் ஏறிக்கொள்ளுவதற்கு முன், அந்தப் பெண் தன் மகளை மிகவும் கேவலமாகத் திட்டிக்கொண் டிருப்பதைப் பார்த்துக் கொஞ்ச நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். அப்புறம் 'பட்'டென்று காரில் ஏறிக்கொண்டு கதவைப் 'படார்' என்று இழுத்துச் சாத்தினாள். கார் வேகமாகப் பறந்து சென்றது.

சிறுமியின் மனக் கோட்டை தகர்ந்து விழுந்தது. யாதொரு மாறுதலுமற்று தினசரியும் ஒரே மாதிரியாக இருந்துவரும் நடைமுறை வாழ்க்கையில் பழையபடியும் ஆழ்ந்துவிட்டாள் சிறுமி.


Divali Greetings
உங்கள்
எல்லோருக்கும்
எங்கள்
தீபாவளி
வாழ்த்துக்கள்
வெஸ்ட் எண்ட்
வாட்ச் கோ.,
பம்பாய்-கல்கத்தா
மினியேசர் "O"
செகண்டஸ் நியூ காலிபர்டோனே
WEST END WATCH CO.
BOMBAY • CALCUTTA

# இந்த ஸோப்உங்கள் அஜீரணத்தைக் குணப்படுத்தாது!



காந்தி ஸோப் உங்கள் சருமத்தை வழவழப்பான வெல்வெட்டாக மாற்றி விடு மென்றுவது, காதலுக்குக் காரணமாகு மென்றுவது நாங்கள் உறிதி மொழி கூற வில்லே. இவ்வித குணங்கள் உண்டென்று சொல்லிக் கொண்டோமானுல் அடுத்த படியாக காந்தி ஸோப் அஜீரணத்தைப் போக்க வல்லது என்று கூடச் சொல்ல வேண்டியிருக்கும்.

**ஆனுல் காந்தி ஸோப்**

- ஓர் உயர்தர ஸ்தான ஸோப் என்றும்
- அது அழுக்கை நன்ருகப்போக்கடிக்கும் என்றும்
- அது மிருதுவான சருமத்துக்கும் எரிச்சலேயாவது கெடுதலேயாவது உண்டாக்காது என்றும்
- திருப்தி அடையும்படியான அளவுள்ள வாசனே யுடையதென்றும் உறுதியாய் சொல்லுவோம். நீங்கள் இதை உபயோகிக்க பிரயத்னப்படு கிறீர்களா ?

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் சீகைக்காய் சோப், பரிமள ஆமணக்கெண்ணே, ஸ்வஸ்திக் க்ஷவர ஸோப், சல வை ஸோப்புகள் கோவாலின் மார்க் வனஸ்பதி முதலியன.



## காந்தி ஸோப்

SHILPI

Som. 17—Tamil

**ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.**




ஜகம்

“வாழ்க்கை நாடகங்களில் பாதிக்குமேல் பஸ்களில் நடக்கின்றன என்பது எனது முடிவான அபிப்பிராயம்” என்று சொல்லிக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தேன். யோசித்துப் பார்த்தால் அர்த்த மற்ற வாக்கியம். ஆனால், அன்று மட்டும் அது ஏதோ ஆழ்ந்த உண்மைபோல் தோன்றியது.

“வாஸ்தவம்தான். அப்படியில்லாவிடில் நம்போல் கதை எழுதிப் பிழைப்பவர்கள் பாடு என்ன ஆவது?” என்று ஆமோதித்தான் என் நண்பன்.

கொஞ்ச நேரம் கழித்து, சம்பந்தமில்லாமல், “கார்கள் வைத்துக்கொண் டிருப்பவர்கள் நல்ல கதைகள் எழுதுபவர்களாக இல்லையே—ஒரு வேளை பஸ் அனுபவம் இல்லாததினாலோ?” என்றான்.

அவன் ஹாஸ்யம் எனக்கு ரஸிக்கவில்லை. ஏனோ எனக்கு அன்று தனி யோசனை. அன்று பஸ்ஸில் நடந்ததைக் கேவலம் ஒரு விகடமாக்குவது என் மனதிற்கு விரஸமாகப்பட்டது. மற்றொரு சமயமாக இருந்திருந்தால் வாய்விட்டுச் சிரித்திருப்பேன். வாஸ்தவத்தில் அவன் சொன்னதில் ஆழ்ந்த ஹாஸ்யம் இருந்தது. உயர்ந்த ஹாஸ்யத்திற்கே தனிச் சொந்தமான உண்மையும் இருந்தது. ஆனால், அன்று அது எனக்குப் பிடிக்கவில்லை.

* * *

அப்படி ஒன்றும் பிரமாதமானது நடந்துவிடவில்லை. சாயந்திரம் மூன்று மணியிருக்கும். திருவல்லிக்கேணி பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். அதிகக் கூட்டமுமில்லை. ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தேன். வண்டியும் சீக்கிரம் புறப்பட்டது. வண்டியின் ஆட்டம் அதிகரிக்கவே புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு, வேடிக்கை பார்க்கத் தொடங்கினேன். சந்தை இரைச்சல், குழந்தைகளின் ஓலம், டிராமின் கர்ணகடூரம், ஜீவனற்ற நமது நாகரிகத்தின் உருவேயான மோட்டார் கார்களின் முனகல் எல்லாம்

---

பிறருக்காக இரக்கப்படுவது பெரும்பாலானவர்களுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுகானுபவமாகப் போய்விடுகிறது. இது விசித்திரமான ஒரு மனோதத்துவ உண்மை. இதைச் சித்தரிக்கும் இக் கதையில் வரும் கதாநாயகனுக்கு, அந்தப் பெண் விதவையாக இல்லாது போய்விடவே பாவம், எவ்வளவு சங்கடம்!

வழக்கமான சஞ்சலத்தை அதிகப் படுத்தின.

"பி. பி. (B. B - பார்பர்ஸ் பிரிட்ஜ்) யாராவது இறங்குகிறீர்களா?" என்ற சப்தம் கேட்டுக் கண்களைத் திருப்பினேன். வண்டியும் நின்றது. வண்டியில் ஐந்தாறு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பல காலேஜ் மாணவிகள் வண்டியில் ஏறினார்கள். கைகளுக்குள் அடங்காத ஒரு புஸ்தக மூட்டை. இங்கிலிஷ் பாஷையின்மீது ஏதோ துவேஷம் கொண்டவர்கள் போல், அதை ஹதம் செய்துகொண்டே வண்டியில் ஏறினார்கள். வண்டியும் நகர்ந்தது.

கல்யாணி ஆஸ்பத்திரி வாசலில் பஸ் நின்றது. ஓர் இளம் மாது ஒரு சிறு குழந்தையுடன் வண்டியில் ஏறினாள். வண்டியும் நகர்ந்தது. என் மனதும் வேலை செய்ய ஆரம்பித்தது.

துடைத்து விட்டதுபோல் முகம். தனிச் சோபை. அடக்கமும் ஒளியும், வணக்கமற்ற என் மனத்தையும் ஒடுக்கின. சிறுபிள்ளைத்தனமாகக் காலேஜ் மாணவிகளின் வம்பை ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த மனம் வெட்கிற்று. என்னை யறியாமலே தலையைத் திருப்பிக்கொண்டேன்.

மனதில் புதிய சிந்தாதரங்கங்கள் மோதின. அர்த்தமற்ற குருட்டு யோசனைகள். அந்தக் குழந்தை, கல்யாணி ஆஸ்பத்திரி, அந்த மாது, இவையெல்லாம் நான் அறியாத ஒரு கயிற்றினால் பிணைக்கப்பட்டதாகத் தோன்றியது என் மனத்திற்கு. அப்படி நினைப்பதற்குக் காரணமேயில்லை. குழந்தை அப்படி ஒன்றும் சிறிய குழந்தை இல்லை. ஐந்தாறு வயதிருக்கும். ஆனால், ஏனோ என்னை அறியாமல் என் மனம், இம்மூன்றையும் பிணைத்தது. குழந்தை, தாயார், புனிதமான மாத்ருத்வம் இவையெல்லாம் அர்த்தமற்ற சிதறின நிலையில் என் மனதில் கிடந்தன. மனத்தின் போக்கு மிகவும் விசித்திரமானது. அதிலும் வேகமாக ஓடும் ஒரு வண்டியில், மனம் தன் பாட்டில் சஞ்சரிக்க ஆரம்பித்துவிடும். ஒரு எண்ணத்திற்கும் (அது எண்ணமா என்பதே சந்தேகம், பார்க்கப் போனால் உணர்ச்சியாக இருக்கும்) மற்றென்றிற்கும் விவரிக்க முடியாத சம்பந்தம்தான் இருக்கும்.

"அழகிய இளம்மாது, குழந்தை, ஆப்பரேஷன் மேஜை, மாத்ருத்வம், நர்ஸ், நர்ஸுக்காக வாசலில் காத்திருக்கும் ஆங்கிலோ - இந்தியன், அவள் சிநேகிதன் (எம். எஸ்.எம். ரயில்வேயில் வேலையில் இருப்பவன் போலும். மாதம் 200 ரூபாய் சம்பளம் இருக்குமோ?......)"

பிரக்ஞா வாரிதியின் விபரீதப் போக்கை மடக்கி மறுபடியும் அந்தப் பெண்மணியைப் பற்றின யோசனையின்மேல் செலுத்தினேன்.

"மாது,...(பெயர் என்னவோ? ராதிகா...அழகான பெயர்கள் பெண்களுக்கு நம் நாட்டில்தான் வைக்கிறார்கள்....ராதிகா....ராதா எல்லாம் நல்ல பெயர்கள்.)...... அந்தக் குழந்தை...ஆஸ்பத்திரி... (திரும்பித் திரும்பி அதே சுழலில் மனம் அலைந்தது) குழந்தை... குழந்தை... எர்கட்...டாக்டர் ரங்காச்சாரி...ஜெனரல் ஹாஸ்பிடல்...இப்ஸ்டைன் (Epstein) ஜெனிஸிஸ் (Genesis)...!..."

கிளையிலிருந்து கிளைக்குத் தாவும் குரங்குபோல் ஓடிய மனதைக் கட்டிப்பிடித்து இழுத்து

வந்தேன். மனதை இம் மாதிரி கட்டிப் பிடிக்க வேண்டியிருப் பதை நினைக்க நினைக்க விக்கிரமாதித்தியன் கதையில் வரும் வேதாளத்தின் ஞாபகம் வந்தது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். என்னை அறியாமல் என் மனம் அவளுக்காகப் பரிதாபப்பட்டது. காரணம் என்னவோ?...மறுபடியும் "ஆஸ்பத்திரி...(அதை விடாதே!) பிரஸவ வேதனை...சிருஷ்டி சோகம்...அனாதை ஆஸ்பத்திரி... சோகம்...சோகம், மஹா சோகம்..."

"ஓ! என்ன பைத்தியக்காரத்தனம்! யாரென்றுகூடத் தெரியாது நமக்கு! அர்த்தமற்ற நமது மனோ விகாரச் சித்திரத்தின் மூல பாத்திரமாக அவளை வரிப்பது பைத்தியக்காரத்தனம்." ஆனால், என் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருந்தது.

வண்டி லஸ் வந்து சேர்ந்தது. அநேகர் கீழே இறங்கினர். பள்ளி மாணவிகளின் கூட்டமும் கூச்சலும் குறைந்தன. பஸ்ஸில் இடத்திற்குச் சண்டை பலமாக ஆரம்பித்தது. எல்லாச் சண்டைகளிலும்போல், இதிலும் பலமுள்ளவன்தான் ராஜா. குழந்தைகள், தாயார்கள், கிழவர்கள் எல்லோரும் மற்றவர்களுடன் சமமாகத்தான் இடத்திற்குப் போர் புரிய வேண்டும். பழைய நாட்களைப் போல, பெண்களுக்காக (அதாவது, காலேஜ் மாணவிகளுக்காக) இடம் விட்டு ஒதுங்கும் வழக்கம் மறைந்து அதிக நாட்கள் ஆகிவிட்டன. சிறிது நேரத்தில் வண்டியும் நிரம்பிவிட்டது.

திடீரென்று, தன்னறியாத ஒரு மனத் தூண்டுதலின் விளைவாக அந்தப் பெண்மணியை



உற்றுப் பார்த்தேன். ஒரு வினாடி தான். ஹா!...அந்த ஒரு வினாடியில் என் சந்தேகங்கள் ஓடி மறைந்தன. வண்டியும் நகர்ந்தது.

முதலில் அவள் வண்டியில் ஏறியபோது பார்த்தேனே, அவ்வளவுதான். . அதற்குப் பிறகு, இப்பொழுதுதான் அவளைக் கவனித்து நோக்கினேன். இந்த ஒரு வினாடியில் தான் என் சந்தேகங்கள் தெளிந்தன. களங்கமற்ற அந்த முகத்தில் மங்களமான குங்கும களங்கத்தைக் காணவில்லை!

"ஹா! இப்பொழுது புரிகிறது என் எண்ணங்களெல்லாம்! எனக்கு முதலிலேயே தெரியும். இதய ஆழத்திலிருந்து பொங்கி வரும் பாவ ஊற்றுகள் பொய் ஆகுமா? என்னுடைய 'டயக்னேஸிஸ்' சரியானதுதான்...... திலகமிழந்த பெண்ணைவிட மஹா சோகம் உலகத்தில் இருக்கிறதா...?"

மறுபடியும் மனம் வேலை செய்ய ஆரம்பித்தது..."என்ன கஷ்டம். ஆறு வயது குழந்தையுடன் என்னவெல்லாம் அனுபவிக்கிருளோ?..." என் மனம் ஒரு நாடகம் ஜோடிக்க ஆரம்பித்துவிட்டது.......மாம்பலத்தில் ஒரு ஒண்டிக் குடி....ஸரோஜினித் தெருவோ? பத்து ரூபாய் வாடகை. இரண்டு அறைகள், ஒரு சமையலறை...லைட் சார்ஜ் தனி..."

"பக்கத்து வீட்டுக்காரர்கள் நல்லவர்களோ?... அல்லது வம்பாளிகளோ... (கஷ்ட ஜீவனம்! பாவம்! அவ பிள்ளை இருக்கே, இரண்டுங்கெட்டான்...பௌண்டன் பேனு வாங்கிக் கொடுன்னு அவ கழுத்தை அறுக்கிறது. பேனுவுக்கு அவள் எங்கே போவாள்?... அதுக்கு நினைவு தெரிஞ்சாத்தானே...)"

மறுபடியும் மனோராஜ்யத்தின் விபரீத சஞ்சாரம், ஸாரதியற்ற ரதத்தைப் போல. வண்டியும் போய்க்கொண்டிருந்தது.

ஆள்வார்பேட்டை பஸ் ஸ்டாண்டில் சிலர் கீழே இறங்கினர். ஒரு வயது சென்ற மாது வண்டியில் ஏறினாள். பணக்களை முகத்தில் ஜ்வலித்தது. புதுப் பணக்களையல்ல—கனிந்த பிரபுத்துவம். சிகப்புப் பட்டுப் புடவை, பசு மஞ்சளில் மிருதுத்வம் பெற்ற அகல நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. முதிர்ச்சியின் தனி அழகு தன்னினைவற்ற நடையில் பிரதிபலித்தது. வண்டி புறப்பட்டது.

திடீரென்று, அந்தப் பாட்டியின் பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பினேன்.

"எண்டி செல்லம்மா! எங்கேயிருந்து வரே?... கவனிக்கவேயில்லை உன்னை, இந்தக் கூட்டத்திலே"...

"ஓ, ராதைப் பாட்டியா?... என் மச்சினி யாத்திலிருந்து வரேன்...எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டிலே இருக்காளே...உங்களுக்குத் தெரியுமே...ஆமாம்! நீங்க எங்கேயிருந்து வரேள்?"

"இங்கே தான் மோப்ரேஸ் ரோட்டுக்கு வந்துட்டுப் போறேன்......கொஞ்சம் இடம் விடு. பக்கத்தில் உட்கார்ந்துக்கிறேன்."

என் மனதில் ஒரு சூருவளி. அவர்கள் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருப்பது விதியின் இரக்க மற்ற விளையாட்டாகத் தோன்றியது. இதைவிட அவர்

களுடைய பெயர்கள் என்னைச் சங்கடப்படுத்தின. இந்தப் பாட்டிக்கு மட்டும் எவ்வளவு அழகான பெயர்......உண்மையைச் சொல்லப் போனால், இந்த யோசனையை விட, அந்த முக்கியமில்லாத அசட்டு எண்ணமே என்னை அதிகமாக வாட்டியது. மன அலைகளை அடுக்க முயன்றேன்...சம்பாஷணையைக் கவனிக்கவில்லை. யோசனையிலிருந்து கிளம்பிப் பேச்சைக் கேட்க முயன்ற போது, செல்லம்மாவின் கடைசி வார்த்தைகள்தான் காதில் விழுந்தன.

"......அழிஞ்சு போயிட்டது மாமி......இட்டுண்டு தான் இருந்தேன். வெய்யிலில் பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தேன்."

"நன்னு அழிஞ்சு போச்சு. எனக்கு அழிஞ்சு போறது தானே......?"

தெய்வச் செயலாக நான் இறங்க வேண்டிய இடம் நெருங்கிற்று! சிதறின மனோராஜ்யங்களைச் சேகரித்துக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினேன். பஸ் தன்பாட்டில் போய்க் கொண்டிருந்தது.

* * *

அகமனதில் சிதறிக்கிடந்த சில பாவ விகாரங்களைச் சேகரித்து ஓர் உண்மையற்ற சித்திரம் ஜோடித்து விட்டேன். என் சாதாரண மனோபாவத்திற்கும், உலக நோக்கிற்கும் ஏற்றவாறு அது ஸ்வயம்புவாகவே ஒருசோக சித்திரமாகி விட்டது...... "ஆ! என்ன அழகான சித்திரங்கள்... அவள் சுமங்கலி தானே......! அது ஏன் என்னைச் சந்தோஷப்படுத்தவில்லை? அவளுடைய வைதவ்யத்தையா விரும்புகிறேன்? சீ! சீ!! என்ன கேவலமான எண்ணம்? (இது எந்தத் தெரு?......ராஜாத் தெருவா?..., சரி.)......என்ன கேவலமான எண்ணம்.......ஆனால்......ஆனால் ...அப்படியிருந்தால்...எவ்வளவு 'அழகாக' இருக்கும்?...நன்கு செதுக்கப்பட்ட சோக நாடகம். திலகமிழந்த ஒரு பெண். அவளது மகா சோகத்தைக் கவனிக்காத ஒரு உலகம் தன் வேக வெறியில் சுழலுகிறது..........சினிமாவாக இருந்தால், வேகமாக, ஒரு தொழிற்சாலையிலுள்ள அசுர யந்திரம், களையிழந்த ஒரு பெண் வடிவம்—இவை இரண்டையும் மாற்றி மாற்றிக் காட்டலாம். அழியாச் சித்திரம்! சாசுவத உருவம்! என்னே அதன் சிறப்பு! ......(இதோ வீடு வந்து விட்டது ......வாசலில் ராமு நிற்கிறான்). ......வாழ்க்கை என் இலக்கியத்தைப்போல 'அழகாக' இல்லை...? எத்தனை கோணல்கள்! எத்தனை பரிமாணத் தவறுகள்!'

* * *

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு ஆழ்ந்த யோசனை?"

"வாழ்க்கை நாடகங்களில் பாதிக்கு மேல் பஸ்களில் தான் நடக்கின்றன என்பது எனது முடிவான அபிப்பிராயம்."

"வாஸ்தவம்தான். அப்படியில்லா விட்டால், நம் போல் கதை எழுதிப் பிழைப்பவர்கள் பாடு......"

கல்யாணமானவர்களுக்கு இயற்கை அளித்துள்ள ஒரே வரப்பிரசாதம், கொட்டாவி.

—நிபர்னிங் கொஷ்டின்.

# வாயில் ஊறும் துர்நீர் சரீர சுகத்தைக் கெடுக்கிறது

சரீர தத்துவ சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள திராவக நீர்கள் சரீரத்தில் தேவைக்கு அதிகமில்லாது சமனப் படுத்தக்கூடிய "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னிஷியா", "பிலிப்ஸ் டூத் பேஸ்டில்" 75 சத விகிதம் கலந்திருக்கிறது. அதனால்தான் பிலிப்ஸ் டூத் பேஸ்ட் நாசத்தைத் தடுத்து பூரணப்பாதுக்காப்பளிக்கிறது






நாசத்தைத் தடுப்பது
பிலிப்ஸின் குணம்

No. 2



# இந்தியாவின் மிகப் பிரபல ஔஷதம்

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்




வலியை விரைவில் போக்கடிப்பது!

நரம்பு நோய், கீல் வாயு, வாயுப் பிடிப்புகள், பல்வலி, சுளுக்கு அல்லது தலைவலி நீங்க மிகச் சிறந்ததான ஔஷதத்தை வாங்குங்கள். ஆனால் அதிகப்படி செலவில்லை.

DJK 19.

# இருதய நோய்க்குப் புதிய சிகிச்சை

●

வைத்தியர்

இருதய நோயால் வருந்துகிறவர்கள் அனுவசிய பீதியினாலேயே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். குரங்கை நினைத்து மருந்தைக் குடிக்காதே, என்று சொல்லுவது போல, பலஹீன இருதயம் உடையவர்களை மாடிப் படியில் வேகமாக ஏறக் கூடாது, ஓடுகிற பஸ்ஸில் ஏறக் கூடாது, உணர்ச்சிக் கட்டங்கள் மிகுந்த படக் காட்சிகளையும்கூடப் பார்க்கக் கூடாது என்றெல்லாம் தடையுத்தரவுகள் போடுகிறார்கள்.

இம்மாதிரிக் காரியங்கள் செய்யும் பொழுது எந்த நிமிஷத்தில் இருதயம் நின்று விடுமோ என்று இருதய நோய் உள்ளவர்கள் பயப்படும்படி செய்து விடுகின்றனர். ஆனால், இருதய சம்பந்தமான நோய்களைச் சிகிச்சை செய்வதில் வல்லுநரான டாக்டர் லூயிஃபாகாஸ் இருதய நோய்க்கு மருந்து ஒன்றும் தராமல், உடற் பயிற்சியின் மூலமே குணப்படுத்தலாம் என்று கூறுகிறார். பலஹீன இருதயமுடையவர்களுக்குக் கோல்ப் என்னும் விளையாட்டை விளையாடச் சொல்லுகிறார் அவர். இதன் உட்கருத்து யாதெனில் உடம்பை அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் தேகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் வேலை கொடுக்க முடியும் என்பதே.

நோய்ப்பட்ட இருதயம் சாதாரணமாக உள்ளதைக் காட்டிலும் அதிகமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நோய்ப்பட்ட அல்லது பலஹீனமான இருதயத்தில் உள்ள தசைகளும், (வால்வுகளும்) சரியாகத் தமது வேலையைச் செய்ய முடிவதில்லை. வால்வு சரியாகத் திறந்து மூடிக் கொள்ள இயலாமல் போனால் இருதயத்துக்குள் பாய்ச்சப்பட்ட இரத்தம் திரும்பவும், இருதயம் சுருங்கும் பொழுது இருதயத்தின் இடது பக்கத்துக்குச் செல்லாமல் இரத்தக் குழாய்க்குத் திரும்பி விடுகிறது.

ஆகவே உடல் முழுவதும் குருதி பாய, பழுதுபட்ட இருதயம் நல்ல இருதயத்தைக் காட்டிலும் வேலை அதிகம் செய்ய வேண்டி வருகிறது. அசாதாரணமான வேலையைச் செய்ய வேண்டிய தசை நார்களுக்குத் தகுந்த பயிற்சி தந்து வலிவு பெறச் செய்ய வேண்டும். நடமாடக்கூடிய இருதய வியாதியஸ்தர்களுக்குச் சாதாரணமாக முன்பெல்லாம் சம தரையில் மெதுவாக உலாவச் செய்தல், மாடிப் படிகளில் மெதுவாக இறங்கச் செய்தல், தடவைக்கு ஒவ்வொரு படியாக ஏறச் செய்தல் போன்ற பயிற்சிகளே கொடுக்கப்பட்டன. ஆனால், இம்மாதிரியான சுவையற்ற பயிற்சிகளில் வியாதியஸ்தர்களுக்கு வெறுப்புத்தான் தோன்றியது. ஆகவே டாக்டர்

பலவீனமான இருதயத்தையே 'ஆபரேஷன்' செய்து அப்புறப்படுத்தி விட்டு அவ் விடத்தில் வேறு தசைகளைப் பொருத்தி, இருதய நோயைப் போக்க முடியும் என்று சொல்லுகிறது கட்டுரை. மாகஸன் டைஜஸ்ட்டிலிருந்து.

லூயி, கோல்ப்போன்ற விளையாட்டுகளைச் சிபார்சு செய்கிறார். விளையாட்டில் ஈடுபடுகிற பொழுது வியாதிபஸ்தர்கள் தங்களுடைய சிரமத்தைக் கூடப் பாராமல், மகிழ்ச்சியோடு நண்பர்களுடன் பொழுது போக்குவது போல இருக்கிறார்கள்.

சக்தி இழந்த தசைகளுக்குப் பதிலாகப் புதிய தசைகளை வைத்துப் பலஹீனமான இருதயத்தைப் புத்துயிர் கொண்டு வேலை செய்யச் செய்யலாம் என்று அபிப்பிராயப் படுகின்றனர் நியூயார்க் டாக்டர்கள் மாண்டல் வெயின்ஸ்டினும், பென்ஜமின் ஜி. ஷாப்பும். இந்தப் புது முயற்சி இன்னும் பரிசோதனைக் கட்டத்தில்தான் இருக்கிறது. நாய், பன்றி, முயல் போன்ற பிராணிகளைக் கொண்டு பரிசோதனை செய்து வெற்றி பெற்றால் மனிதர்களுக்கும் இதைப் பயன்படுத்தலாம் என்று எண்ணி, நாயின் கால், அடி வயிறு முதலிய பாகங்களிலிருந்து தசை நார்களை எடுத்து நாயின் இருதயத்தில் பொருத்தினார்கள். இந்தச் சத்திர சிகிச்சைக்குப் பிறகு இரண்டு நாட்களில் நாய் எழுந்து நடமாடத் தொடங்கியது. ஆறுவது வாரத்தில் தசை நார்கள் இருதயத்தில் மற்றத் தசை நார்களுடன் சேர்ந்து பின்னிப் பிணைந்து ஒன்றாக வேலை செய்யத் தலைப்பட்டன. குறிப்பாக, புதுத் தசை நார்கள் முன்பு சீர்குலைந்து சக்தி யிழந்திருந்த தசை நார்களின் வேலையைச் செய்தன. இருதயத்தில் இருக்கிற தசை நார்கள் தாங்களே தனித்து, நம்முடைய இஷ்டப்படி நிறுத்தவோ, இயங்க வைக்கவோ முடியாத - தானே இயங்கும் (இன்வாலன்ட்டரி) சக்தி வாய்ந்தவை. கால், அடி வயிறு, கையிலுள்ள தசை நார்கள், நம் இஷ்டப்படி இயங்கும் தன்மையன. இருந்தும், இருதய வேலைக்கேற்ப இந்தத் தசைகளும் தாங்களே தனித்து இயங்கும் தசைகளாக மாறுகின்றன.

தசை நார்களை ஒட்ட வைத்துக் குணப்படுத்த முடியாத இருதய வியாதிகளுக்கு மற்றொரு நூதன முறையைக் கையாளலாம் என்றுகூட விஞ்ஞானம் காட்டுகிறது. அதுதான் வேறொரு புதிய இருதயத்தையும் சேர்த்து வேலை செய்ய வைப்பது. இந்த முறையும் பரிசோதனைக் கட்டத்தில்தான் இருக்கிறதென லாம். பேராசிரியர் சினிட்ஸன் என்னும் ருஷ்யர் தவளையின் இருதயத்தை மாற்றியமைத்துக் காண்பித்தார். தவளையினுடைய இருதயத்தை மாற்றியமைத்ததும் அதனால் மறுபடியும் சாதாரணமாக இரை தேடவும், இன உற்பத்தி செய்யவும் முடிந்தது. நாய் பூனை முதலியவற்றிற்கு வேறோர் இருதயத்தைக் கழுத்தில் பொருத்தி, புது இருதயத்துக்கு இரத்தக் குழாய்களையும் சேர்த்துவிட்டார். இரண்டு—புதியதும், முன்பிருந்ததும்—இருதயங்களும் சேர்ந்து உடல் முழுமைக்கும் இரத்தம் பாய்ச்சின. இந்த முயற்சியிலும் வெற்றி பெற்ற இவர் மனித வர்க்கத்துக்கும் இதுபோன்ற சிகிச்சை செய்யலாம் என்று திண்ணமாக எண்ணுகிறார்.

*

# செழிப்பான கூந்தல்




ஸ்திரீகளின் எல்லா ஆபரணங்களையும் விடச் சிறந்ததென்று, எக்காலத்திலும், எந்நாட்டிலும், கலைஞர்களால் கற்பனை செய்யப்பட்டும், கவிஞர்களால் பாடப்பட்டும் வந்திருக்கிறது. மேகத்திலிருந்து எட்டிப் பார்க்கும் சந்திரனுக்குக் கரிய கூந்தல் அணிந்த முகத்தைக் கவிஞர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

## ஜாப்கோ ஹேர் குரோயர்

செழிப்பான கூந்தலை விருத்தி செய்து முகமண்டலத்திற்கு அபார சோபையை அளிக்கிறது

### ஜயபாரதம் கோ.,

மதருஸ்—பெங்களூர்—எர்ணாகுளம்




# மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது

புஷ்டியளிக்கும் பதார்த்தங்கள் நிறைந்தது

போர்ன்-வீடாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தியளிப்பதற்குமான சரக்குகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டி தருவதாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும் இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.

காட்பரீஸ்

## போர்ன்-வீடா

கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது.

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

சப்ளை கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
காட்பரி-பவ்ரை (எக்ஸ்போர்ட்) லிட், (Dept 14) தபால் பெட்டி 1417, பம்பாய்.

# நண்பனுமல்ல ; விரோதியுமல்ல!

எம். இஸ்மத் பாஷா

அவரை எனக்கு நன்கு தெரியும். அவர் ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர். வாழ்நாளில் பெரும் பகுதியைத் தேசிய இயக்கத்தில் கழித்துக் கஷ்டப்பட்டிருக்கிறார். ஜாதி, மதப் பிரிவினைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் அவர் மிகமிக வன்மையாகப் பல கட்டுரைகளிலும் புத்தகங்களிலும் கண்டித்திருக்கிறார். கடவுள் மீதோ, ஹிந்து தர்மத்தின் மீதோ அவருக்குத் துளிகூட நம்பிக்கை கிடையாது. இது அவர் இயல்பு.

எனினும் அன்று பேசுகிறபோது அவர் தம்முடைய சொந்த வாழ்நாள் தத்துவங்களையே மறந்து விட்டார். "முஸ்லிம்களின் அட்டூழியம்" என்ற பத்திரிகைத் தலைப்பு, தினசரி காலையில் சேர்ந்தாற்போல் பல நாட்களாகக் கண்ணில் பட்டு, மனதில் பதிந்து விட்டது. வகுப்புக் கலவரம் என்றால், உடனே அவர் கண்ணில் "முஸ்லிம்களின் அட்டூழியம்" என்ற தலைப்பே தெரியும். அவர் சொன்னார், "துலுக்கப் பயல்கள் எவனையும் நம்பக்கூடாது, சார்!" என்று.

அதுமட்டு மல்ல. "காங்கிரஸில் தேசிய முஸ்லிமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியில் நாஸ்திக முஸ்லிமாக இருந்தாலும் சரி, துலுக்கன் எப்போதுமே துலுக்கன்தான், சார். எந்தச் சமயத்திலும் அவர்கள் துரோகம் செய்து விடுவார்கள்."

இவ்விதம் அவர் கூறியதற்குப் பிறகு, இரண்டு நாட்களில் இன்னொரு நிகழ்ச்சியையும் நான் பார்த்தேன். அதே நண்பர் வீதியில் வேறு ஓர் எழுத்தாளரைச் சந்தித்தார். இவர் இயற்கையே கடவுள் என்றும், சர்வ சமயங்களும் ஒன்றே என்றும், சாதிப் பிரிவினை சிறிதும் நல்லதல்லவென்றும் எழுதுபவர்; கூட்டங்களில் சொன்மாரி பொழிபவர். காங்கிரஸ் மந்திரி சபை சில விஷயங்களில் அனுஷ்டித்த கொள்கை இவருக்கு வெறுப்பூட்டிற்று. நாட்டில் காணப்படும் சகல தீமைகளுக்கும், மக்களின் துயரங்களுக்கும் "பார்ப்பனரே காரணம்" என்ற பத்திரிகைத் தலைப்பு இவருடைய மனதில் நன்கு பதிந்து விட்டது. முதலில் நான் குறிப்பிட்ட எழுத்தாளரைப் பார்த்து இவர் சொன்னார்: "என்ன.........ஐயங்கார்வாள்! வணக்கம். நீங்கள் ஆள்பவர்கள்; நாங்கள் ஆளபபடுபவர்கள்!"

அவ்வளவு தான். அவர் முகத்தில் ஈ ஆடவில்லை. "காங்கிரஸ் மந்திரி சபையில் ஒரு சிலர், பிராமணர்களில் ஒரு பகுதியினர், செய்கிற காரியங்களுக்கு என்னை நீங்கள் தாக்கலாமா?" என்று கேட்டுப் பார்த்தார்; பயனில்லை.

என்றுமில்லாதவாறு, இப்போது தேசத்தில் வகுப்புவாத வெறி தாண்டவமாடுகிறது. வகுப்புச் சண்டை நிகழாத தென்னாட்டிலும், வகுப்பு வேற்றுமை உணர்ச்சியைப் பரப்ப சிலர் முயலுகின்றனர். இதனால் என்ன விளைவுகள் ஏற்படும், இந்தச் சமயத்தில் மக்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன, என்பனவற்றைச் சுட்டிக் காட்டுகிறார் கட்டுரை ஆசிரியர்.

"நான் பாரதி அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவன். நான் ஜாதிப் பிரிவினைகளை வெறுக்கிறேன். பிராமணீயத்தில் எனக்குத் துளிக்கூட நம்பிக்கையில்லை. பூணூலைக்கூட நான் அறுத்தெறிந்து விட்டேன். நான் நெற்றியில் நாமமோ, விபூதியோ எதுவும் இட்டுக்கொள்வதில்லை. நான் நாஸ்திகன். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பதே என் தத்துவம்..." என்று இப்படியாக ஏதேதோ சொல்லிப் பார்த்தார். சகல கஷ்டங்களுக்கும் "பார்ப்பனரே காரணம்" என்ற தலைப்பு, "திராவிட" எழுத்தாளரான நண்பரின் மனதைவிட்டு அகலவில்லை.

இன்னொரு நாள் முஸ்லிம் எழுத்தாளர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் தேசிய இயக்கத்தில் வந்தவர். லீகர்களின் வகுப்பு வாதத்தை அவர் காரசாரமாகப் பல முறை கண்டித்திருக்கிறார். இதனால் "காபிர்" என்றபட்டப் பெயரையும் வாங்கிக் கொண்டார். எனினும், டில்லியில் டாக்டர் அன்சாரியின் வீடும், ஜமியா மிலியாவும், மெர்டேகா ஆபீஸும், உருது கழகத்தின் கட்டிடங்களும் தீக்கு இரையாக்கப் பட்ட செய்தி அவர் மனதைக் கலக்கி விட்டது. "தேசிய முஸ்லிம்களையும் கலகக்காரர்கள் விடவில்லை. முஸ்லிம்கள் எல்லோரையும் கொன்றனர்"—இது அவர் மனதில் பதிந்து விட்டது. "ஒரு முஸ்லிம் எப்போதும் முஸ்லிமே! அவனுக்கு வேறு எந்த லேபில் கொடுத்தாலும், ஹிந்துக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஹிந்துக்கள் எல்லோரும் முஸ்லிம்களின் விரோதிகள்" என்ற லீகர் பிரசாரம் அவர் மனதில் பதிய ஆரம்பித்து விட்டது.

முஸ்லிம்கள் எல்லோரும் துரோகிகள், ஹிந்துக்கள் எல்லோரும் விரோதிகள், பார்ப்பனர்கள் எல்லோரும் அயோக்கியர்கள், பார்ப்பனர் அல்லாதார் எல்லோரும் கீழ் ஜாதியினர்—இதுதான் வகுப்புவாதிகள் நாள் விடாமல் செய்கிற பிரசாரம். இதை நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், நமக்குப் பத்திரிகைச் செய்திகள் நாள் தவறாமல் அளித்து வருகின்றன. இதனால் தேசியத்தில் நன்கு பண்பட்ட மனம் கூடப்பிளக்கப் பட்டு விடுகிறது என்பதையே மேற்கண்ட அனுபவம் காட்டுகிறது.

இந்தப் பிரசாரம் தவறானது. ஒரு மதத்தினரில், ஜாதியினரில் உள்ள சிலர் செய்கிற அக்கிரமங்களைச் சுட்டிக்காட்டி, சகலரையும் கெட்டவர்கள் என்பது உண்மைக்கு முற்றிலும் மாறானது. எனினும், நாம் அந்தப் "பொய்" பரப்பப் படுவதை நாள்தோறும் பார்க்கிறோம். அந்தப் "பொய்" சிறந்த எழுத்தாளர்களாலும் உண்மையாகக் கொள்ளப் படுவதையும் பார்க்கிறோம்.

இதைத்தான் ஹிட்லர் தன் "மெயின் காம்"பில் சொன்னான், 'ஒரு பொய்யைத் திரும்பத்திரும்பச் சொன்னால், அது உண்மையாகிவிடும்' என்று.

ஹிட்லரின் இந்தக் கருத்தை மட்டும்தான் வகுப்பு வாதிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று எண்ணவேண்டாம். "மெயின் காம்ப்" முழுவதையும் அமுலுக்குக் கொண்டு வருகின்றனர். டில்லியிலும், கிழக்குப் பஞ்சாபிலும், பாகிஸ்தானிலும் அவர்கள் ஹிட்லர் படையினர் செய்தது போல, கொடூரமாகக் கொலை செய்தனர்; பெண்களைக்

கர்ப்பிணி என்றே, பருவமடையாத மங்கை என்றே பாராமல் பலர் கூடி நடுத்தெருவில் நிறுத்திச் சாகும் வரை கற்பழித்தனர். சிறுவர்களின் தலைகளை மாலையாகக் கோத்து, கழியில் மாட்டி நர்த்தன மாடினர். சொத்துக்களைச் சூறையாடினர். இவ்வளவும் செய்துவிட்டு, "நாங்கள் தான் சமாதானத்தைக் காப்பாற்றினோம்" என்று விளம்பரம் செய்கின்றனர். "எங்கள் லட்சியம் தற்பாதுகாப்பே ஒழிய, ஆக்கிரமிப்பு அல்ல" என்கின்றனர். "நாங்கள் இல்லையேல் சமாதானம் நிலைக்காது" என்கின்றனர்.

ஹிட்லர் சொன்னான்: "கருத்துத் தெரிவதற்கு முன்பே குழந்தைகளின் மனதைக் கெடுத்து விட்டால், என்றென்றைக்கும் அக்குழந்தைகள் மனதை யாராலும் மாற்ற முடியாது."

இன்று நாம் பல இடங்களில் பார்க்கிறோம். அரசியல் என்னவென்று அறியாத குழந்தைகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப் படுகிறது. "ஹிந்து தர்மத்துக்காக உயிர்விட வேண்டும்" என்றும், "இஸ்லாத்துக்காகச் சர்வபரித்தியாகம் செய்ய வேண்டும்" என்றும் அந்தந்த வகுப்புவாதிகள் நாள் விடாமல் காலையிலும் மாலையிலும் அச்சிறுவர்களுக்குப் போதித்து, கத்தி வீசக் கற்றுக்கொடுத்து வருகின்றனர்.

குழந்தைகள் வட நாட்டில் விளையாடுகின்றன. இரண்டு கோஷ்டிகளாகப் பிரிகிறார்கள். ஒரு கோஷ்டி "ஹாஹரே மகாதேவ்!" என்று கோஷிக்கிறது. இன்னொரு கோஷ்டி "அல்லாஹு அக்பர்" என்று ஆர்ப்பரிக்கிறது. "அதோ முஸ்லிம்!" என்று ஒன்று கூவுகிறது. "அதோ ஹிந்து!" என்று இன்னொன்று கத்துகிறது. "அடி! வெட்டு! கொல்லு!" என்று யுத்த முழக்கம் செய்து இரண்டு கோஷ்டிகளும் மயிரைப் பிடித்துச் சண்டை போடுகின்றன.

இந்த விளையாட்டு, ஹிந்துக் குழந்தைகளிடமும் முஸ்லிம் குழந்தைகளிடமும் சர்வ சாதாரணமாகக் காணப் படுகிறது என்றால், இன்னொரு பத்து, அல்லது பதினைந்து வருடங்கள் கழித்த பிறகு அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

வகுப்பு வாதிகளின் பிரசாரமும் செய்கையும் தாய்மார்களின் மனதை மற்றவர்களைவிட அதிகமாகப்பாதித்திருக்கின்றன. இப்போது பல தாய்மார்கள் அழுகிற குழந்தைகளுக்குப் பூச்சாண்டி காட்டுவதில்லை. "பிள்ளை பிடிக்கிறவனிடம் கொடுத்து விடுவேன்" என்று சொல்லுவதில்லை. "துலுக்கனிடம்" அல்லது, "ஹிந்துவிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்றால் போதும், குழந்தைகள் பயந்து வாயைப் பொத்திக் கொள்கின்றன. இந்தக் குழந்தைகள் எதிர் காலத்தில் இந்திய யூனியனில் எத்தகைய பிரஜைகளாக இருக்கும்?

இவ்விதம் மக்கள் மனதை மாற்றுவதில் ஹிந்து வகுப்பு வாதிகள் முஸ்லிம் வகுப்பு வாதிகளுக்கும் முஸ்லிம் வகுப்பு வாதிகள் ஹிந்து வகுப்பு வாதிகளுக்கும் உதவி செய்து பொதுவாகப் பொய்யை நிஜமாக்கும் லட்சியத்தைச் சாதித்துவருகின்றனர்.

இவர்களை எதிர்த்துப் போராட வேண்டும். அப்போதுதான்

நம் தேசிய இயக்கத்தின் லட்சிய மாகிய ஜாதிமத வித்தியாசமற்ற இந்திய யூனியனை நாம் கட்ட முடியும் என்று நமது பிரதமர் பண்டித நேரு கூறுகிருர்.

அவர் கூறுவதோடு நிற்க வில்லை. டில்லியில் தம் உயி ரையே பணயம் வைத்துப் போராடினுர். இன்னும் போராடு கிருர்.

உண்மை என்ன?

ஹிந்துக்கள் எல்லோரும் விரோதிகள் அல்லர். காந்திஜி நேருஜி தலைமையில் ஆயிரக் கணக்கான காங்கிரஸ்காரர் களும், சோஷியலிஸ்ட்களும், கம்யூனிஸ்டுகளும் முஸ்லிம் களின் உயிரைக் காப்பாற்றப் போராடுகின்றனர்.

முஸ்லிம்கள் எல்லோரும் துரோகிகள் அல்ல. ஷேக் அப் துல்லாவின் தலைமையில் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள், பாகிஸ் தானிலிருந்து படையெடுத்து வந்திருக்கும் "முஸ்லிம்" களை எதிர்த்து முன்னணியில் நின்று சண்டை போடுகின்றனர்.

பார்ப்பனர் எல்லோரும் அயோக்கியர்கள் அல்லர். அவர் கள் பூர்ஷுவாக்களாகவும், நிலச் சுவான்தார்களாகவும், குமாஸ் தாக்களாகவும், இந்த 20ம் நூற் ருண்டு நவீன காலத்தில் பிரிந்து விட்டனர். ஜாதி வெறியை ஒழிக்க அவர்களில் அநேகர் காங்கிரஸிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும், சோஷியலிஸ்ட் கட்சியிலும் இருந்து மூடப் பழக் கங்களையும், உயர்ந்த ஜாதி என்ற எண்ணத்தையும் எதிர்த்துப் போராடுகின்றனர்.

இந்த உண்மைகளை வகுப்பு வாதிகள் ஜனங்களுக்கும் குழந்தைகளுக்கும் சொல்ல விரும்பவில்லை. ஆகவே, இன் ெருரு பொய்யைச் சொல்லித் தங் களுடைய பழைய பொய்க்குச் சப்பைக் கட்டுக்கட்ட முற்படு கின்றனர்.

முஸ்லிம் வகுப்பு வீாதிகள் சொல்லுகிருர்கள், "நேரு முஸ்லிம்களின் நண்பர்." என்று. ஹிந்து வகுப்பு வாதிகள் சொல்லுகிருர்கள், "ஷேக் அப் துல்லா ஹிந்துக்களின் நண்பர்" என்று. இதற்கு என்ன அர்த் தம்? "நேரு ஹிந்துக்களின் விரோதி; அல்லது முஸ்லிம்களின் ஐந்தாம்படை" என்றும், "ஷேக் அப்துல்லா முஸ்லிம் களுக்குத் துரோகி" என்றும் பொய்யைப் பரப்புவதே யாகும்.

உண்மையில் ஷேக் அப்துல்லா வும், நேருவும் எந்த மதத்தினருக் கும் விரோதிகள் அல்ல. எல்லா மதத்திலுமுள்ள சுயநல வெறி யர்களுக்கே விரோதிகள்.

நாம் தேசிய வாதிகள். நாம் முஸ்லிமல்ல; ஹிந்துவல்ல; நாம் ஜனநாயக வாதிகள். நாம் எம் மதத்தினருக்கும் நண்பரல்ல. எம் மதத்தினருக்கும் விரோதி கள் அல்ல. பாகிஸ்தானிலிருந்து படையெடுத்து அக்கிரமம் செய் பவர்களை எதிர்த்துநாம் காஷ்மீரில் சண்டை போடுகிருேம். வகுப்பு வாதம் பேசுகிற சகல பாஸிஸ்ட் தத்துவங்களையும் பொய்யென நிரூபிப்பதே நம் வேலை. தாழ்ந்த ஜாதி மனேபாவத்தை மாற்று வது போலவே, உயர்ந்த ஜாதி மனேபாவத்தையும் நாம் மாற்றுவோம். திட்டுவதன் மூல மல்ல; அறிவைப் பரப்புவதன் மூலம்.

*



★ டிமிர் பாரன் பட்டாச்சார்யா 1910-ம் வருஷம் கல்கத்தாவில் பிறந்தவர். அவர் தனது 18-வது வயதில் 'சாரட்' என்ற வாத்தியம் கற்றார். அதுதான் அவருக்கு முதல் கீர்த்தியை அளித்தது. அவர் உஸ்தாத் அமீர்கான், உஸ்தாத் அலாவுதீன்கான் இவர்களின் சிஷ்யர். 1930-ம் வருஷம் உதய ஷங்கர் கோஷ்டியில் சேர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அந்நாடுகளிலெல்லாம் அவரின் திறமை நன்கு தெரிந்துகொள்ளப்பட்டது. அவரின் இந்திய சங்கீதத்தை வாத்தியங்களில் சேர்த்து அமைத்து வாசிப்பதின் திறமை அவருக்கு அளவில்லா கீர்த்தியையும் [illegible] பெற்றிருக்கிறது.

# டிமிர் பாரன் ஸ்வரப் பாடகர்

கியாதி பெற்ற பாடகரும் இந்திய சங்கீதத்துக்கு புது ஸ்வரங்கள் ஏற்படுத்தி இந்திய வாத்தியங்களின் வாசிப்பையே புதுப்பித்தவருமான டிமிர் பாரன் சொல்லுவதாவது:

"சங்கீத சிருஷ்டிக்கு டீயின் உதவியை நான் மிகவும் மதிக்கிறேன். வேறு பிரமையில் அது அடிக்கடி ஒரு ஸ்வரத்தையும்-லயத்தையும் தூண்டுகிறது. அதை வாத்தியத்தில் வாசிக்க அது ஒரு உன்னத வாத்திய இசைப் பொருத்தத்தின் உச்ச நிலையை அடைகிறது."

**டீ**

**ஊக்கத்திற்கு**

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது


லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
LIPTON'S TEA GIRL
FINEST DUST TEA
LIPTON'S
TEA GIRL
FINEST
INDIAN DUST TEA

LTH-1326-TM



# பொது மக்களும் இலக்கியமும்

ம. ரா. சண்முகசுந்தரம்

இலக்கியம் என்று கேட்டதுமே தமிழர் உள்ளத்தில் ஐம்பெருங் காப்பியம், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்று எண்ணத் தோன்றும். இவ்வெண்ணம் எண்ணுபவருக்குப் "பொது மக்களும் இலக்கியமும்" என்ற தலைப்பைக் கேட்கிறபோது, பொதுமக்களுக்கும் இலக்கியத்துக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கத் தோன்றும். சங்க நூல்கள்தாம் இலக்கியம் என்று வைத்துக்கொண்டால், இலக்கியத்துக்கும் பொது மக்களுக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை என்று சொல்லிவிடுவதில் இழுக்கு ஒன்றும் இராது. சங்க நூல்கள் மட்டும் என்ன—கம்பராமாயணம் போன்ற பிற்காலத்துக் காவியங்களுக்குத் தான் பொது மக்களோடு உறவு எம்மட்டு?

இங்கே பொதுமக்கள் என்று பேசுவது—"புலமிக்கவரைப் புலமை தெரிதல் பொதுமக்கட்காகாதே" என்று "பழமொழி"ப் பாட்டுக் குறிப்பிடுகிறதே அந்தப் பொது மக்களை. "கற்றோரும் மற்றோரும்" என்று பேசுகிறார்களே, அந்த மற்றோரை. படித்தவர்கள் நாங்கள், அறிவாளிகள் நாங்கள் ஆற்றலுள்ளவர்கள் நாங்கள், அதிகாரமுள்ளவர்கள் நாங்கள் என்று [illegible] கற்பித்துக் [illegible] ஓங்கி நிற்கும் பெரியவர்கள் ஒதுக்க, ஒடுங்கி நிற்கும் மக்கட் பொதுவையே இங்கு பொது மக்கள் என்று குறிப்பிடுவது.

இந்தப் பொது மக்களுக்கும் இலக்கியத்துக்கும் உறவு எதும் இல்லை என்றுதான் சொல்லத் தோன்றும். பொது மக்களைப் பற்றிய நினைவு சங்கப் புலவர் உள்ளத்தில் எழவே இல்லை என்று சொல்ல வரவில்லை. புறநானூற்றுப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. தமிழக மக்கள் அனைவரும் தமிழ் பேசும் ஒரே இனத்தவர்தாம் என்றாலும், அவ

பாமர மக்கள், தாங்களும் படிக்காமல், படித்தவர்களுடைய உதவியும் இல்லாமல், தாங்களாகவே பரம்பரை பரம்பரையாக இலக்கிய சிருஷ்டி செய்து வந்திருக்கிறார்கள். இங்கே பாமர மக்கள் இலக்கியத்துடன் கொண்டிருக்கும் பற்பல தொடர்புகளையும் விளக்குகிறார் கட்டுரையாளர்.

ரவர் வாழ்ந்த இடவேற்றுமை பற்றிச் சோழநாட்டார், பாண்டி நாட்டார், சேரநாட்டார் என மூன்று பிரிவினராயிருந்தனர். இட வேற்றுமை என்பதைக் காட்டிலும் அரசு வேற்றுமை என்றால் பொருந்தும். தமக்குள்ளே தங்கு தடையின்றிக் கொண்டும் கொடுத்தும் கலந்து வாழ்ந்த தமிழ் மக்கள், தத்தம் வேந்தர் அவ்வப்போது கொண்ட செற்றத்தால், தாமும் சீற்றங்கொண்டு தம் உறவினரையே தாக்கி மாய்க்கப் போர் புரிவர். இந்தச் செற்றமும் சீற்றமும் இம் மூன்று பெரு நாடுகளிடையே யன்றி, அவற்றுள் ஒவ்வொன்றுக் குள்ளேயும் குறுநில மன்னர் குறும்பால், சில சமயம் நேர்வதுண்டு. நெடுங்கிள்ளி ஒரு சோழன்; ஆவூரைத் [illegible]ராகக் கொண்டவன். நலங்கிள்ளியும ஒரு சோழன். இவன் ஆவூரை முற்றுகை யிட்டான். முற்றுகை நீடித்தது. முற்றுகையுட்பட்ட பொதுமக்கள் பெருந் துன்பத்துக் காளாயினர். எந்த வீட்டிலும் அழுகுரல். வயிற்றுக்குப் பால் இல்லாமல் குழந்தைகள் அலறுகின்றன. வைத்து முடிக்கப் பூ இல்லை என்று பெண்கள் அலமருகின்றனர். பெண்கள் கவலை அது! இன்றியமையாத உணவே இல்லை என்கிறபோது, இன்பத்துக்குரிய போகப் பொருளுக்கு எங்கே போக? கோவூர்க் கிழார் என்ற புலவருக்குப் பொறுக்கவில்லை. அரசனிடம் பேசுகிறார்: "நீ வீரன் என்றால் போருக்குத் துணிந்து கோட்டையைத் திற; போர் என்றால் கொலையல்லவா என்று கவல்கிறாயா? 'இதோ நாடு' என்று எதிரியிடம் தந்து விடும் பொருட்டுத் திறந்துவிடு; இதுவும் செய்யாமல் அதுவும் செய்யாமல் நீ உள்ளே சுகமாக இருத்தல் வெட்கம், வெட்கம்!" என்று இடித்துரைக்கிறார்.

"பால் இல் குழவி அலறவும், மகளிர்
பூ இல் வறுந்தலை முடிப்பவும்.........
இன்னாது அம்ம ஈங்கு இனிது இருத்தல்.
அறவை ஆயின் நினதெனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லையாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத் தகவுடைத்து......"

பொது மக்களின் அல்லலைக் கண்டு ஆற்றாத சான்றோரின் அருள் உள்ளத்தினின்று எழுந்த புலமை மொழி இது. இப்படிப் பொது மக்களை உளத்துக் கொண்டு எழுந்த பழம் பாடல்கள் மிக மிக அருகியே இருக்கும். திருமுருகாற்றுப் படை போன்ற பாராயண நூல்களும், திருவாசகம், திருவாய் மொழி போன்ற துதிப் பாடல்களும் போக, கற்றவர் தவிர மற்றவரைப் பற்றியதோ ஈடுபடுத்தியதோ, இலக்கியத் துறையில் ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அகம், புறம் என்று பொருளைப் பிரித்துப் பாடினார்கள். இரண்டிலும் பேச்சு, தலைவனைப் பற்றியே; தலைவியைப் பற்றியே. தலைவன் எவ்வகையானும் ஒப்புயர்வு அற்றவன்; தலைவியும் அப்படியே. தொண்ணூற்றாறு வகையாகப் பிரபந்தங்கள் இயற்றினார்கள். உழத்திப்பாட்டு, குறத்திப் பாட்டுப்போன்ற ஒன்றிரண்டைத் தவிரப் பிற வெல்லாம் பெருமக்களைப் பற்றியே தவிரப் பொது மக்களைப் பற்றி அல்ல. பாதாதி கேச வருணனை, கேசாதி பாத வருணனை, உறங்கப் பாடுவது...என்றெல்லாம் வரும் பிரபந்த வரிசையிலே, உழைத்துச் சாகிற பொது மக்களுக்கு

இடம் எது? இயல், இசை நாடகம் என்று காவியம் செய்தார்கள். நாடக நூல்கள் பெருக இருப்பின் அவைகளில் பாத்திரங்களாக இடம் பெற்றிருப்பர் பொது மக்கள். இந்தப் பேறும் அவர்களுக்கு இல்லையே! "காவியம்" என்றாலே என்ன தெரியுமா? இலக்கணத்தைக் கேளுங்கள்: "வாழ்த்து வணக்கம் முன்னுடைத்தாய், அறம் பொருளின்பம் வீடென்று கூறும் நடை நெறித்தாய், தன்னிகரில்லாதானைத் தலைவனுக் கொண்டு, மலை கடல் நாடு நகரம் இருது இரவி மதி ஆகியவருணனை பெற்று, திருமணம், முடிகவிப்பு, பொழிலாட்டு, நீராட்டு..." இந்த இலக்கணத்தில் ஏழைக்கு இடம் எது? பொது மக்களுக்கும் காவியத்துக்கும் வெகு தொலை என்பதுதான் பழந் தமிழ் மரபு.

நூல் நுவலும் பொருள் எதுவாயினும், நூலின் உருவம் எதுவாயினும், நூல் என்ற பெயருக்கு உரிய எதிலும் சுவைகளாக வகுத்த ஒன்பதில் ஒன்றோ பலவோ இருக்கவேண்டும் என்பர். இந்தச் சுவைகளிலுமா பொது மக்களுக்குப் பங்கு இல்லை? இங்கேதான் பொதுமக்களுக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பு தோற்றம் அளிக்கிறது. இலக்கியம் இன்றியமையாதனவாக எண்ணும் சுவைகளைக் கற்றவர்தாம் உணர்வாரா? மற்றவர் அறியாரா? வீரமும் சினமும் பொது மக்களுக்கு இல்லையா? சிரிப்பும் சிங்காரமும் இவர்களுக்கு இல்லையா? சொல்லப் போனால் பொது மக்களின் வாழ்க்கையில் தான் உண்மையான சிரிப்பும் உளங்கலந்த காதலும் உண்டு. இலக்கணிகள் எண்ணிக் காட்டுகிறார்களே ஒன்பது என்று—ஒன்பது அல்ல, ஒன்பது ஆயிரம் சுவைகள் இவர்கள் வாழ்க்கையிலேதான் உண்டு. இலக்கியத்துக்கு உண்மையான நிலைக்களம் பொதுமக்களே.

ஒருவருக்கு நெடு நாளாகப் பிள்ளை இல்லை. பிள்ளை வேட்கையை ஆற்றிக் கொள்ள நண்பரொருவரின் பிள்ளையை வளர்த்து வந்தார். பிள்ளை ஒருநாள் நீரில் மூழ்கித்தவறுந் தறுவாயாகி விட்டது. இது கட்டிய கதை அல்ல; உண்மையாகவே நிகழ்ந்தது. இந்த வீட்டு வேலைக்காரி நிகழ்ச்சியைக் கேட்டாள். கேட்டாளோ இல்லையோ, பதறினாள்; கதறினாள். எப்படி?—முழுவதும் ஞாபகம் இல்லை —

"கறந்த பாலும் இல்லை
கரகத்துப் பாலும் இல்லை
இரந்து வந்த பாலுக்கு
இடையூறு வந்திருச்சே!"

வேலைக்காரி என்ன படித்தவள் என்று கேட்க மாட்டார்கள்.



பாவினம் என்ன என்று கேட்க மாட்டீர்கள். உணர்ச்சி வயப்பட்ட ஓர் இதயம் ஒலிக்கிறது; கேட்கும் மற்ற இதயங்கள் ஒட்டியொலிக்கவே செய்யும். இலக்கியத்தின் பண்பும் பயனும் வேறு என்ன? இந்தப் பாட்டை ஒப்பாரி என்று ஒதுக்க முடியுமா?

காதல் வேண்டுமா? கேளுங்கள்:

"ஓடுகிற தண்ணியிலே
உரசி விட்டேன் சந்தனத்தை
சேந்துச்சோ சேரலியோ
சிவத்த பிள்ளை நெத்தியிலே!"

இவள் இங்கே ஆற்றிலேயோ குளத்திலேயோ வீட்டுக் கிணற்றில் தானே உரசினளாம்; அது அங்கே சேர்ந்து விட்டதா என்று கேட்கிறள் கேள்வி! எங்கே? அவன் நெற்றியிலேயே! காதலல்லவா எங்குகிறது!

நையாண்டி வேணுமா?

"சாலையிலே போறவரே
சந்திரரே என கொழுந்தா-நீரு
இங்கிலீசு படிக்கப் போயி
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்!"

இங்கிலிசு படிச்சவருக்கு முறை தெரியாதா, அல்லது முறை கிடையாதா!

கதை கேட்டதில்லையா, கம்பரைப் பற்றி?

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே

என்று எடுத்த ஏற்றப் பாட்டைக் கேட்டு இந்த மட்டோடே பாட்டு நின்று விட, அடுத்து வரும் வரிகளுக்காக ஏங்கிக் கிடந்து, மறுநாள் —

தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே!

என்று ஏற்றக்காரர் முடிக்க, தமது கவியுள்ளத்தைக் கவிய



வைத்துக் கவைக்கவும் செய்த உண்மையான இந்தக் கவி நயத்திலே மூழ்கிவிட்டார் என்று! உண்மையான இலக்கியம் அரும்புவது பொது மக்களிடையே தான்.

நாட்டுப் பாடல்கள் இன்று நேற்று எழுந்தவை யல்ல. பள்ளு, குறவஞ்சி என்ற பிற்காலத்தில் எழுந்த பிரபந்த வகைகளில்மட்டுமல்ல, பொது மக்களின் கவியுள்ளம் காட்சி தருவது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே இக்காட்சி ஓரோவழி தென்படத்தான் செய்கிறது. இந்தக் காட்சியை அனுபவித்த ரசிகமணியின் இதயம், "சிலப்பதிகாரத்தில் பதித்து வைத்திருக்கிற வைரமணிகள் போன்ற வரிப்பாடல்கள்" என்று ஒலி செய்கிறது. பொது மக்களின் உள்ளம்தான் இலக்கியப் பயிர்ச் செலவு திகழும் நன்செய் என்றும், அவர்களது உண்மையனுபவத்தினின்று அவ்வப்போது எழுகின்ற உணர்ச்சி மிக்க பாடல்களே இலக்கிய நாற்றங்கால் என்றும், புலவர் என்பவர் எல்லாம் பின்னர் வந்து நடவு செய்பவரே என்றும் இலக்கிய வரலாற்றை நுணுகி ஆராய்பவர் கண்டு கொள்வர்.

இலக்கியம் என்றால் என்ன என்று தெரிந்து கொண்டால் இவ்வுண்மை தானே போதரும். இலக்கியம் என்ற சொல்லுக்கு "இலக்கணம் அமைந்தது" என்றும் "ஆன்றோர் நூல்" என்றும் 'லெக்சிகன்' பொருள் சொல்லுகிறது. இலங்கு இயம் எனப் பிரித்து, சொல்லாலும் பொருளாலும் செம்மை பெற்று ஒளிரும் நூல் எனப் பொருள் காட்டி, "இலக்கிய மென்பது மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்விய சொற்களால் விளக்கும் கருவியாம்" என இலக்கணம் தருகிறார்கள் கா. சு. பிள்ளையவர்கள்.

தமிழிலக்கியப் பரவை பெரிது தான் என்றாலும், தொன்மை நயன் முதலிய இயல்புகளில் மிகச் சிறந்ததுதான் என்றாலும், அவைகளின் பிறப்புக்கு அடிப்பட்ட நிலைக்களன் என்ற நிலை தவிர, வேறு தொடர்பு பழந் தமிழிலக்கியத்துக்கும் பொது மக்களுக்கும் பெரும்பாலும் இல்லை என்று மேலே காட்டப்பட்டது. "பொது மக்களுக்கு இலக்கியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கொள்கை நிலை பெற்ற காலம் இந் நூற்றாண்டிலேதான்' என்று பத்தொன்பதாம் நூற்றாண்டைக் குறிக்கிறது கா. சு. பிள்ளையவர்கள் எழுதிய "இலக்கிய வரலாறு." இலக்கணம் முதலிய கருவி நூற் பயிற்சி இல்லாத, மற்றப்படியும் அறிவில் எளியவரான, பொது மக்களுக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தால் எளிய நடையில் இயன்ற பாடல்களும் உரை நடை நூல்களும் எழுந்தது சென்ற நூறு நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான். இந்தத் துறையில் உழைத்தவர்களில் யாழ்ப்பாணத்து நாவலரும், வடலூர் வள்ளலாரும் தலைசிறந்தவர்.

உலகம் எங்கும் இப்போது ஓர் எழுச்சி. பாமர மக்கள் என்றும், பாட்டாளி மக்கள் என்றும் ஒதுக்கப்பட்டு ஒடுங்கிக் கிடந்த பொதுமக்கள் தமது ஆற்றலை அறிந்து கொண்டனர்; எழுந்துவிட்டனர். இன்று அரசியல்தான் மற்ற வாழ்க்கைத் துறைகளை யெல்லாம் அமைப்பது. அரசியலதிகாரம் அடிப்படையில் பொதுமக்கள் கையில் இருக்கிறது இன்று. ஆக, மற்றத் துறைகளில்போலவே, இலக்கியத் துறையிலும், பொதுமக்களின் இடம் பெரிதாகி வருகின்றது; இன்னும் பெருகுவதாகும்.

இப்போது மொழிக்குரிய யாவரும, கற்றவர் மற்றவர் என்ற வேற்றுமையின்றிப் பேசுகின்றனர். துறைபோக என்பார்களே அப்படியின்றிக் கற்றவர் என்று பேருள்ள எல்லாருமே எழுதுகிறார்கள். எழுதுவோர் எண்ணமும் படிப்பவர் தொகையும் நாள் நாளும் பெருகி வருகிறது. முன்னெல்லாம் ஒரு சில நூறு படிகள் வெளியானால் பல ஆண்டுகளாகியும் செலவாகாமல் நின்றது போக, இப்போது பல ஆயிரம் படிகள் திங்கள்தோறும், கிழமைதோறும், என் நாள்தோறுமே வெளியாகிச் செலவும் ஆகிவிடுகின்றன. அச்சு என்ற அருமையான சாதனம் செய்துவிட்ட பெரும்புரட்சி இது.

இந்தப் புரட்சி பொதுமக்களின் ஆற்றலை மிகப் பெருக்கிவிட்டது. பொதுமக்களின் உணர்ச்சிக்கு மாறாக ஒன்றும் எழுதித் தப்பிவிட முடியாது. அறிவாற்றல்களினாலே எவ்வளவு வீங்கிய மண்டையானாலும், "சத்

சூத்திரன்'' என்று இந்த நாளில் எழுதத் துணியுமா!

ஒரு குறிப்பிட்ட காலத்தின் போக்கும் அதன் தேவையும் பொதுமக்களின் சுவையை ஒரு வழிப் படுத்தும். பொதுமக்களின் வேட்கையை நிரப்புகின்ற எழுத்தே இன்று பரவும். ஆக, பொதுமக்கள் செலுத்துகின்ற நெறியிலே எழுத்துச் செல்வதாகும் என்று சொல்லவேண்டும். ஆனால், ஆசிரியன் அதோடு அமைந்துவிடுவானா? அவனது ஆற்றல் வழிப் பிற கருத்துக்களும் வெளியாகும். இவை பொதுமக்களின் போக்கை மாற்றுவதாகும். இந்த வகையில் எழுத்து மக்களைச் செலுத்துவதாகும். இப்படியே மாறி மாறி நிகழும்—மரம், வித்து வித்து, மரம் என்பதாக.

எழுத்து என்ன வெல்லாம் செய்யும்? இந்த நாளைக் கவி பாரதியாரைப் பார்ப்போம்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே......இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ!"

என்று அடிமைத் தளையால் தவிக்கும் உள்ளத்தில் எழுந்த நாட்டு வணக்கம்,

"நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்
நெஞ்சு பொறுக்குதிலையே!" [டால்

என்று தன் உடன் பிறந்தாரின் தாழ் நிலைக்கு இரங்கும். ஆனால் அடக்கி வைத்திருக்கும் அந்நியனைக் கூவி,

"ஆயிரம் உண்டிங்கு சாதி—என்னில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி?"

என்று அதட்டி ஓட்டும்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்..."

என்று தற்போதைய வறுமைக்குப் புழுங்கிச் செல்வந் தேடத் திரைகடலோட்டும். அதேநால்,

"சொல்ல வல்லாயோ—கிளியே
வல்ல வேல் முருகன்—தனை இங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று
சொல்ல வல்லாயோ......"

என்று பழைய கிழவனிடம் தூது விடும். எழுத்து என்ன செய்யாது! எழுதும் எழுத்து எல்லாம் இலக்கியமாகாதே! குயில் பாடும்; யாரும் கேட்க என்றா? மயில் ஆடும்; யாரும் பார்க்க என்றா? அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்றார் புலவர். எந்த உணர்ச்சியையுமே அடைத்துவைக்க முடியாது. அறிவையும் அடக்கி வைக்க முடியாது. உணர்ச்சியும் அறிவும் நிறைந்த உள்ளம் பொங்கி வழியவே செய்யும். எழுதுகின்ற ஆற்றல் தானே வந்துவிடும். இந்த ஆற்றல் இயல்பிலேயே சிறப்பாக இருந்து விட்டால், உண்மையான இலக்கியம் பிறந்துவிடும். இப்படிப் பிறக்கும் இலக்கியத்தை அனுபவியாதவர் இரார்.

உண்மையான இலக்கியம் பிறப்பது பெரும்பாலும் பயன் கருதியல்ல. கம்பராமாயணத்தை எரித்துவிடு என்று பொதுமக்களின் ஆற்றல் பெற்ற அமைச்சர் கட்டளை யிடலாம். கட்டளை நிறைவேறவும் செய்யும். எல்லாம் வல்லதல்லவா அரசு? ஆனால் எரிந்த சாம்பரிலிருந்தே எழுந்து விடுவான் கம்பன்! ஆண்டவனையும் ஆள்வது இலக்கியம்.

(திருச்சி வானொலியில் ஒலி பரப்பியது. நிலையத்தாரின் அனுமதியோடு வெளியிடப் பெறுகிறது.)

*






## லக்ஸ் டாய்லட் சோப்
# எம். வி. ராஜம்மாவின்
## மென்மைவாய்ந்த மிருதுவான மேனியை காப்பாற்றுகிறது . . .

கீர்த்திபெற்ற பாடகியான இந்நட்சத்திரம் தனது களங்கமற்ற மிருதுவான மேனியை விசேஷ மதிப்புடன் வைத்திருப்பதனுலேயே மேனிக்கு எப்பொழுதும் ஒப்பற்ற பாதுகாப்பை அளிக்கிருர். அழகைத்தரும் பாதுகாப்பு முறையை தவருமல் கையாள்வதனுலேயே நீடித்து நிற்கும் மேனியழகைப் பெறலாம் என்பது அவருக்குத் தெரியும். இதனுல்தான் எம். வி. ராஜம்மா லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகிக்கிருர். நீங்களும் இந்த சுத்தமான, வெண்ணிறம் கொண்ட சோப்பை எப்பொழுதும் உபயோகியுங்கள். இதன் சுறுசுறுப்பான சுகந்த நுரை உங்கள் சருமத்தை மென்மையாகவும், களங்கமற்றதாகவும், பிரகாசமாகவும் வைத்துக் கொள்வதைக் காண்பீர்கள்.

வாஹினி பிக்சர்ஸாரின் புதுப்படமான "யோகி வேமனு"வில் எம். வி. ராஜம்மாவின் நடிப்பு, அவரது பழைய விசிறிகளுக்கு மகிழ்ச்சியளிப்பதுடன், இன்னும் பல ரஸிகர்களின் நன்மதிப்பையும் பெறச் செய்யும்.

## லக்ஸ் டாய்லட் சோப்
## சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

LTS. 166-50-40 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

# அரிய புத்தகங்கள்

## நாவல்கள்

| | | |
|---|---|---|
| வானவில் | வாண்டா வாசிலெவ்ஸ்கா | ரூ. 5-0 |
| காதல் | ,, | 3-12 |
| சுந்தரி | வ. ரா. | 5- 0 |
| பவானி | 'லக்ஷ்மி' | 2- 8 |
| வனிதாலயம் | சகுந்தலா ராஜன் | 2- 0 |

## சிறு கதைகள்

| | | |
|---|---|---|
| மஞ்சி விரட்டு | கொத்தமங்கலம் சுப்பு | 3- 8 |
| சஞ்சீவி | குகப்ரியை | 3- 4 |
| ஜெயகாதல் கீதம் | துர்கனேவ் | 0- 8 |

## கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| வாழ்க்கைச் சித்திரம் | வ. ரா. | 2- 8 |

(தபால் செலவு தனி)

பவானி பிரசுரம்

ராயவரம் : (புதுக்கோட்டை) ஸ்டேட்




# இந்தியாவில் குருடர்கள்

பி. ஜி. சேட்

இந்தியாவில் குறைந்தது எட்டு லட்சம் குருடர்கள் இருக்கிறார்கள். சில ஆராய்ச்சியாளர், இதற்கு அதிகமாக இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். சிலர் இருபது லட்சம் என்றும் சிலர் முப்பத்தைந்து லட்சம் என்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் இந்த ஊனம் இவ்வளவு அதிகமாக இருப்பினும், பொது ஜனங்கள் இதன் நிவாரண விஷயத்திலாவது, குருடர்களுக்கு ஏற்ற முறையில் சௌகரியங்களைச் செய்து கொடுக்கும் விஷயத்திலாவது, சரியான சிரத்தை காட்டுகிறார்களென்று சொல்வதற்கில்லை.

ஜன சங்கியை எடுக்கும் அதிகாரிகள் பற்பல ஊனங்கள், ரோகங்கள் உள்ளவர்களுடைய தொகையைக் கண்டுபிடிக்க வெகுவாகப் பிரயாசைப்படுகிறார்களென்றாலும், அவர்களுடைய கணக்குச் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. வியாதி உள்ளவர்கள் உண்மை சொல்லுவதில்லை; ஜன சங்கியை எடுக்கும் நபர்களில் அநேகர் நோய் நிதானம் செய்ய முடியாதவர்கள். இப்படிப் பல வகையில் கணக்கில் தப்பு விழுந்துவிடுகிறது. ஆனால் இந்தியாவில் மாத்திரந்தான் இப்படி நடக்கிறதென்று எண்ணிவிடாதீர்கள். மற்றத் தேசங்களிலும் இதே சமாசாரந்தான். ஜன சங்கியையின் மூலம் கிடைக்கும் புள்ளி விவரங்கள் இப்படிச் சரியாக இராவிட்டாலும், அவைகளைத் தவிர நமக்கும் வேறே போக்கு இல்லை. ஒரு தேசத்தில் எத்தனை குருடர், எத்தனை செவிடர் இருக்கிறார்களென்று அறிவதற்கு ஜனக் கணிதப் புள்ளி விவரங்களைத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

அடுத்த பக்கத்தில் கண்ட வகுப்புவாரி, இந்தியாவில் நாலு பெரிய நோய்களினால் வருந்துவோரின் தொகையைக் காட்டுகிறது.

**இந்தியாவிலுள்ள குருடர்களை எல்லாம் ஓர் இடத்தில் வசிக்கச் செய்தால் அவர்களுக்குச் சென்னையைப்போன்ற ஒரு பிரம்மாண்டமான நகரமே தேவைப்படும். இப்படி லக்ஷக் கணக்கில் இருக்கும் குருடர்களைப் பற்றிய விபரங்களையும், குருட்டு நோயைப் பற்றிய விபரங்களையும் தெரிவிக்கிறது இந்த அருமையான கட்டுரை. நல்வழியி லிருந்து எடுத்தது.**

| | 1901 | 1911 | 1921 | 1931 |
|---|---|---|---|---|
| பைத்தியம் | 66000 | 81000 | 88000 | 121000 |
| ஊமை, செவிடு | 153000 | 2000 0 | 190000 | 231000 |
| குஷ்டம் | 97000 | 109000 | 103000 | 148000 |
| குருடு | 354000 | 444000 | 480000 | 602000 |

இந்தக் கணக்கைப் பார்த்தவுடன் இந்தியாவில் இந்த வியாதிகள் வருஷத்துக்கு வருஷம் அதிகமாகிக்கொண்டு வருகின்றனவென்று எண்ணிவிடக் கூடாது. 1931-ம் வருஷத்திய தொகை இவ்வளவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் முன்னைக் காட்டிலும் இப்பொழுது ஜன சங்கியை எடுக்கும் முறை அபிவிருத்தியடைந்திருப்பதே யாகும்; முந்திய கணக்கில் சேராத அநேகக் குருடர்கள் 1931-ம் வருஷத்திய கணக்கில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் எத்தனையோ ஆயிரக் கணக்கான பேர் கணக்கில் சேராதிருக்கலாம். ஆகையால் இந்தியாவில் குறைந்தது எட்டு லட்சம் குருடர்கள் இருக்கிறார்களென்று சொல்லுவது மிகையாகாது. எட்டு லட்சம் பேர் என்றால் எவ்வளவென்று அநேகருக்கு விளங்காமலிருக்கலாம். இந்தியாவிலுள்ள குருடர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரே இடத்திலே வசிக்க வைத்தால் அவர்களுக்குச் சென்னையவ்வளவு பெரிதான பட்டணம் அவசியமாக இருக்கும்.

மேலும், குருடர் ஜீவித்தாக வேண்டும். அவர்களுக்குச் சாப்பாடும் உடுப்பும் அவசியம். துரதிருஷ்ட வசமாக இந்தியாவிலுள்ள குருடர்களில் பெரும்பாலோர் பிச்சைக்காரர். ஒரு குருடனுக்கு மிக எளிய உணவும் உடுப்பும் கொடுப்பதென்றாலுங்கூட மாதம் ஒன்றுக்குக் குறைந்தது ரூ 5 ஆகும். வருஷத்துக்கு ரூ 60. இந்த விகிதத்தின் படி இந்தியாவிலுள்ள குருடர்களை ஆதரிப்பதற்கு பிரதி வருஷமும் 5 கோடி ரூபாய் ஆகும். அதாவது, அஸ்ஸாம மாகாணத்தினுடைய வருமானத்திலும் இரண்டு மடங்கு அதிகமான பணம் தேவை. இவ்வளவு பணத்துக்கு எங்கே போவது? ஆகையால் இந்தியாவிலுள்ள குருடர்களையெல்லாம் தக்கபடி ஆதரிப்பதென்பது மிகவும் பிரம்மாண்டமான ஒரு காரியம்.

குருட்டு நோயின் மோசமான குணம் என்னவென்றால், அது சிறியவர்களைக் காட்டிலும் வயது அதிகமானவர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது என்பதே. சாதாரணமாக ஊமைச் செவிடர் பிறக்கும்போதே ஊமைகளாகவும் செவிடராகவும் பிறக்கிறார்கள். ஆனால் குருடர் விஷயம் அப்படியல்ல. பிறவிக் குருடரைப் பார்ப்பது வெகு வெகு அருமை. கீழ்க்கண்ட வகுப்புவாரி 10000 ஊனரில் எந்தெந்த வயதெல்லைகளில் எவ்வளவு பேர் இருக்கிறார்களென்று காட்டுகிறது.

பைத்தியம்

| வயது | 10000-இல் | இந்திய வயது தொகைக்கும் இதற்குமுள்ள வித்தியாசம் |
|---|---|---|
| 0— 5 | 325 | ...... |
| 5—10 | 1136 | +231 |
| 10—15 | 1522 | + 34 |
| 15—20 | 1944 | + 27 |
| 20—25 | 1942 | இல்லை |

| பைத்தியம் | | |
|---|---|---|
| வயது | 10000-இல் | முந்திய... |
| 25—30 | 2137 | + 10 |
| 30—35 | 2350 | + 9 |
| 35—40 | 2310 | இல்லை |
| 40—45 | 2076 | — 11 |
| 45—50 | 1826 | — 10 |
| 50—55 | 1356 | — 22 |
| 55—60 | 1071 | — 25 |

ஊமைச் செவிடு

| வயது | 10000—இல் | முந்தின வயதுக்கும் இதற்குமுள்ள சதமான வித்தியாசம் |
|---|---|---|
| 0— 5 | 1098 | ...... |
| 5—10 | 2598 | +145 |
| 10—15 | 2722 | + 48 |
| 15—20 | 2082 | — 1 |
| 20—25 | 2099 | — 14 |
| 25—30 | 1886 | — 12 |
| 30—35 | 1583 | — 12 |
| 35—40 | 1250 | — 21 |
| 40—45 | 1086 | — 13 |
| 45—50 | 810 | — 25 |
| 50—55 | 832 | —— |
| 55—60 | 572 | — 30 |

குருடு

| வயது | 10000—இல் | முந்தின வயதுக்கும் இதற்குமுள்ள சதமான வித்தியாசம் |
|---|---|---|
| 0— 5 | 500 | ...... |
| 5—10 | 764 | + 53 |
| 10—15 | 864 | + 11 |
| 15—20 | 784 | — 9 |
| 20—25 | 856 | + 9 |
| 25—30 | 923 | + 7 |
| 30—35 | 959 | + 4 |
| 35—40 | 1150 | + 17 |
| 40—45 | 1246 | + 8 |
| 45—50 | 1546 | + 24 |
| 50—55 | 1699 | + 10 |
| 55—60 | 2018 | + 15 |

முதல் ஐந்து வயதுக்குட்பட்ட குருடர் தொகை சரியாகஇருக்குமென்று சொல்லுவதற்கில்லை; ஏனெனில் இந்தியப்பெற்ரோர்கள் தங்கள் குழந்தைகளுடைய ஊனங்களை இலேசிலே வெளியே சொல்லமாட்டார்கள்; மேலும், அந்த ஊனம் வயதாக ஆகச் சரிப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கும். தவிர, ஊமைச் செவிட்டு நோயையும் பைத்தியத்தையும் குருட்டு நோயுடன் ஒப்பிடுவது சரியாகாது. முந்திய இரண்டு வியாதிகளும், பொதுவில் பிறவி வியாதிகள்; குருட்டு நோய் அப்படியல்ல. கீழ்க்கண்ட வகுப்புவாரியைப் படித்துப் பாருங்கள்; பிறக்கும்பொழுதே குருடாகப் பிறக்கும் குழந்தைகளின் தொகை எவ்வளவு சொற்பமாக இருக்கிறதென்று கவனியுங்கள்.

பிறவியிலன்றி முதல் வருஷத்தில் குருட்டு நோயுடையவர்கள் கணக்கு

| வயது | முழுக் குருடு |
|---|---|
| 0—1 | 1,547 |
| 1—க்கு மேலே | 599,823 |
| எல்லாவயதும் | 601,370 |

வயதெல்லை உயர உயரக் குருடர் தொகையும் அதிகரிக்கிறதென்பதைக் கவனிக்கையில்,

கண்ணில் ஏற்படும் கோளாறுகளைச் சரியானபடி கவனித்துத் தக்க சிகிச்சை செய்து கொண்டால், பெரும்பான்மையான பேர் தங்களுக்குக் குருட்டுநோய் ஏற்படாமல தடுத்துக் கொள்ளக் கூடும் என்று தெரிகிறது. ஏழைகளுக்குச் சரியான வைத்தியம் செய்து கொள்ள எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. நமக்கு அது தெரியாமலில்லை. அதே சமயத்தில், பெரும்பான்மையான கேசுகளில், அவர்களுடைய ஏழ்மை அல்ல, அறிவீனமும் அலட்சியமுமே கண் பார்வை கெடுவதற்குக் காரணம் என்பதையும் நாம் அவசியம் சொல்லியே தீர வேண்டும். அதற்குச் சிறந்த அத்தாட்சியாக, அடியில் வரும் வகுப்புவாரி, இருபத்தைந்து வயதுக்கு மேலே ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கே கண் பார்வை அதிகமாகக் கெடுகிறதென்று எடுத்துக் காட்டுவதைக் கவனியுங்கள் :

## வயது, பால் வாரியாக குருடர் தொகையைக் காட்டும் கணக்கு

| வயது | ஆண்கள் | ஒவ்வொரு வயதில் இருந்தும் 100000 ஆண்களுக்கு | பெண்கள் | ஒவ்வொரு வயதில் இருந்தும் 100000 பெண்களுக்கு |
|---|---|---|---|---|
| 0— 5 | 8443 | 30 | 6,419 | 23 |
| 5—10 | 13,443 | 56 | 9,167 | 41 |
| 10—15 | 14,359 | 65 | 9,708 | 51 |
| 15—20 | 13,375 | 83 | 9,875 | 62 |
| 20—25 | 14,228 | 89 | 11,064 | 65 |
| 25—30 | 14,343 | 96 | 13,198 | 90 |
| 30—35 | 14,236 | 101 | 14,435 | 11 |
| 35—40 | 16,164 | 133 | 18,357 | 184 |
| 40—45 | 17,310 | 173 | 20,097 | 227 |
| 45—50 | 20,830 | 260 | 25,655 | 380 |
| 50—55 | 21,361 | 356 | 26,720 | 534 |
| 55—60 | 25,825 | 645 | 35,009 | 875 |
| 60—65 | 26,168 | 870 | 35,412 | 1180 |
| 65—70 | 20,038 | 1000 | 25,412 | 1270 |
| 70க்கு மேலே | 43,705 | 2000 | 55,323 | 2500 |

வயதெல்லை உயர உயரக் குருடர் தொகை அதிகரிப்பதும், ஆண்களிடையே காட்டிலும் பெண்களிடையே அதிகக் குருடர் இருப்பதும், குருட்டு நோய்க்குச் சமூக நிலைமைகள் ஒரு முக்கிய காரணமாகுமென்று காட்டுகின்றன. சமீபத்தில் கெய்ரோவில் நடந்த ஒரு மகாநாட்டில் லெப்டினெண்ட் கர்னல் ரைட் என்பவர் ஒரு வியாசம் வாசித்தார். அதில் அவர்,

"இந்தியாவிலும் இதர கீழ்நாடுகளிலும் குருட்டு நோயைத் தடுப்பதென்பது வைத்திய சாஸ்திரத்தை மட்டும் சம்பந்தித்த ஒரு விஷயமல்ல; அது சமூக, பொருளாதார நிலைமைகளையும் சம்பந்தித்த ஒரு விஷயம்" என்று சொன்னார்.

அவர் சொன்னது சரிதான். ஏழைகளிடையேதான் குருட்டு நோய் அதிக வியாபகமாக இருக்கிறது; இந்திய நடுத்தர வகுப்பினரிடையேயும் ஐரோப்பியரிடையேயும் அவ்வளவு அதிகமாக இல்லை. ஊட்டக் குறைவு, கண்ணில் ஏதாவது உபாதை ஏற்பட்டால் உடன் தானே சரியான சிகிச்சை செய்து கொள்ளாதது, வெயில் ஆகியவை தான் இந்தியாவில் குருட்டு நோய்க்கு முக்கியமான காரணங்கள். எந்தெந்தப் பிரதேசங்கள் அதிக மணற் பாங்காக இருக்கின்றனவோ, எங்கெங்கு புழுதிக் காற்று அதிகமாக அடிக்கிறதோ அங்கு தான் இந்த ஊனமுடையவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். ஆஜ்மீர், மீர்வார் ஆகிய பிரதேசங்களில் குருடர் அதிகம்; அப்படியே ராஜபுதனம், சிந்து, பஞ்சாப், ம. மா., பீரார் முதலிய பிரதேசங்களிலும். ஆனால் பசுந்தரை அதிகமாகவுள்ள திருவாங்கூர், மைசூர் முதலிய பிரதேசங்களில் அதிகமாக இல்லை. கீழ்க் கண்ட விகிதத்தைப் படித்துப் பாருங்கள் :

1931-ம் வருஷத்திய ஜனக்கணிதியின்படி 100,000 பேருக்குக் குருடர் விகிதத்தைக் காட்டும் கணக்கு

| | |
|---|---|
| ஆஜ்மீர், மீர்வார் | 386 |
| மேற்கு இந்தியா சமஸ்தானங்கள் | 395 |
| பரோடா | 329 |
| ஐக்கிய மாகாணங்கள் | 291 |
| பஞ்சாப் | 245 |
| ம. மாவும். பீராரும் | 273 |
| கொச்சி | 131 |
| மைசூர் | 100 |
| வடமேற்கு மாகாணம் | 102 |
| திருவாங்கூர் | 61 |
| அகில இந்தியா | 172 |

குருட்டு நோயில் பெரும் பகுதி தடுத்துவிடக் கூடியது; மேலும், அநேக குருடர்களுக்குச் சரியான சிகிச்சைமட்டும் செய்யும் பட்சத்தில், அவர்கள் மீண்டும் தங்கள் பார்வையை அடையப் பெறுவார்கள். ஆனால், இது தான் நமது ஜனங்களுக்குத் தெரிவதில்லை. ஒரு கண் உபாதை எவ்வளவுதான் சிறிதாயிருந்தாலும், அதற்குச் சரியான சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால், அது பார்வையை அரைகுறையாகவோ பூராவாகவோ கெடுத்துவிடக்கூடும் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. குருட்டு நோய்க்கு மிகவும் முக்கியமான காரணங்களுள் கண்காசம் (Cataract) என்பது ஒன்று. இந்தக் கண்காசம் பொதுவில், குணமாகக் கூடிய ஒரு வியாதி. 1921-ம் வருஷத்திலிருந்து 1931-ம் வருஷம்வரை பஞ்சாப் மாகாணத்திலே 170,000 பேருக்குக் கண்காசத்துக்கு ஆபரேஷன் செய்யப்பட்டதென்றும் வங்காளத்திலே 26,000 பேருக்குச் செய்யப்பட்டதென்றும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்த வகைக் கணக்குகளை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு லக்ஷம் பேர்களாவது கண்காசத்துக்கு ஆபரேஷன் செய்துகொள்கிறார்கள் என்று ஏற்படுகிறது.

கண்ணைப் பாதுகாக்கும் எளிய முறைகளைப் பற்றிப் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் சொல்லிக் கொடுக்க வேண்டும். தினந்தோறும் காலையில் பல் துலக்குவது போலவே கண்ணை யும் சுத்தப்படுத்துவது அத்தியா வசியம் என்று உபாத்திமார் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். பள்ளிக் கூடங்களிலும் வீடுகளிலும் ஜன்னல்களை எப்பொழுதும் திறந்து வைத்திருப்பதின் அவ சியத்தை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஏதேனும் கண் உபாதை அல்லது கோளாறு இருந்தால், தாமே ஆஸ்பத் திரிக்கு அனுப்பித் தக்க சிகிச்சை செய்து கொள்ளப் பண்ணவேண்டும்; அவர்களைச் சரியான போஷாக்குள்ள ஆகாரம் சாப்பிடச் செய்ய வேண்டும்.

✲

## சிங்கத்தின் குறை

மாமிசம் தின்னும் மிருகங்களுக்குள் சிங்கத்தின் இருதயமே மிகச் சிறியது!

## அப்புறம்தான் மாப்பிள்ளை!

கிழவனை அந்தக் கிராமவாசி டாக்டரைத் தேடிக் கொண்டு வந்தான். "தயவுசெய்து என் வீட்டுக்கு வந்து, என் மாப்பிள்ளையைக் குணப் படுத்துங்கள். நேற்றுக் காலை அவனைக் காலில் துப்பாக்கியால் சுட்டுவிட்டேன். ரொம்பக் கஷ்டப் படுகிறான். உடனே வரவேண்டும்" என்று வைத்தியரை வேண்டிக் கொண்டான்.

"சேச்சே! உன் மாப்பிள்ளையைப் போய்ச் சுட்டேன் என்கிறாயே? உனக்கு வெட்கமாய் இல்லை!" என்று இகழ்ந்தார் டாக்டர்.

"ஐயையோ! அதுதானே சங்கடம்! நேற்று நான் அவனைச் சுட்ட போது அவன் எனக்கு மாப்பிள்ளையாக இருக்கவில்லையே!" என்றான் வந்தவன்!

—ரீவால்

## உண்மையான காரணம்

குழந்தை வளர்ப்பிலே புகழ் பெற்ற டாக்டர் ஒருவருக்கு விருந்து தரப்பட்டது. பல தாய் மார்கள் அதில் கலந்து கொண்டார்கள்.

ஒரு தாய், "டாக்டர், குழந்தைக்கு அடிக்கடி வியாதிவருவதின் முக்கியமான காரணம் உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டா ளாம்.

"குழந்தைகளுடைய தாய்மார்களே தான் அதற்குக் காரணம்" என்றாராம் டாக்டர், வருத்தத்தோடு.

—டைஜஸ்ட்

## அபேட்சகர்

ஜனங்களை எந்த மாதிரி வலை வீசிப் பிடிப்பது என்பதைக் கண்டறிய நிறுத்தப்படும் அரசியல்வாதிக்குத்தான் "அபேட்சகர்" என்று பெயர்.

—சரோஜினி




மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத் திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச் சிக்கலை மாற்றி, ஜீரண சக்தியைக் கொடுத்து, உடலுறுதிப் பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்கு கைகண்ட மருந்து. நுரை ஈரலை வலுவாக்கி, ஆஸ்துமாவை அறவே தீர்க்கிறது. ஈரல் கோளாறு, மலச் சிக்கல், பித்தாசயக் கோளாறு, மூச்சுத் திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றிற்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப்பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளை குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸ்டாகிஸ்ட்டுகள்:

மெஸர்ஸ். அப்பா அண்ட் கம்பெனி
கெமிஸ்ட்ஸ், சைனாபஜார், சென்னை.

*Customers are requested to Communicate in English*

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது



**புரோஹித ஸ்வாஸஹரி**

**DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.**

**இந்தியாவின் புகழ்**




# லோத்ரா

**கர்ப்பாசய ரோக நிவாரணி**

**கேஸரீ குடீரம் லிட்., மதராஸ்**

EASTERNS.394

**கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்**

ஒரிஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

**சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்**

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

இன்று உலகமெங்கும் காப்பி குடிக்கும் வழக்கம் பரவிவிட்டது. முதல் முதலாக இந்தக் காப்பி எந்த நாட்டில் தோன்றியது? ஐரோப்பாவில் காப்பிக் குடியை முதல் முதலாகப் பரப்பியவர் யார்? இவற்றைச் சொல்லுகிறது இந்தக்கட்டுரை.

# காப்பியின் பூர்வீகம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

டின் பிரீடே

காப்பி, அபிசீனியா, கினியா, சூடான் நாடுகளிலிருந்து பரவி யிருந்தாலும், நாம் காப்பியைப் பற்றி அறிந்து கொண்டது அரேபியாவிலிருந்து தான். முதலில் ஜாவா, மோச்சா முதலிய இடங்களிலிருந்து வந்ததால் அந்தப் பெயர்கள் காப்பிக்கு மறு பெயர்களாகி விட்டன. பதினாறாம் நூற்றாண்டில் துருக்கி நாட்டில் காப்பி மிக முக்கியத்துவம் வாய்ந்த பானமாக இருந்தது. தன் மனைவிக்கு ஒருவன் காப்பி கொடுக்கவில்லையானால் அதனால் விவாக ரத்துக் கூட ஏற்பட்டு விடும். சராசரி மனிதன் ஒரு நாளைக்கு இருபது கோப்பை காப்பி சாப்பிடுவானாம்.

ஐரோப்பாவில் காப்பி எப்படி நுழைந்தது என்பது மிகவும் வேடிக்கையான விஷயம். 1683-ம் வருஷம் வியன்னாவில் நடந்த சண்டையில் துருக்கியர்கள் விரட்டி யடிக்கப்பட்டார்கள். அப்போது தங்கள் சாமான்களை யெல்லாம் விட்டு விட்டு ஓடினார்கள். அந்தச் சாமான்களில் ஐந்நூறு மூட்டை காப்பி விதைகள் இருந்தனவாம். ஆனால் அவற்றின் உபயோகம் ஐரோப்பியர்களுக்குத் தெரியாததலால், அவற்றை நதியில் வீசிவிட முடிவு கட்டினார்கள். அப்போது ஐரோப்பியர்களுடைய உளவாளியாக, துருக்கியர்களிடம் பழக்கம் கொண்ட, கோல்சிட்ஸ்கி என்பவன் காப்பியின் பெருமையைப் பற்றித் தெரிந்தவனாதலால், அந்த மூட்டைகளைக் காப்பாற்றினான். அவன் காப்பி வியாபாரம் செய்ய உத்தரவு பெற்று, அதை வியன்னா மக்களுடைய ருசிக்கு ஏற்றாற் போல் தயாரித்து, மிகப் பிராபல்யம் அடைந்தான். பிறகு காப்பி இங்கிலாந்தில் நுழைந்த பொழுது அது அரசியலிலும் புகுந்துவிட்டது. ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித் தனியான காப்பிக் கடைகள் ஏற்படுத்திக் கொண்டன. ஆனால் நாளாவட்டத்தில் இங்கிலாந்தில் 'டீ' தான் நிலைத்துவிட்டது. 1782-ல் நெதர்லாந்தைக் கைப்பற்ற முடியாமல் போனதால், காப்பி இங்கிலாந்துக்கு வருவது நின்றுவிட்டது. அதுவுமல்லாது அதிகமான 'டீ'யை உற்பத்தி செய்யும் இந்தியா அவர்கள் வசமான பிறகு, டீயின் ஆதிக்கம் இங்கிலாந்தில் அதிகமாய் விட்டது. கோதே என்ற பிரபல ஜெர்மன் கவி காப்பியை அடியோடு வெறுத்தாராம். காப்பியில் "காப்பின்" என்ற வஸ்து இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முக்கிய காரணமாக இருந்தவர் இவர்தானாம்.

*


அன்றலர்ந்த ரோஜாவின் நறுமணத்தைப் போல்
ரம்மியமானதும், அதன் இதழ்மேல் படிந்துள்ள
பனித்துளிபோல் மென்மையுடையதும், உங்கள்
இஷ்டத்திற்குரிய சோப்புமான விநோலியா ஒயிட் ரோஸ்,
உங்கள் சருமத்தை மிருதுவாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்
கொள்கிறது. அன்றியும் உங்களுக்கு ரோஜா மலர்களின்
பரிமளத்தை மறுபடியும் நினைவூட்டுகிறது.
விநோலியா
ஒயிட் ரோஸ் சோப்
"VINOLIA" WHITE ROSE SOAP
VWR. 24-111 TM
VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND


எல்லா வலிகளிருந்தும் விமோசனம்
Saridon
10 Saridon
BRAND ANALGESIC TABLETS.
Saridon
ஸாரிடோன்
சகல வலிகளுக்கும் சிறந்த மருந்து

# மலையும் மடுவும்

அரு. சொக்கலிங்கம்

மலை எவ்வளவு உயரமோ மடு அவ்வளவு தாழ்வானது. அதிக வித்தியாசத்தைக் குறிக்க மலையையும் மடுவையும் ஒப்பிட்டால் போதும். இந்திய அரசியல் இரட்டையர்களாகிய காந்தி—ஜின்னுவை மலைக்கும் மடுவுக்கும் ஒப்பிடுவது பொருத்தமென்றே நினைக்கிறேன். யார் மலை, யார் மடு, என்று தீர்ப்புக் கூற நான் தயாரில்லை. காந்தி மலையானல் ஜின்னு மடு. ஜின்னு மலையானல் காந்தி மடுவாவார். கொள்கை வித்தியாசத்திற்குத்தான் மலையையும் மடுவையும் ஒப்பிட்டேன்.

காந்திஜி எல்லாவற்றையும் துறந்த அரை நிர்வாணப் பக்கிரி. ஜனப் ஜின்னு சகல போகங்களையும் குறைவற அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு பிரபு. சமீப காலமாக அரசபதவிக்கு சமதையான அந்தஸ்துள்ளவரை மஹான் என்றும் மஹாத்மா என்றும் ஜனங்கள் அழைக்கிருர்கள். அதை ஒப்புக் கொள்ளக்கூட அவர் மறுக்கிருர். பின்னவரை முஸ்லிம்களின் ஏகத் தலைவரென்றும் காய்தே ஆஜம் என்றும் அழைக்கிருர்கள். அது போல் பாகிஸ்தான் ராஜ்யத்தில் சட்டமும் செய்துவிட்டார்கள். அதை அவர் ஆக்ஷேபித்ததில்லை. இருவரும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதிலிருந்து இவர்கள் பெயர் ஒரு நாளாவது பத்திரிகையில் வெளிவராமல் இருந்ததில்லை. இதனல் இருவரும் பெரிய மனிதத்தன்மை யடைந்து விட்டார்களல்லவா?

இருவரும் பெரிய மனிதத் தன்மை யடைந்தவர்களோ, சிறிய மனிதத் தன்மை யடைந்வர்களோ, அரசியலில் முக்கியஸ்தர்களாகத்திகழ்கிருர்களல்லவா? அந்நியர் ஆளும் வேறு நாட்டின் அரசியலிலுள்ள பெரிய அதிசயம் என்ன வென்ருல், யாரையும் பிரபலஸ்தர்களாக்கி விடுவதுதான். முற்றுந் துறந்த ஞானிக்கும் இடமுண்டு; சுயநலமே குடி கொண்ட பிரபுவுக்கும் இடமுண்டு; கொலை கொள்ளைக்கு அஞ்சாத முரடனுக்கும் இடமுண்டு. இவர்கள் எல்லோரும் ஒன்று கூடுவதால், இக்கால அரசியல் மேடை, களங்கமடைவதில்லை. அரசியல்வாதி உள்ளுக்குள் என்ன வேண்டுமானலும் வைத்துக் கொள்ளலாம். மேல் பூச்சு மட்டும் பளபளப்பாக இருக்க வேண்டும். பலதரத்தாரும் வந்து சேர அரசியல் மேடை எப்படி இடம் கொடுக்கிறது, இதை யார் அனுமதிக்கிருர்கள், என்று கேட்கலாம். அதுதான் யாருக்கும் இதுவரை புரியாத விஷயம். அரசியல் பிரபலஸ்தர்களாக வந்து அந்த

மேடையை ஸ்வீகரித்துக் கொள் கிறார்களே, அவர்களுக்குக் கூட அது முன்கூட்டித் தெரிந்த தில்லை. ஜனங்களை எந்தச் சமயம் கவர்ச்சி செய்ய வேண்டு மென் பது மட்டும் அவர்களுக்குத் தெரியும். ஜனங்கள் நன்மைக்கா கவே பாடுபடுவதாகவும், ஜனங் களுக்காக உயிரை விடுவதற்குக் கூட தயாரா யிருப்பதாகவும், வேறு சாராருக்குத் தாம் தான் ஏகப் பிரதிநிதி என்றும், அழகான தலைப்பைக் கொண்ட கட்சிக்குத் தலைவரென்றும், அடிக்கடி பேசிக் கொண் டிருந்தால் ஆதரிக்கிறவர் கள் கிளம்பி விடுவார்கள். அந்த அரசியல் வாதியை எவ்வளவு பேர் பின்பற்றுகிறார்களென்பது தான் அடுத்த பிரச்னை. அவ னுக்குப் பின்னல் ஒரு கும்பல் சேர்ந்து விட்டதென்று தெரிந்த மாத்திரத்தில் பத்திரிகைப் பிரதி நிதிகளும் போட்டோ காமிராக் காரர்களும் கூடி விடுவார்கள். பிறகு அவன் நினைக்காத விஷயங் களைக் கிளப்பிவிட்டு, அவன் சொல்லாத விஷயங்களை எல்லாம் பத்திரிகையில் போட்டு (அதிருஷ் டமும் அவன் பக்கம் சேரும் பட்சம்) ஒரே யடியாய்த் தூக்கி விட்டுவிடுவார்கள். பிறகு அர சாங்கம் ஏறெடுத்துப் பார்க்க ஆரம்பித்து விடும்; அடுத்த படி யாகப் பேட்டி கொடுக்கும்; அப் புறம் அவனுடைய அறிக்கை களுக்கே தனி மதிப்புத்தான். அவனை ஆதரிக்கும் ஜனங்களும் அவனுடைய பூர்வோத்திரங்களை அப்பொழுதுதான் கவனமாக ஆராயத் தொடங்குவார்கள். பிறகு பெரிய பேச்சாளனென் றும், ராஜதந்திரி என்றும், தியாகி என்றும், அஞ்சா நெஞ்சனென் றும், வீரசிங்க மென்றும், புலி என்றும், காடி என்றும் போற்ற ஆரம்பித்து விடுவார்கள். பிறகு கேட்க வேண்டுமா? ஜனங்கள் உள்ளத்தில் புகுந்து அவர்கள் நினைக்காத காரியங்களைக் கூடக் கண்டு பிடித்து ஜனங்களின் எண் ணங்களைத் தம்முடைய அறிக்கை மூலம் பிரதிபலிக்கச் செய்து விடு வார். சொன்னதையே சொல்லு வது, அல்லது தனக்கு தெரியாத ஒரு புதிரைப் போட்டு விட்டு ஜனங்களின் யூகங்களை வைத்து அதை ஒரு உருவாக்குவது, இப்ப டிப்பட்ட காரியங்களில் புகுந்து விடுவார். அந்த மாதிரியான, ஜனங்களின் தோழன், ஜனப் பிரதிநிதி, ஏழை பங்காளனுக் குப் பிறகு பாமர ஜனங்களைப் பிடிக்காது. அவர்களைக் கரை யேற்றும் கைங்கர்யத்தை தன் கையில் வைத்துக் கொண்டு பிர புக்கள் வாசம் செய்யும் மாளிகை யில் வாசஞ் செய்ய ஆரம்பித்து விடுவான். முதல் வகுப்பு வண்டி யில் தான் ஏற ஆசைப்படுவான். அதுவும் தொந்தரவாகத் தெரிந் தால் ஒரே மூச்சில் பறந்து செல் லும் ஆகாய யாத்திரையையே நி ரந்தரமாக்கிக் கொண்டு விடுவான். பிறகு அந்தப் பிரபலஸ்தரைப் பூமி யில் பார்க்க முடியாது. 'எங்கே போகிறார்? எங்கே தங்குகிறார்? எங்கே பேசுகிறார்?' என்பன வற்றைப் பத்திரிகை மூலமோ ரேடியோ மூலமோதான் ஜனங்க ளறிந்து கொள்ள முடியும். இந்த அடையாளங்களை அடைந்துவிட் டால் கொஞ்ச காலத்தில் அவர் ஏகப் பிரதிநிதியாகிவிடுவார். பிறகு அவர் பேசும் பேச்சு, அவர் செய்யும் தப்பு, எல்லாம் விலை மதிக்க முடியாத ராஜதந்திரமாகி விடும்.

மஹான்கள் அரசியலில் கலந் தாலும் அவர்கள் நிதானம் தவறு வதில்லை. தன்னை ஆதரிப்பதாகத் தோன்றும் பெரிய கும்பலைக்

கண்டு அவர்கள் மயங்கி விடுவதில்லை. அது அவர்களைக் கவர்ச்சிப்பதுமில்லை. அவர்கள் தான் கவர்ச்சிக்கப் படுவார்கள். அந்த எளிய ஜனக் கும்பலை நினைந்து நினைந் துருகுவார்கள். அவர்களை ஈடேற்றுவதிலேயே தம் காலத்தைக் கழிக்க நினைப்பார்கள். அவர்களோடு இரண்டறக் கலந்து ஜனங்களின் கஷ்டத்தை உணர்ந்து தம்மையே அர்ப்பணம் செய்து விடுவார்கள். பிறகு அரசியல் சாஸ்திரத்தையே தனித்துவிட்டும் மறைந்து விடுவார்கள்.

இந்த அரசியல் மேடையில் தான் கொஞ்ச காலத்திற்கு முன் மஹாத்மா காந்தியும் காய்தே ஆஜம் ஜின்னுவும் கலந்துகொண்டார்கள். தோள்மேல் கை போட்டுக் காட்சியளித்தார்கள். கூட்டறிக்கைவிட்டார்கள். கை குலுக்கிக் கொண்டார்கள். பேட்டி கண்டு கொண்டார்கள். காந்திக்கு வைஸ்ராய் பேட்டியளித்ததால் ஜின்னுவுக்கும் பேட்டி யளிக்க வேண்டியதாகி விட்டது. அவருக்கு 5 மணி நேரமானல் இவருக்கும் 5 மணி நேரம். அவருக்கு எத்தனை தடவையோ இவருக்கும் அத்தனை தடவை பேட்டி. இதனுல் தான் "இந்திய, அரசியல் இரட்டையர்கள்" என்று இவர்களை ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். இவர்களுக்குள் சில ஒற்றுமைகளும் பல வேற்றுமைகளும் நிறைந்திருக்கின்றன. காந்தி,ஜின்னுவின் கொள்கைக்கு இறங்கி வர முடியாது. ஜின்னு, காந்தியின்கொள்கையைத்தாவிப் பிடிக்கவும் முடியாது. இவ்வளவு வித்தியாசப்பட்ட இரட்டையர்களை, காசி ராமேசுவர மென்று சொல்வது போல் காந்தி-ஜின்னு என்றும் கட்சி மோகங்கொண்ட சிலர் இருவரையும் சம நிலையில் வைத்தும் பார்க்கிறர்கள். அரசியலில் இரு முக்கியஸ்தர்களாக இருப்பதற்காக மேதையில் சமப் படுத்திப் பேச முடியுமா? கீழே காட்டி யிருக்கும் ஒற்றுமை வேற்றுமைகளைப் பார்த்து வாசகர்கள் முடிவுக்கு வரப் பூரண உரிமை யுண்டு.

அவர்களுக்குள்ள ஒற்றுமைகள் :

இருவரும் : மனிதப் பிறவிகள்.
இருவரும் : இந்தியர்கள்.
இருவரும் : அரசியல் வாதிகள்.
இருவரும் : வக்கீல்கள்.
இருவரும் : இங்கிலீஷ் பாஷை பேசத் தெரிந்தவர்கள்.
இருவரும் : காங்கிரஸிலிருந்து பிரிந்தவர்கள்.
இருவரும் : தலைவர்கள்.
இருவரும் : கலியாணம் செய்து கொண்டவர்கள்.
இருவரும் : குழந்தைகளை யுடையவர்கள்.
இருவரும் : மூக்குக்கண்ணுடி அணிபவர்.
இருவரும் : கைகுலுக்கிக் கொள்கிறர்கள்.
இருவரும் : கூட்டறிக்கை விடுகிறர்கள்.
இருவரும் : ஒப்பந்தத்திற்கு வர முடியாதவர்கள்.
இருவரும் : கொள்கையில் பிரிந்து போகிறவர்கள்.
இருவரும் : மரணத்தை வெல்ல முடியாதவர்கள்.

வேற்றுமைகள் :

காந்தி : ஹிந்து மதத்தில் பிறந்தவர்.
ஜின்னு : முஸ்லிம் மதத்தில் பிறந்தவர்.

காந்தி: ஹிந்து மதத்திலே ஒரு மாதை மணந்து கொண்டார்.

ஜின்னா: பார்ஸி மதத்திலே பிறந்த மாதை வரித்துக்கொண்டிருக்கிறார்.

காந்திக்கு: பெண் குழந்தை இல்லை.

ஜின்னாவுக்கு: ஆண் குழந்தை இல்லை.

காந்தி: ஒரு சந்நியாசி.
ஜின்னா: ஒரு பிரபு.
காந்தி: ஒரு தியாகி.
ஜின்னா: ஒரு யோகி.

காந்திக்கு: அரசியலை விடப் பிரார்த்தனை பெரிது.

ஜின்னாவுக்கு: பிரார்த்தனையை விட அரசியல் பெரிது.

காந்தி: ஒரு லட்சிய புருஷர். அதை அடைய நேரான பாதையிலே செல்லுகிறார்.

ஜின்னா: ஒரு லட்சியவாதி. அதை அடைய எந்தக் குறுக்கு வழியிலும் பிரவேசிப்பார்.

காந்தி: இரட்டை மூக்குக் கண்ணாடி அணிகிறார்.

ஜின்னா: ஒற்றைக் கண்ணாடி அணிகிறார்.

காந்தி: ஒளிவு மறைவின்றிப் பேசுகிறார்.

ஜின்னா: நிதானித்து வார்த்தையை அளந்து விடுகிறார்.

காந்தி: பணிவுக்கு மதிப்புக் கொடுக்கிறார்.

ஜின்னா: படாடோபத்தை விரும்புகிறார்.

காந்தி: எந்தக் கட்சியையும் சேர்ந்தவரில்லை என்று சொல்லுகிறார்.

ஜின்னா: முஸ்லிம் கட்சிக்குத் தாம்தான் ஏகப்பிரதிநிதி என்று சொல்லுகிறார்.

காந்தி: இந்தியாவை துண்டாடக் கூடாதென்று சொல்லி வந்தார்.

ஜின்னா: இந்தியாவைத் துண்டாடித் தீர வேண்டுமென்று சொல்லி, துண்டாடியும்விட்டார்.

காந்தி: அகில இந்தியாவிலும் முஸ்லிம்கள்சமபாத்தியதையுடையவர்களென்று சொல்லுகிறார்.

ஜின்னா: கொஞ்சப் பிரதேசமாக இருந்தாலும் முஸ்லிம்கள் அதற்கு ஏகபோக உரிமையுடைவர்களாக இருக்க வேண்டுமென்கிறார்.

காந்தி: பிரிட்டிஷார், இந்தியாவை அப்படியே விட்டுவிட்டுப் போக வேண்டுமென்று சொன்னார்.

ஜின்னா: பிரிட்டிஷாரை; பிரித்துத் தந்துவிட்டுப் போக வேண்டுமென்று சொன்னார்.

காந்தி: காங்கிரஸில் எல்லோருக்கும் இடமுண்டு என்கிறார்.

ஜின்னா: முஸ்லிம் லீக் கட்சியில் முஸ்லிம் அல்லாதாருக்குப் பிரதிநிதித்துவ மில்லை என்கிறார்.

காந்தி: தாம் முஸ்லிம்களின் நண்பனென்று சொல்லிக் கொண்டு, தினம் குர்ஆன் ஷரீபை ஓதுகிறார்.

ஜின்னா: ஹிந்துக்கள் முஸ்லிம்களின் விரோதி ஆவார்கள், காபீர்களென்கிறார்.

காந்தி: ஹிந்து முஸ்லிம்கள் ஒரே கலாசாரமுடைய இந்தியர்களென்கிறார்.

ஜின்னா: முஸ்லிம்கள் தனிக் கலாசார முடையவர்களென்றும், அவர்கள் பாகிஸ்தானியர்களென்றும் சொல்லுகிறார்.

காந்தி: அகில உலகக் கண் கொண்டு பார்க்கிறார்.

ஜின்னா: முஸ்லிம் உலகக் கண் கொண்டு பார்க்கிறார்.

காந்திக்கு: வயது 78.
ஜின்னாவுக்கு: வயது......?
காந்தி: தன் சடலத்தை பேணிக் காப்பாற்றி வருகிறார்.

ஜின்னா: தன் அலங்கார ஆடைகளுக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறார்.
காந்தி: முழங்கால்வரை மூட்டுக் கதர் அணிகிறார்.
ஜின்னா: மெல்லிய, பகட்டான 'புல்சூட்' அணிகிறார்.
காந்தி: திட சரீரி.
ஜின்னா: மெலிவுற்றவர்.
காந்தி: மொட்டைத் தலையுடன் திகழ்கிறார்.
ஜின்னா: படிமானமில்லாத கிராப் தலையுடன் திகழ்கிறார்.
காந்தி: சாக பக்ஷிணி.
ஜின்னா: மாமிச பக்ஷிணி.
காந்தி: உண்ணா விரதி.
ஜின்னா: பெரிய விருந்துகளில் மோகங் கொண்டவர்.
காந்தி: ஒரு சத்தியாக்கிரஹி. அஹிம்சையில் பற்றுக் கொண்டவர்.
ஜின்னா: ஒரு பலாத்கார வாதி. அதில் நம்பிக்கை கொண்டவர்.
காந்தி: ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பிக்க வல்லவர். அதே போல் அதை நிறுத்தவும் தயங்கமாட்டார்.
ஜின்னா: பெரிய இயக்கத்தை ஆரம்பிக்கக் கூடியவர். அது கட்டுக் கடங்காமல் போனாலும் நிறுத்தினால்செல்வாக்குக்குறையுமென்று நினைப்பவர்.
காந்தி: மதம் அழியாத வஸ்து என்கிறார்.
ஜின்னா: மதத்திற்கு ஆபத்து வந்து விட்ட தென்கிறார்.
காந்தி: ஒரு கிராமக் குடிசையில் வாழ்கிறார்.
ஜின்னா: ஒரு பட்டணத்து மாளிகையில் வசிக்கிறார்.
காந்தியை: சிஷ்யர்கள் சூழ்ந்து நிற்கிறார்கள்.
ஜின்னாவை: வேலைக்காரர்கள் சூழ்ந்து நிற்கிறார்கள்.
காந்தி: கால்நடை யாத்திரை வாசி.
ஜின்னா: மோட்டார்வாசி.
காந்தி: பிரிக்கப்படாத இந்தியாவின் பதவி மோகமற்ற தலைவர்.
ஜின்னா: பாகிஸ்தான் பிரதேசத்திற்கு தலைவராகவே பிறந்தவர்.
காந்தி: ரத்தம் சிந்துவதைக் கண்டு சகிக்க மாட்டேனென்கிறார்.
ஜின்னா: ரத்தம் சிந்தியாவது பாகம் பெறுவே னென்றார்.
காந்தி: காங்கிரஸில் நாலணா மெம்பராகக்கூட இல்லை.
ஜின்னா: முஸ்லிம் லீகின் ஜீவிய பிரசிடெண்டு.
காந்தி: ஜின்னாவைக் காண அவருடைய ஜாகைக்கு ஓடோடிச் செல்லுவார்.
ஜின்னா: பிடிக்காத சமயம் அவரை வரவேற்கக் கூட மறுப்பார்.
காந்தி: ஜெயிலில் அடிக்கடி கிடந்து வதங்கியவர்.
ஜின்னா: ஜெயிலுக்கு போகாமலே காலந் தள்ளியவர்.
காந்தி: மூன்றாவது வகுப்புப் பிரயாணி.
ஜின்னா: முதல் வகுப்புப் பிரயாணி.
காந்தி: பல்லை இழந்தவர்.
ஜின்னா: பொய்ப் பல்லைப் பெற்றவர்.
காந்தி: பிறரிடம் யாசிப்பவர்.
ஜின்னா: பணத்துடன் நேசிப்பவர்.
காந்தி: ஒவ்வொன்றும் கடவுள் செயலால் நடக்கிற தென்கிறார்.
ஜின்னா: ஒவ்வொன்றும் தன் செயலால் கைகூடி வருவதாக நினைக்கிறார்.
காந்தி: ஒரு வேதாந்தி.
ஜின்னா: அதில் நம்பிக்கையற்றவர்.

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

# சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

## சூதகத்தை நிறுத்தியது



குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தி யடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)
6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி)

Mrs. P. DEVEE, F.D.S. (M.S)
Tollygunge, : : CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள்: ஹாரி அண்ட் சன், 93, சைனு பஜார் ரோட், சென்னை
ராகவன் அண்ட் கம்பெனி
ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோட், பெங்களூர் சிடி

தென் சீனாவில் சியாங் கே ஷேக்கின் ஆட்சியில் பஞ்சம், பட்டினி, காசு பெறாத காகிதப் பணம் முதலியவைகளுக்குப் பஞ்சமே இல்லை! ஆனால் வடசீனாவிலோ பொது வுடைமையினர் ஆட்சியின் கீழ் தேசம் சுபிட்சமாக இருக்கிறது. இப்படிப்பட்ட அருமையான அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கும் தலைவர் மா சே - துங்கின் வாழ்க்கைச் சித்திரமே இக்கட்டுரை. கோடிக் கணக்கான மக்களின் இதயத்தை ஆட்கொண்ட இந்தத் தலைவரின் குணாதிசயங்கள் நம்மையும் ஆட்கொள்ளுகின்றன. எவ்ரிபடிஸி லிருந்து.



# மா சே துங்

ராபர்ட் பெயின்

சீனாவின் கம்யூனிஸ்ட் தலைவரான மா சே - துங்குடன் மூன்று மணி நேரம் அமர்ந்து அளவளாவிக்கொண் டிருந்தேன். முதலில் அவரைப் பார்த்ததும், பெரிய மனிதர்களைக் காணும் போது ஏற்படும் படபடப்பு எதுவும் எனக்கு ஏற்படவில்லை. அவ்வளவு சாதாரணமான மனிதராகத்தான் இருந்தார், மா சே - துங். அப்போது அவர் கறுப்பு ஜோடுகளையும் பழுப்பு நிறமுள்ள கம்பளிச் சட்டையையும் தரித்திருந்தார்.



மா சே - துங்

அவர் என்னுடன் கையைக் குலுக்கிய மாதிரியைப் பார்த்ததுமே, அவருடைய கையில் ஏற்பட்டிருந்த பலவீனத்தை நான் தெரிந்துகொண்டேன். அந்திய நாட்டினர் ஒடித்து நொறுக்கிய அவருடைய கரங்களில் ஏற்பட்டிருந்த அந்த பலவீனத்தையும் அவர் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவருடைய கைகள் குடியானவனுடைய கைகளைப் போல் பெரியனவாக இருந்தன.

மா சே - துங் ஒரு ஸ்டூலின் மேல் அமர்ந்து கொண்டு, மற்றொரு ஸ்டூலை எனக்கும் அவருக்கும் மத்தியில் இழுத்துப் போட்டார். அதிலுள்ள சிற்றுண்டிகளைக் காலி செய்ததும், அவர் உள்நாட்டுப் போர், சோஷியலிஸம், சீனா போன்ற முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு ஆயத்தமானார். ஆனால் நான் அவருடன் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்காகப் போகவில்லை. அவருடைய கவிதைகளை அவரிடமிருந்து வாங்கி அவற்றை மொழி

பெயர்ப்பதற்காகத்தான் நான் போனது. இதைத் தெரிவித்ததும் அவர், "அந்தக் கவிகளெல்லாம் நல்ல கவிகளல்ல—மிகவும் மோசமானவை. பொழுது போக்குக்காகத்தான் நான் கவிதை எழுதுகிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

இந்தச் சிரிப்பு விளையாட்டெல்லாம் முடிந்தது. புதிய ஜனநாயகம், கூட்டு அரசாங்கம் முதலிய நூல்களை ஆணித்தரமாகவும் தர்க்க வாத பலத்துடனும் எழுதிய மா சே-துங் அமைதியாகவும், தர்க்க ரீதியாகவும் உள்நாட்டுப் போராட்டத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். பேச்சின் நடுவே, ஸ்பெய்னில் நடந்த உள்நாட்டுப் போரில் குடியரசுக் கட்சியினர் ஜெர்மானிய பீரங்கிப் படையிடம் தோற்று விட்டது சம்பந்தமாக நான் ஏதோ சொன்னேன். உடனே மா சே-துங், "ஆனால் ஸ்பெய்ன், சீனா ஆக முடியுமா? அன்று 80 லட்சம் பேர் பிராங்கோ (ஸ்பெய்ன் சர்வாதிகாரி) வை எதிர்த்துப் போரிட்டனர். ஆனால் இன்று சீனாவில் போரிடக் கூடிய நாங்களோ மொத்தம் 13 கோடி இருக்கிறோம். ஸ்பெய்ன் குடியரசு மொத்தம் மூன்று வருஷகாலம் தான் போராடியது. நாங்கள் இருபத்தொரு வருஷங்கள் போராடி வந்திருக்கிறோம். ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை எங்களுடைய லட்சியம் சமாதானமே ஒழிய, சண்டையை நீடித்து நடத்த வேண்டுமென்பதல்ல" என்றார். மேலும் அவர் கூறியதாவது:

"வெளி நாடுகளிலிருந்து கொண்டு சிலர் கோமின்டாங்குக்கு (சியாங் கே ஷேக்கின் கட்சி) ஆயுதங்கள் கொடுத்து உதவி வருகின்றனர். இப்படிக் கொடுப்பதை உடனே நிறுத்த வேண்டும். பிற நாடுகளிலுள்ள ஜனநாயக எண்ணம் படைத்த மக்களெல்லாம், இந்த மாதிரி ஆயுதங்கள் அனுப்புவதை எதிர்த்து நிற்க வேண்டும். இந்த நாட்டில் ஜனநாயகம் நிலவக் கூடாது என்று விரும்பும் சிலர் வெளி நாடுகளில் இருக்கிறார்கள். இவர்கள் சீனாவில் உள்ள பிற்போக்குத்தனமானவர்களுடன் சேர்ந்து ஒத்துப்பாடுகிறார்கள். ஆனால் அவர்கள் இதை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது:

"யந்திர பலத்தால் எங்கள் மீது போர் தொடுத்தாலும் நாங்கள் போராடத்தான் செய்வோம். அவசியம் ஏற்பட்டால் எங்கள் வெறுங் கைகளாலும், கால்களாலும் நாங்கள் போராடத் தயார்.

"தோற்று விடுவோம் என்ற பயமே எங்களுக்குக் கிடையாது. ஏனென்றால் நாங்கள் தோல்வியடையப் போவதே இல்லை."

இதன் பிறகு தம்முடைய சிறிய அரசாங்கத்தின் நோக்கங்களைப் பற்றிக் கூறினார். உள்நாட்டுப் போரில் இரண்டு கட்சிகளுமே ஜெயிக்கப் போவதில்லையென்றும், உள்நாட்டுப் போரை இப்பொழுதும் எப்பொழுதும் சீனாவினால் தாங்க முடியாது என்றும், சீனாவில் கூட்டு சர்க்கார் ஏற்படுத்துவதுதான் நல்லது என்றும் கூறினார். சில நிமிஷங்களுக்குப் பின் அவர் எழுந்து தம் வீட்டுக்குள் போய் விட்டார்.

மா சே-துங்கை உலகம் நன்கு அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் இன்று இவரைப் போன்ற பாண்டித்தியமும், கவித்துவ சக்தியும்

படைத்த அரசியல் தலைவர் எவருமே இல்லை. இவருடைய கவிதைத் தொகுதி ஒன்று அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் இவருடைய கவிதைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. பென் சியன் ஷீ என்ற அவருடைய கவிதைத் தொகுதி ஒன்று எங்கோ இருக்கத்தான் இருக்கிறது.

பென் சியன் ஷீ என்றால் 'மணற் காற்றுக் கவிதைகள்' என்று அர்த்தம். இது ஒருவேளை தற்போது ஓட்டமும் நடையுமாக இருக்கும் சீன வீரர்களைக் குறிப்பதாக இருக்கக்கூடும். இந்தக் கவிதைத் தொகுதி அச்சிடப்பட்டிருக்கும் என்றால், ரகசியமாகவே அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். யேனன் (இதுதான் சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் தலை நகரம்) பிரதேசத்தில் இப் புத்தகத்தின் பிரதி கிடைக்கவே இல்லை. தம் கவிதைகளைப் பற்றி சீனாவிலோ அல்லது வெளி நாடுகளிலோ யாருக்கும் தெரிய வேண்டியதில்லை என்கிறார் மா சே-துங்.

தம் கவிதைகளை ஏதோ பொழுது போக்குக்கென்று எழுதப்பட்ட, பயனற்ற, மோசமான கவிதைகள் என்று மாசே-துங்கே சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஒரு புதிய போக்கைச் சிருஷ்டித்துள்ள அவர் கவிதைகள் வெளிவராதது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அவருடைய வசன நடையும் பிரமாதமாக இருக்கிறது. இன்று சீனாவில் எழுதப்படும் கவிதைகள் யாவும் 'கை எழுத்துப் பிரதியாகவே இருந்து வருகின்றன என்பது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும்.

மா சே-துங்கின் கவிதைகளில் எனக்குக் கிடைத்த ஒன்றைக் கீழே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறேன்:

"நீண்ட தூரம் அணி வகுத்துச் செல்ல வேண்டுமே என்று செஞ்சேனையில் உள்ள எவரும் அஞ்சவில்லை. ஆயிரக்கணக்கான மலைச் சிகரங்களையும், ஆயிரக்கணக்கான நதிகளையும் நாம் மிகவும் துச்சமாகக் கருதிவிட்டோம். ஐந்து மலைகள் நமக்கு முன்னால், நொறுங்கிப் போன நீரலையாகப் போய்விட்டன. வூலியாங் மலைகள் எல்லாம் நமக்கு ஏதோ பச்சை நிறமான கூழாங் கற்களாகி விட்டன.

" 'பொன் மணல்' நதி பாய்ந்து மலைச் சிகரங்கள் வெதுவெதுப்பு ஏறியிருந்தன. டாரு நதியின் மேலாக உள்ள இரும்புப் பாலம் குளிரால் ஜில்லிட்டிருந்தது. மின் மலையின் ஆயிரக்கணக்கான பனிக்கட்டியின் அடுக்குகளையும் குஷியாகக் கடந்து, கடைசியாக இருந்த கணவாயையும் தாண்டி வந்து விட்டோம். தாண்டி வந்த மூன்று சேனைகளும் புன்னகை புரிந்தன."

மா சே-துங் தம்மைப் பற்றிப் பேசிக்கொள்ளுவதையே வெறுக்கிறார் என்று யேனன் முழுவதிலும் உள்ளவர்கள் கூறினார்கள். கால்கன் என்னும் இடத்தில் மா சே-துங்கை பன்னிரண்டாம் பிராயத்திலிருந்து அறிந்த ஒருவர் இருக்கிறார். அவருடைய பெயர் ஹ்ஸியாவோஸான் என்பதாகும். அவர் ஒரு தினசரிப் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர்.

இவர் ஹூனனில் மா சே-துங் பிறந்த ஹிஸியாங்-டங் என்னும் ஊரில் பிறந்தவர். அநேக காலம் சீனாவை விட்டுப் போய் பிரான்ஸிலும், ருஷ்யாவிலும் கல்வி

பயின்றார். ஆனாலும், அந்தச் சந்தர்ப்பங்களி லெல்லாம் மா சே-துங்குடன் கடிதப் போக்கு வரவு வைத்துக் கொண்டிருந்தார். அவர் என்னிடம் கூறியதாவது:

மா சே—துங் ஒரு புதிரைப் போலவே இருக்கிறார். அவரைப் பற்றி பரிபூரணமாக வெளியில் எவருமே அறிந்துகொண்டதில்லை. எல்லோரையும்விட அவருடன் எனக்குத்தான் நீண்ட பழக்கம் என்றாலும்கூட, அவருடைய இதயத்தின் ஆழத்தை என்னாலும கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் முதல் முதலாக அவரைச் சந்திக்கும்போது அவருக்கு வயது பதினாறு; எனக்குப் பன்னிரண்டு. அப்போது கையில் ஒரு புத்தகக் கட்டை வைத்துக் கொண்டு ரோடு வழியாக வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். இதற்கு முன்னாலும் அவரை நான் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவர் புத்தகங்களுடன் தான் காட்சி யளிப்பார். சில நாட்களுக்குப் பின் நான் அவருக்கு ஒரு புத்தகத்தைப் படிக்கக் கொடுத்தேன். மகா பீட்டர், வெல்லிங்டன், வாஷிங்டன், லிங்கன், ரூஸோ, மாண்டிஸ்க்வோ, நெப்போலியன் போன்ற இருபதின்மரைப் பற்றிய கட்டுரைகள் அடங்கிய புத்தகம் அது. அந்தப் புத்தகத்தை ஒரே நாள் இரவில் படித்து முடித்து விட்டு, மா சே—துங் என்னிடம் திருப்பிக் கொடுத்தார். அப்போது "இவர்களைப் போன்ற பெரியவர்கள் சீனவுக்கு இன்று வேண்டும்" என்றார்.

1911-ல் அவருக்கு வயது பதினெட்டு. கட்டாய ராணுவச் சட்டப்படி அவர் ராணுவத்தில் சேர்க்கப்பட்டார். அப்போதும் அவர் ஏராளமாகப் படித்துக் கொண்டுதான் இருந்தார். முக்கியமாக, ஆடம்ஸ்மித், டார்வின், ஸ்பென்ஸர் முதலியோரின் நூல்களையே அப்போது அவர் வாசித்துக் கொண்டிருந்தார். இந்த நூல்களை யெல்லாம், புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாளராகிய யென் பூ சீனமொழியில் அழகான நடையில் மொழிபெயர்த்திருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கியாங் கான் பூ என்பவர் சோஷியலிஸத்தைப் பற்றி எழுதிய புத்தகத்தை மா சே—துங் வாசித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் சீன மொழியில் எழுதப்பட்ட மற்ற புத்தகங்களைப் போன்று அரைகுறையான விவரணங்களுடன் எழுதப்பட்ட புத்தகம்தான் அது என்றாலும், மா சே துங் முதல் முதலாக அதன் மூலமாகத்தான் சோஷியலிஸத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவருடைய அனுதாபங்கள், பாண்டித்தியம், யுத்த வாழ்க்கையின் நினைவுகள் எல்லாம் அவருக்கு ஒரே முடிவைத்தான் காண்பித்தன—அதாவது தாமும் ஒரு சோஷியலிஸ்ட்டாக மாறுவது தான். இதற்குப் பிறகு அவர் கம்யூனிஸ்ட் பிரகடனம், காட்ஸ்கியின் வர்க்கப் போராட்டம், மற்றொருவர் எழுதிய சோஷியலிஸத்தின் சரித்திரம் ஆகிய மூன்று புத்தகங்களையும் வாசித்தார். இந்தப் புத்தகங்களைக் கண்டு அவர் மிகவும் பிரமித்துவிட்டார்.

அந்தச் சமயத்தில் அவருக்கு வாத்தியாராக ஆகவேண்டுமென்ற ஆசை. வாத்திமைத் தொழிலில்தான் அவருக்குப் பிரியம் என்பதனல் அவர் அப்படி ஆசைப்பட்டார் என்று சொல்ல

முடியாது. வாத்தியாராக இருந்தால் படிப்பதற்கும் எழுதுவதற்கும் போதுமான அவகாசம் கிடைக்கும் என்பதே அவர் அபிப்பிராயம். எழுத்தாளராக ஆகவேண்டுமென்று அவருக்கு ஒரே பைத்தியம். காலையில் நூல் நிலையத்திற்குப் போவார். அப்புறம் சாப்பாட்டுக்காக மட்டும் வெளியில் வருவார். வந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டு, பழையபடியும் நூல் நிலையத்திற்குப் போய் உட்கார்ந்து படிக்கத் தொடங்கி விடுவார்.

இவர், கையிலே காசில்லாத ஆசாமியாக இருக்கவே, பெற்றோர்களுடைய எச்சுக்கு ஆளாக வேண்டி ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இவர் மத்தியதரப் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். 'பிரவேசப்' பரீக்ஷையில் அருமையான மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி பெற்றார். பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர், இவர் எழுதிய ஒரு வியாசத்தைக் கண்டு வியந்து அதைப் பள்ளிக்கூடத்தின் சுவரிலே எல்லோரும் படிக்கும்படியாக ஒட்டி வைத்தார். இவ்வளவு கொஞ்ச வயதுள்ள பையன் இப்படி அழகாகவும் எழுத முடியுமா என்ற சந்தேகம் தலைமை ஆசிரியருக்கு. இதே சமயத்தில்தான் மா சே-துங் சீனாவின் சரித்திரத்தை ஆழ்ந்து படிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

பல போர்களில் இவர் வெற்றி பெற்றிருக்கிறார். இந்த போர்த் தந்திரத்தை இவர், பரந்த புத்தகப் படிப்பு, விவசாயிகளுடன் கொண்டிருந்த தொடர்பு, பழங் காலக் கதைகள், பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு சம்பவம் முதலியவற்றின் உதவியால் கற்றுக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் இவர் படித்துக்கொண் டிருந்த போது ஒரு நாள் பல யுத்த வீரர்கள் வந்து பள்ளிக்கூடக் கட்டிடம் தங்களுக்கு வேண்டுமென்று சொல்லி அதைக் கைப் பற்ற முற்பட்டார்களாம். இந்த மாதிரிக் காரியம் சீனா வெங்கும், இப்போதும் நடைபெற்று வருகிறது. யுத்த வீரர்களுக்கு ஏற்ற பெரிய விடுதிகளாக இருக்கக் கூடியவை சீனாவில் பள்ளிக்கூடங்கள் தான். மேற்கூறியபடி ராணுவ வீரர்கள் வந்து பாடசாலையைக் கைப்பற்ற எத்தனிக்கையில், மா சே-துங் பாதுகாப்புப் போர் நடத்த ஏற்பாடு செய்தார். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கூட இவர் ராணுவப் பயிற்சி யளித்தார். இவர் இட்ட கட்டளைகளுக்குப் பள்ளிக்கூடத்தின் பெரிய பெரிய போராசிரியர்கள் கூடப் பணிந்தார்கள் என்றால், இது ஓர் அதியாச்சரியமான செய்தி அல்லவா?

பள்ளிக்கூடத்தைப் பாதுகாப்பதற்காக சாங்க்ஷாப்பகுதியில் ஆயுதங்களையும், மருந்துகளையும் நாங்கள் சேகரித்தோம். பள்ளிக்கூடத்திற்கு உள்ளே புக விடாதபடி அந்த ராணுவ வீரர்களை வெளிப்புறத்திலேயே நாங்கள் தடுத்து நிறுத்தினோம். அப்போது மா சே-துங் சொன்னர், "நான் ராணுவத்திற்குத் தலைமை வகிப்பது இதுதான் முதல் தடவை" என்று. ஆனால், இது கடைசித் தடவையாக இருக்காது என்பதை உணர்ந்து கொண்டவர் போலக் காணப்பட்டார் மா சே-துங்.

இப்போது அவருக்கு ஐம்பத்து மூன்று வயதாகிறது. தம் வாழ் நாளில் அவர் அநேக காரியங்களைச் சாதித்திருக்கிறார். ராணுவப் பட்டாளங்களுக்குத் தலைமை வகித்து அவற்றை நடத்

திச் சென்றிருக்கிறார். பழைய பிற்போக்குவாதியான ஹூ ஹான்-மின் என்பவருக்குக் காரியதரிசியாக இருந்திருக்கிறார். முன்னால் கான்ட்டன் நகரத்திலிருந்து வெளியான, "அரசியல் தினசரி" என்ற கோமின்டாங் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார். கோமின்டாங் மத்தியக் கமிட்டியின் கீழ் பிரசார டைரக்டர்—ஜெனரலாக இருந்தார்; அந்தப் பதவியை வகித்து வந்த வருஷத்தில்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டார்.

கட்சியில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன; அநேக சண்டைகள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் அவர் ஞாபகத்தில் இல்லை. பரம தரித்திரனாக அவர் ஹூனான் மாகாணத்தின் ஜில்லாக்களில் வெயிலுக்கு மறைப்பாக ஒரு தொப்பியையும் வெள்ளை நிறமான சட்டையையும் கால் சட்டையையும் செருப்புக்களையும் தரித்துக்கொர்ண்டு நாடோடியாகச் சுற்றி அலைந்து, விவசாயிகளை ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரட்டியநாட்களைநினைவுப்படுத்திப் பார்ப்பதில்தான் அவருக்குப் பரம சந்தோஷம்.

நல்ல தேகபலம் உடையவர் மா சே-துங். தம் வாலிபத்தில் அவர் உடலை நன்கு பேணிக்கொள்ளுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். கிராமாந்திரப் பிரதேசங்களில், வெயிலானாலும், மழையானாலும் சரி, சதாகாலமும் சுற்றி அலைந்துகொண்டிருப்பதில் அவருக்குப் பிரியம் அதிகம். இப்போது தம் தேக சுகத்தை கவனமாகப் பேணிவருகிறார்; மிகவும் கொஞ்சமாக மிளகு சேர்த்துக்கொள்ளுகிறார்; மிகவும் குறைவாகச் சிகரெட்டு குடிக்கிறார்; அவசிய மிருந்தாலொழிய இரவில் வெகு நேரம் கண்விழித்து இவர் இப்போது படிப்பது கிடையாது.

அவர் சாதாரணமாகச் சம்பாஷணை செய்து கொண்டிருக்கும்போது அவருடைய குரல் இனிமையாக இராது. கூட்டங்களில் அவர் பேசும்போது, சகல அம்சங்களிலும் அவர் ஒரு குடியானவக் கிழவனைப்போலக் காணப்படுவார். பேசும்போது இவர் நாடகபாணியில் பேசுவது கிடையாது. மிகவும் சுபாவமாகப் பேசுவதுபோலவே பேசுவார். விஞ்ஞான ரீதியில் விஷயங்களை எவ்வளவு துல்லியமாக எடுத்துச் சொல்ல முடியுமோ அவ்வளவு துல்லியமாகச் சொல்லுவதில்தான் அவருக்குச் சந்தோஷம். இப்படி வெள்ளையாகப் பேசுகிறவரானாலும் மா சே-துங் கற்பனா சக்தியுள்ள கவியாக இருக்கிறார். ரகசியமாகச் செய்துவரும் ஏதோ ஒழுக்கக் கேடான காரியத்தைப் போலவே அவருடைய கவிதை மறைவாக இருக்கிறது! எப்படித் தெரியுமா? அவர் தம் கவிதைகளை, தம்முடைய, மிக நெருங்கிய நண்பர்களான சூ தே அல்லது லின் பி—சூ போன்றவர்களைத் தவிர வேறு யாரிடமும் காண்பிப்பதே கிடையாது.

நான், சுமார் பத்து வருஷ காலம் ருஷ்யாவில் இருந்து, 1939-ம் வருஷம் மே மாதத்தில்தான், உரும்ச்சி, லான்சௌ, ஸையான் மார்க்கமாகத் திரும்பி வந்தேன். வந்து பார்க்கும்போது, மா சே-துங் யாதொரு மாறுதலும் அடையாமல், முன்னால் பார்த்ததுபோலவே இருந்ததுதான் மிகவும் அதிசயமான விஷயம்.



படம்: ஆர். கிருஷ்ணன

கங்கா ஸ்நானம் ஆச்சு!



வரிப்புடவை

படம் எம். டி. செல்லையா



படம்: எம். டி. வின்சென்ட்

வரிக்குதிரை



எட்டயபுரம் பாரதியார் மண்டபம்



டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு டாரிப் போர்டு அங்கத்தினர்



மைசூர் பிரதமர் கே. சி. ரெட்டி



படம் : ஏ. எஸ். ராமச்சந்திரமூர்த்தி

பெங்களூர் விஸ்வேஸ்வரபுரத்தில், மைசூர் சமஸ்தானப் போலீஸ் அடக்குமுறையைப் பொருட்படுத்தாமல், பொதுமக்கள் காந்தி ஜெயந்தி கொண்டாடிய காட்சி



வெல்லிங்டன் விமான நிலையத்தில் ஷேக் அப்துல்லா; கைகளில் பண்டித நேருவின் பேரனை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.



தமிழ்நாடு காங்கிரஸ் சேவாதளத் தொண்டர் படை அணிவகுப்பைப் பார்
யிடுகிருர் த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ காமராஜ்



சென்னையில் கூடிய இனும் விவசாயிகள் மகாநாட்டுப் பிரதிநிதிகள்.

உட்கார்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம் :—2. சி. என். அண்ணாத்துரை 3. ப. ஜீவானந்தம் 4. காளா வேங்கடராவ் 6. கன்னியப்பன்

சீனாவில் வருஷக் கணக்காக உள் நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் பொது மக்களைக் கொள்ளை கொள்ளையாகப் பலியிட வேண்டி நேரிடுகிறது. இப்படிப் பொது மக்கள் யாவரும் உயிர்த்தியாகம் செய்வதால் கிடைக்கும் லாபத்தை அனுபவிப்பவர்களோ விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில குடும்பத்தினர். அந்தக் குடும்பங்கள் எவை?—கட்டுரையைப் படியுங்கள்.

# உள் நாட்டுக் கலகம் ஏன்?

●

ஆர். ராமநாதன்

“சீனப் புதிர்” என்று சொல்லி, சீனத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தட்டிக் கழிப்பவர்கள் பலர். இன்று சீனத்தில் குமுறும் “உள் நாட்டுக் கலக”த்தையும் இந்தக் கண்கொண்டு பார்ப்பவர்கள் கணக்கற்றோர். சட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரத்தைக் கவிழ்க்கச் சீனக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் போர் என்று இன்றைய ஜனங்களின் விடுதலைப் போரை வர்ணிப்பவர்களும் இருக்கிறார்கள். இது உண்மையா? நீண்ட காலம் ஜப்பானியப் பாசிஸத்தை எதிர்த்துப் போர் புரிந்த சீனர்கள் மீண்டும் ஏன் போர் புரிகிறார்கள்? அமெரிக்கப் பத்திரிகைகளில் சில எழுதுவது மாதிரி இது விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலர் நடத்தும் யுத்தமா?

இன்று சீனத்தில் நடக்கும் போர் முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் நடக்கும் போர்; ஜனநாயகத்திற்கும் எதேச்சாதிகாரத்திற்கும் நடக்கும் போர் இது. சியாங்காய் ஷேக்கின் தலைமையில் அணிவகுத்து நிற்கும் பிற்போக்காளர்களும், புதிய ஜனநாயக சர்க்காரை சீனத்தில் ஸ்தாபிக்க விரும்பும் ஜன நாயக வாதிகளும் சீனத்தின் விதியை இன்று மஞ்சூரியா போர்க்களத்தில் நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள். இது கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் நடக்கும் போர் அல்ல; ஆனால், ஜனங்களுக்கும் ஜனங்களின் விரோதிகளுக்கும் நடக்கும் போர் இது.

இந்தப் போரை எந்தப் பெயரில் அழைத்தாலும், இதன் உண்மையான தன்மையை யாராலும் மறைக்க முடியாது. சியாங் ஆட்சி சீனத்தை அழிவு என்னும் அதல பாதாளத்திற்கு இழுத்துச் சென்று விட்டது. பணவீக்கத்தால் சீனத்தின் பொருளாதாரம் சீர் குலைந்து விட்டது. வறுமை மக்களை அரித்துத் தின்னுகிறது. சியாங்கின் பத்தொன்பது வருட ஆட்சி ஜனங்களுக்கு அளித்த பரிசு வறுமை, கொடுமை, மரணம் ஆகியவைதான். இதை எதிர்த்துத்தான் இன்று சீனர்கள் போர் புரிகிறார்கள். இதனால்தான் சியாங்கின் படை தோல்வி மேல் தோல்வி அடைந்து வருகிறது. சியாங்கின் வீழ்ச்சியில் ஜனங்கள் விமோசனத்தைக் காண்கிறார்கள்.

சீனாவை வறுமைப் படுகுழியில் வீழ்த்தின பெருமை சீனத்தை ஆளும் நான்கு குடும்பங்களுக்கு—சியாங், கங், சூங், சென்ஸ் ஆகிய குடும்பங்களுக்கு—உரித்தானது. இந்த நான்கு குடும்பங்களின் தனிச்

சொத்து இரண்டாயிரம் கோடி டாலர்; இந்தக் குடும்பங்கள் தான் கோமின்டாங் கட்சியை நடத்துகின்றன; இந்தக் குடும்பங்கள் தான் சியாங் சர்க்காரை நடத்துகின்றன. முக்கியமான பதவிகளை எல்லாம் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வகிக்கிறார்கள்.

சீனத்தின் பொருளாதாரத்தையும் இந்தக் குடும்பங்கள் தான் நிர்ணயிக்கின்றன. சீனத்திலுள்ள நான்கு பெரிய பாங்கிகள் இந்தக் குடும்பங்களுக்குச் சொந்தம். சீனத்திலுள்ள ஏனைய பாங்கிகள் எல்லாம் இந்த நான்கு பாங்கிகளுக்கு உட்பட்டவை. எனவே, அந்தக் குடும்பங்கள் நினைத்த மாத்திரத்தில் ஏனைய பாங்கிகளைக் கவிழ்க்க முடியும்; நினைத்த மாத்திரத்தில் சீனத்தின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்க முடியும்.

இந்தப் பாங்கிகள் பெரிய தொழிற்சாலைகளில் பங்குகள் எடுத்திருக்கின்றன. எனவே, பெரிய தொழிற்சாலைகள் அத்தனையும் இந்தக் குடும்பங்களுக்குச் சொந்தம்.

பெரிய தொழிற்சாலைகளை நிர்வகிப்பதன் மூலமும், ஏராளமான பணம் வைத்திருப்பதன் மூலமும், இந்தக் குடும்பங்கள் வர்த்தகத்தையும் நிர்வகிக்கின்றன. உள் நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வர்த்தகமும் இந்தக் குடும்பங்களின் குத்தகை.

பாங்கிகளையும், தொழிற்சாலைகளையும், வர்த்தகத்தையும் நிர்வகிப்பதுடன் இந்தக் குடும்பங்கள் திருப்தி அடைந்து விடவில்லை. அவை விவசாயத்தையும் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்தின. மொத்த நிலத்தில் பெரும் பகுதி இந்தக் குடும்பங்களுக்குச் சொந்தம். இந்தக் குடும்பங்கள் சீன விவசாயிகளை இரக்கமின்றி உறிஞ்சுகின்றன. பஞ்சம் சீனத்தில் அடிக்கடி தலை தூக்குவதற்குக் காரணம்—ஏன், நிரந்தரமாகச் சீனத்தில் பஞ்சம் குடி கொண்டிருப்பதற்குக் காரணம்—இந்தக் குடும்பங்களின் இரக்கமற்ற சுரண்டல் தான்.

தொழிலையும், விவசாயத்தையும் அபிவிருத்தி செய்வது இந்தக் குடும்பங்களின் நோக்கம் அல்ல. லாபம் ஒன்றுதான் இந்தக் குடும்பங்களின் நோக்கம். எனவே, லாபத்திற்காக இந்தக் குடும்பங்கள் தேசத்தின் நன்மைகளைப் பலியிடுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டு. இந்தக் குடும்பங்கள் அமெரிக்க முதலாளிகளுடன் சமீபத்தில் செய்துகொண்ட ஒப்பந்தங்கள். ஸ்ரீமதி சியாங்கைத் தலைவராகக் கொண்ட "ஸினோ அமெரிக்கன் இன்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷ"னும், ஜெனரல் செனல்டு செய்து கொண்ட ஒப்பந்தமும் இந்தக் குடும்பங்களின் உண்மையான தன்மையைப் புட்டுக் காட்டுகிறது. சீனுவின் வெளி நாட்டு வர்த்தகத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டது இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கப் பொருள்கள் சீனத்தில் குவியும். இது சீனப் பொருளாதார வாழ்வைத் தகர்க்கும், எனினும், சீனத்தை ஆளும் நான்கு குடும்பங்கள் இதனுல் லாபம் அடையும்!

1946-ஆம் வருடம் அமெரிக்காவுடன் சீனு செய்துகொண்ட ஒப்பந்தம் இந்தக் குடும்பங்களின் துரோகத் தன்மையை அம்பலப்படுத்துகிறது. அமெரிக்காவில் எண்ணெய்க் கிணறுகள் தோண்ட இந்த ஒப்பந்தம் சீனத்

திற்கு உரிமை யளிக்கிறது; அதே போன்று சீனத்தில் எண்ணெய்க் கிணறுகள் தோண்ட அமெரிக்காவுக்கும் அந்த ஒப்பந்தம் உரிமை அளிக்கிறது! இந்த ஒப்பந்தத்தால் நன்மை அடையும் நாடு எது? அமெரிக்காவில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டச் சீனுவுக்கு வலிமை இல்லை என்பது உலகறிந்த உண்மை. எனவே, அமெரிக்க முதலாளிகள் தான் இந்த ஒப்பந்தத்தால் நன்மை அடைவார்கள்.

இவைகளைத் தவிர, கடந்த ஆறு மாதங்களில் அமெரிக்க டிரஸ்டுகளுடன் இந்தக் குடும்பங்கள் இருபது ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இதன் நேரடியான விளைவுகள் என்ன? ஷாங்காய், ஹூஹான், கான்டன் ஆகிய இடங்களில் மாத்திரம் இருபத்து ஏழாயிரம் பாக்டரிகளும், கடைகளும் மூடப்பட்டதாகச் சீன வாலிபர் கோஷ்டி கூறுகிறது. இந்த நான்கு குடும்பங்கள் தமது சுய நலத்தை உத்தேசித்து ஷாங்காயில் மாத்திரம் இருபது லட்சம் தொழிலாளர்களின் நன்மையைப் பலியிட்டன.

சீனத்தின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கும் இந்தக் குடும்பங்களின் தலைவர் சியாங்; சியாங்காய் ஷேக்கின் சர்க்கார் இந்தக் குடும்பங்களின் நிர்வாக சபை! சீனமக்களின் முன்னேற்றப் பிரயாணத்தைத் தடுத்து நிறுத்துவதும், சீனத்தின் ஜீவ சக்தியை உறிஞ்சுவதும் சியாங் சர்க்காரின் நோக்கம். இதனுல்தான் சீனர்கள் சியாங் சர்க்காரை ஒரு முகமாக எதிர்க்கிருர்கள். சியாங் சர்க்கார்மீதும், நான்கு குடும்பங்கள் மீதும் சீனமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பின் விளைவுதான் இன்று சீனத்தில் நடக்கும் போர். சியாங் சர்க்காரை வீழ்த்தாத வரையில் தாங்கள் உண்மையான விடுதலையைக் குறித்துக் கனவு கூடக் காணமுடியாது என்பதைச் சீனர்கள் தெளிவாக உணர்ந்துவிட்டார்கள். எனவே, இந்தப் போரில் பிற்போக்காளர்களின் வீழ்ச்சியும், முற்போக்காளர்களின் வெற்றியும் விலக்க முடியாதது.

✻

## இழக்கவில்லை

தன்னுடைய சொத்துக்களை யெல்லாம் இழந்துவிட்ட ஒருவன், தன் வீட்டு ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டு, "எல்லாம் போய்விட்டது, எல்லாம் போய்விட்டது" என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தான். வீதியில் போய்க்கொண்டிருந்த அவன் நண்பன் அவனுடைய முணுமுணுப்புச் சப்தத்தை ஊன்றிக் கவனித்தான். பிறகு அவனிடம் போய், "ஜான், உன் மனைவி இறந்து விட்டாள் போலிருக்கிறது; உன்னுடைய நல்ல குணங்களெல்லாம் போய் விட்டன போலிருக்கிறது. நான் மிகவும் வருந்துகிறேன்," என்ருன். உடனே அந்த மனிதன் துள்ளி யெழுந்து, "என்னுடைய மனைவி உயிரோடிருக்கிருள். என்னுடைய குணங்கள் ஒன்றும் மறைந்து போகவில்லை," என்று சொன்னுன். அதற்கு அந்த நண்பன், "அப்படியானுல் 'எல்லாம் போய்விட்டது' என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தாயே! எவை உண்மையான செல்வங்களோ அவற்றை நீ இழக்கவே யில்லையே!" என்ருன்.

—பல்பிக் கைஜஸ்க்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்

ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.

நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

# காதல் வழி

மாப்பஸான்

சிறைச் சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டு வெறிச்சென்று நின்றன. கம்பிகள் போட்ட, குறுகிய ஒரு சாளரம், சுலபத்தில் எட்டிவிட முடியாத உயரத்தில் இருந்தது. அதுவே இந்தச் சிறிய அறைக்கு வெளிச்சம் தந்தது. பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்தப் பைத்தியக்காரன் நிலைத்த கண்களால் எங்களை நோக்கினான். அர்த்தமில்லாத அந்தப் பார்வை எங்களை ஊடுருவி நோக்கிற்று. கன்னங்கள் ஒட்டி, சுருக்கம் விழுந்திருந்தது. தலைமயிர் அநேகமாக வெளுத்துப்போயிருந்தது. நரைக்கத் தொடங்கிச் சில மாதங்களே ஆகியிருக்க வேண்டும். அவனுடைய ஒட்டி உலர்ந்த உறுப்புக்களுக்கும், குறுகிய மார்புக்கும், குச்சி போன்ற தேக அமைப்புக்கும், அவனுடைய உடைகள் மிகப் பெரியனவாகத் தோன்றின. ஏதோ சிந்தனைகள்—ஒரு சிந்தனை—இந்த மனிதனை, பழத்தைப் புழு அரிப்பது போல அரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவனுடைய பைத்தியம்—மனப் பித்தம்—அழுத்தமாக, தொந்திரவு கொடுத்துக்கொண்டு, அவனையே விழுங்கி விடுவதுபோல அவனுடைய தலையிலே உட்கார்ந்து கொண்டு இருக்க வேண்டும். அவனுடைய தேகத்தையே அது கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று கொண்டிருந்தது. அது—கண்ணுக்குப் புலப்படாத, மனசுக்கு எட்டாத, கைக்குப் பிடிபடாத அந்தப் பித்தம்—அவனுடைய சதையைக் கிழித்து, ரத்தத்தைக் குடித்து, வாழ்வை அவித்தது.

இந்த மனிதன் ஒரு சிந்தனையால் கொல்லப்படுவது என்பது எத்தனை விசித்திரமாயிருக்கிறது! இவன்—இந்தப் பித்தன்—பயத்துக்கும் இரக்கத்துக்கும் ஒருங்கே பாத்திரமாக இருந்தான். அவனுடைய நெற்றியில் இவ்வளவு விசாலமான, மாறாத சுருக்கங்கள் விழும்படிச் செய்த அந்த விசித்திரக் கனவு—பயங்கரமான, சாவைப் போன்ற கனவு—என்னவாக இருக்கும்?

காதல் விவகாரங்களில் நடைமுறைப் பழக்க வழக்கங்களைத் தவிர்த்து, வேறு எவையேனும் அதீதக் கற்பனைகளோ, குண பாவங்களோ, புகுந்துவிட்டால் அவற்றை அர்த்தமற்ற மனோரதம் என்று இகழ்ந்து தள்ளுவது இக்காலத்திய 'பகுத்தறிவு' வாதிகள் சிலரின் வழக்கம். ஆனால் காதல் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், காதல் சம்பந்தமான எவ்விதப் பித்துக்குளி–நிலையிலும் கூட, நினைக்கக் கூடிய ஒவ்வொன்றும், செய்யக்கூடிய ஒவ்வொன்றும் உண்மையான காதலின் ஒரு சொரூபமே. இதை விளக்குகிறது பிரெஞ்சு தேசத்துச் சிறுகதை ஜாம்பவானாகிய மாப்பஸானின் கதை

வைத்தியர் என்னிடம் சொன்னார்: "இவனுக்குத் திடீர் திடீர் என்று மூர்த்தண்யமாகக் கோபம் வந்துவிடுகிறது. நான் இதுவரை பார்த்திருப்பவர்களுள் இவன் ஒருவன் தான் ரொம்ப அசாதாரணமான பைத்தியம். இவனுடைய பைத்தியம் காதல் சம்பந்தமானது. அவன் ஒரு கையெழுத்துப் பிரதி எழுதி வைத்திருக்கிறான். அது அவனுடைய மன வருத்தத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டுகிறது. சொல்லப்போனால், அவனுடைய பைத்தியமே இன்ன விதமென்று அறிய முடிகிறது. உங்களுக்குச் சிரத்தை உண்டானால், அவனுடைய தஸ்தாவேஜியைப் பார்க்கலாம்."

வைத்தியரைத் தொடர்ந்து அவருடைய காரியாலயத்துக்குச் சென்றேன். பரிதாபகரமான இந்த மனிதனின் கைப்பிரதியை என்னிடம் அவர் கொடுத்தார்.

"படித்துப் பாருங்கள். பிறகு அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்" என்றார் அவர்.

அந்தப் புத்தகத்தில் அடங்கியிருந்தது இதுதான்:

"முப்பத்திரண்டு வயது வரை காதல் என்பது இல்லாமல் அமைதியாக நான் வாழ்ந்தேன். வாழ்க்கை எளிமையாகவும், நல்லதாகவும், சுலபமானதாகவும் எனக்குத் தோன்றிற்று. நான் பணக்காரனாக இருந்தேன். சிற்சில பொருள்களில் எனக்கு விருப்பம் உண்டு; ஆனால், எந்தப் பொருளிடத்திலும் எனக்கு 'மோகம்' விழுந்தது கிடையாது. வாழ்க்கை மனசுக்குப் பிடித்திருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்திருக்கும் போது சந்தோஷமாகவே எழுந்திருப்பேன்; எனக்குப் பிடித்தமான காரியங்களையே செய்வேன். மறு நாளைப் பற்றிய அமைதியான ஒரு நம்பிக்கையுடனும், எதிர் காலத்தைப் பற்றிய கவலையின்றியும் படுக்கச் செல்லுவேன்.

"எனக்குச் சில மனைவியரும் இருந்தனர். ஆனால், அவர்கள் மேல் ஆசை கொண்டு அதனால் என் உள்ளம் பிளந்து போய் விடவில்லை. அல்லது அவர்கள் மேல் வைத்திருந்த ஆசையால் என் ஆத்மா களங்கம் அடைந்து விடவுமில்லை. அப்படி வாழுவது நல்லதாகவே இருந்தது. காதலிப்பது அதைவிட நன்றாயிருந்திருக்கும். ஆனால், அது பயங்கரமானது! அப்படியிருந்தும், மற்றஎல்லோரையும்போலக்காதலிக்கும் சிலருக்கு என்னைவிடக் குறைவான சந்தோஷமே கிட்டுகிறது. ஒருகால், நம்ப முடியாத விதத்தில் என்னிடம் காதல் புகுந்தது ஒரு காரணமாக இருக்கலாம்.

"பணக்காரனாக இருந்ததால், நான் பழைய மரச் சாமான்களையும், விசித்திரப் பொருள்களையும் சேகரித்து வந்தேன். அவற்றைத் தொட்டிருக்கும் அந்தக் கைகளையும், கண்டு வியந்திருக்கும் அந்தக் கண்களையும், அவற்றைக் காதலித்திருக்கும் உள்ளங்களையும்—ஆம்! இத்தகைய பொருள்களைக் கூடச் சிலர் காதலிக்கிறார்கள்!—எவ்வளவோ முறைகள் மானஸீகமாகக் கண்டிருப்பேன். போன நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கைக் கடிகாரத்தை மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருப்பேன். அது கண்ணைக் கவர்ந்தது. எனாமலும் தங்கமும் மேலே பூசப்பட்டு மிக அழகாக விளங்கிற்று அது. அத்

தலைய ஒரு சிறந்த 'அணி'யை வைத்திருப்பதில் மகிழ்வுற்ற எவளோ ஒரு பெண் என்று அதை வாங்கினளோ, அந்தத் தினத்தில் ஓடியது போலவே இன்றும் அது ஓடுகிறது. அதனுடைய நாடித் துடிப்பும் யந்திர வாழ்க்கையும் தடைப்படவில்லை. ஒரு நூற்ருண்டு கடந்து போயும் அதன் 'டிக் டிக்' சப்தம் ஒழுங்காக வந்துகொண் டிருந்தது. முதன் முதலில் எந்த மெல்லியலாள், தன் மார்பகத்திலே அதை அணைத்து எடுத்துக்கொண்டு,தன் உடையின் சூட்டை அதிலே ஏற்றி, தன் மெல்லிய இதயத் துடிப்புடன், இந்தக் கடிகாரத்தின் யந்திரத் துடிப்பையும் இணைத்துக்கொண்டு எடுத்துச் சென்றிருப்பாள்? எந்தக் கை, தன் கதகதப்பான விரல் நுனிகளிலே அதைப் பிடித்து வைத்துக் கொண்டு, எனமல் மேல் மூடிகளைத் தன் விரல்களில் இருக்கும் ஈரப் பசை கொண்டு துடைத்துப் பள பளப்பாக்கியிருக்கும்?'அந்த'நேரத்தை,பிரியமான, தெய்வீகமான 'அந்த' நேரத்தை எதிர் நோக்கியவாறு பூவை ஒத்த இந்தக் கடிகாரத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த கண்கள் எவையோ?

"வனப்பு மிக்க, அபூர்வமான இந்தப் பொருளைப் பொறுக்கி எடுத்த அந்த பெண்மணியைப் பார்க்க, அவளை அறிய நான் எவ்வளவு ஆசைப்பட்டேன்! ஆனால், அவள் இறந்து போயிருப்பாள்! எனக்கு மூற்காலத்திய பெண்களிடம் ஒரு விருப்பம் இருந்தது. எத்தனையோ நாட்களுக்கு முன்னே காதல் பண்ணிய பெண்களையெல்லாம் நான் காதலித்தேன். கடந்து போன அந்த அன்பின் கதை என் இதயத்தை வருத்துகிறது. ஆகா! அந்த அழகு, அந்தப் புன்னகை, இளமையின் அந்தப் புல்லரிப்பு, அந்த நம்பிக்கை! இந்த விஷயங்கள் சாசுவதமாக இருக்கக் கூடாதா?

"முத்தமிடுவதற்காக உதடுகளைச் சற்றே திறக்கும் அவ்வளவு அழகான, அத்தனை மென்மையான, அத்தனை இனிமையான, அந்தப் பூர்வீகப் பெண்களை நினைத்து,—ஐயோ! அவர்கள் இப்போது இறந்து போய் விட்டார்களே!—அவர்களைக் குறித்து எத்தனை முழு இரவுகள் விம்மி விம்மி அழுதிருப்பேன்! அந்த முத்தம் சிரஞ்சீவியானது! உதட்டிலிருந்து உதட்டுக்கு, நூற்ருண்டிலிருந்து நூற்ருண்டுக்கு, யுகத்திலிருந்து யுகத்துக்கு அது சென்றுகொண்டேயிருக்கிறது. மனிதர்கள் அதைப் பெறுகிருர்கள்; பிறருக்குக் கொடுத்துவிட்டு இறக்கிருர்கள்.

"கடந்த காலம் என்னை வசீகரிக்கிறது; நிகழ்காலம் என்னைப் பயமுறுத்துகிறது; ஏனெனில், எதிர் காலத்திலே சாவு இருக்கிறது. சென்றவற்றைக் குறித்து நான் வருத்தப்படுகிறேன்; வாழ்ந்திருந்தவர்களைப் பற்றி விம்மி அழுகிறேன். மணியை நிறுத்த, காலத்தைச் ஸ்தம்பிக்கச் செய்ய நான் விரும்புகிறேன். ஆனல், அது என்னிடமிருந்து நழுவுகிறது. விநாடிக்கு விநாடி என்னையும் கொஞ்சம் கொஞ்சமாக, நாளைக்கு வரப் போகிற அழிவுக்கு இழுத்துச் செல்லுகிறது. நானே, மறுபடியும் வாழமாட்டேன்.

"நேற்றைய பெண்களே! உங்களைக் காதலிக்கிறேன்.

"ஆனால், நான் புகார் சொல்லுவதற்கு எதுவும் இல்லை. ஏனெனில் நான் எதிர்நோக்கியிருந்த பெண்ணைக் கண்டுவிட்டேன். அவள் மூலமாக ஈடு இணையற்ற சுகத்தை அனுபவித்தும் விட்டேன்.

"வெய்யில் காய்ந்த ஒரு காலை நேரத்தில், கடைகளைப் பார்த்துக் கொண்டே, தெருவோடு போகிறவனின் சிரத்தையற்ற மனப்போக்குடன் பாரிஸ் நகரத்தில் சுற்றிக் கொண்டு இருந்தேன். திடீரென்று நூதனப் பொருள்கள் உள்ள ஒரு கடையில் ஒரு இத்தாலிய மரச் சாமானைக் கண்டேன். அது 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வெகு அழகாக, வெகு அபூர்வமானதாக இருந்தது அது. அந்தக் காலத்திலே வாழ்ந்திருந்த விடெல்லி என்ற வெனிஸ் நகரத்துக் கலைஞரைச் சேர்ந்தது அது என்று நானாகக் கற்பனை செய்துகொண்டேன். பிறகு, மேலே நடந்தேன்.

"திரும்பவும் என்னைக் கடைப் பக்கம் போகச் செய்யும்படி, ஏன் இந்தச் சாமானின் நினைவு அவ்வளவு பலமாக என்னைத் தொடர்ந்து வரவேண்டும்? மறுபடியும், அதைப் பார்ப்பதற்காகக் கடை முன்னே போய் நின்றேன். அது என்னை மயக்குவது போல எனக்கு ஒரு பிராந்தி ஏற்பட்டது.

"மயக்கம் என்பது எத்தனை விசித்திரமான விஷயம்! ஒருவன் ஒரு பொருளைப் பார்க்கிறான். கொஞ்சம் கொஞ்சமாக அது உங்களைக் கெடுக்கிறது; உங்களை உபத்திரவப் படுத்துகிறது; ஒரு பெண்ணின் முகத்தைப் போல் உங்களை முற்றும் தன் வசப்படுத்திக் கொண்டு விடுகிறது. அந்த இனிமை,—அதன் உருவம், நிறம், அமைப்பு ஆகியவற்றிலிருந்து வருகிற அந்த விசித்திர இனிமை—உங்களுள் புகுந்துவிடுகிறது. உடனேயே, ஒருவன் அதைக் காதலிக்கிறான்; விரும்புகிறான்; ஆசை கொள்ளுகிறான். அதை அடைய வேண்டுமென்று ஒரு விருப்பம் உங்களுக்கு ஏற்படுகிறது. முதலில் இந்த விருப்பம் இலேசாக இருப்பதால், மனதுக்குச் சந்தோஷமாகக்கூட இருக்கிறது. ஆனால், வர வர வளர்ந்து, அடக்க முடியாததாக ஆகிவிடுகிறது. உங்கள் கண்களின் பார்வையைக் கொண்டே வியாபாரிகள் இந்த ரகசியத்தை—பெருகி வரும் உங்கள் ஆசையை—அறிந்து விடுகிறார்கள் போல் தோன்றுகிறது. அந்தச் சாமானை உடனேயே வாங்கி, வீட்டுக்கு எடுத்து வந்தேன். என் அறையில் அதை வைத்துக் கொண்டேன்.

"இந்த மாதிரி அபூர்வச் சாமான்களைச் சேகரிக்கும் வழக்கமுடைய ஒருவன், சிகரம் வைத்தாற்போல ஒரு பொருளைக் கடைசியாக வாங்கும்போது அடைகிற ஆனந்தத்தை அறியாதவர்களைக் குறித்து நான் இரக்கப்படுகிறேன். ரத்தமும் சதையும் உள்ள ஜந்துவாக அதை எண்ணி, கண்களாலும் கைகளாலும் அவன் அதை ஸ்பரிசித்து மகிழ்கிறான். ஒவ்வொரு நிமிஷமும் அதைப் பார்க்கத் திரும்பிக்கொண்டேயிருக்கிறான். எங்கே போனாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், இடைவிடாமல் அவன் அதைப் பற்றியே சிந்திக்கிறான். தெருவிலே, உலகத்திலே, எங்கே

பார்த்தாலும், அதைப் பற்றிய சிந்தனை அவனைத் தொடர்கிறது. வீட்டில் நுழைந்தவுடனே, கையுறையையோ, தொப்பியையோகூடக் கழற்ருமல், காதலனின் அன்புடன் அதைப் பார்க்க விரைகிருன்.

"அந்தப் பொருளை விட்டு, உண்மையில், எட்டு நாட்கள்வரை நான் அகலவே யில்லை. அதன் கதவுகளையும், செருகு அறைகளையும் திறந்து திறந்து பார்த்துக் கொண்டே யிருந்தேன். மகிழ்ச்சி பொங்க அதை ஸ்பரிசித்தேன். அதை அடைந்திருப்பதில் என்ன அந்தரங்க மகிழ்ச்சிகள் உண்டோ அவ்வளவையும் அனுபவித்தேன்.

"ஒரு நாள் மாலை. அதன் பலகை மிகவும் கனமாக இருப்பதைக் கண்டு, அங்கே ஏதோ ரகசிய அறை இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். என் நெஞ்சு அடித்துக் கொண்டது. அந்த ரகசியத்தைக் கண்டு பிடிப்பதில் அன்று இரவு பூராவும் செலவழித்தேன். ஆனால், பயனில்லை.

"மறுநாள் காலை அந்தப் பலகையின் இடுக்கில் ஓர் இரும்பு ஆயுதத்தைச் செலுத்திப் பிளந்தேன். ஓர் அறை திறந்து கொண்டது. அங்கே அற்புதமான ஒரு மயிர் முடி வெல்வெட்டு மெத்தையில் வைக்கப் பட்டிருப்பதைக் கண்டேன். அது யாரோ ஒரு பெண்ணின் தலை மயிர்.

"ஆம்; ஒரு மயிர் முடிதான். பட்டுப் போன்ற, கறுத்த, பெரிய பின்னல், மண்டையை ஒட்டினற் போல் வெட்டப்பட்டு, நுனியில் ஒரு தங்கக் கயிற்ருல் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது.

"சமைந்து போய், நடுங்கிக் கொண்டு, அமைதி குலைந்தவனுக அங்கே நின்றேன். இனம் விளங்காத ஒரு வாசனை வந்தது. செத்தவளின் ஞாபகார்த்தமாக எஞ்சி நிற்கும், வியப்புக்குரிய இந்த மயிர்முடியி லிருந்தும், அந்த விசித்திர அறையிலிருந்தும் எழுந்த அந்த வாசனை மிகப் பழையதாக இருந்தது. அதை வாசனை என்றுகூடச் சொல்ல முடியாது; 'வாசனையின் ஆத்மா' என்றுதான் சொல்ல வேண்டும்.

"மெதுவாக, பக்தி சிரத்தையுடன், அதன் இருப்பிடத்தி லிருந்து அதை வெளியே எடுத்தேன். உடனேயே அது பிரிந்து கொண்டது. அதன் தங்க நிறக் கற்றைகள் தரையிலே புரண்டன. அடர்ந்தும், மெலிந்தும், பளபளத்தும், பிரகாசமாயும்,—வால் நட்சத்திரத்தின் எரியும் வாலைப் போல—இருந்தது அது.

"ஒரு பைத்தியக்கார உணர்ச்சி என்னைப் பீடித்தது. இது யாருடையதாக இருந்திருக்கும்? எப்போது? எந்தச் சந்தர்ப்பத்தில்? இந்த மரச் சாமானிலே அது அடைத்து வைக்கப் பட்டிருப்பானேன்? என்ன புதுமை—நாடகம்—இந்த ஞாபகச் சின்னத்துடன் சம்பந்தப் பட்டிருக்கும்? யார் இதை வெட்டினர்கள்? யாரோ காதலன், பிரிவு நாளன்று செய்ததோ? யாராவது கணவன், வஞ்சம் தீர்த்த அன்று புரிந்த வினையோ? அல்லது, ஒருகால் யாராவது ஒரு பெண்ணே, தன் மேல் தானே நிராசை அடைந்து செய்து கொண்டதோ? தன் அறையை அடைகிற நேரத்தில், வாழுபவர்களின் உலகத்துக்காக இந்தப் பாக்கியப் பொருளை வெட்டி எறிந்துவிட்டுச் சென்றிருப்பாளோ? அல்லது, அவ

ளுடைய காதலன், அழகும் இளமையும் பொருந்திய இவளைச் சவப் பெட்டியிலே வைத்து மூடுகிற தருணத்தில்—தான் போற்றிக் காக்கக்கூடிய அவளுடைய ஓரே ஒரு பொருளாக, அவளுடைய உடலின் ஒரே ஒரு நசிக்காத பாகமாக, தான் காதலித்து, வருடிக் கொடுத்து, முத்தமிட்டு, தன் வருத்தத்தை மறந்து இருக்கும்படி செய்யக்கூடிய ஒரே ஒரு பொருளாகக் கருதி அவளுடைய தலையின் அழகுச் சிகரமான இந்த மயிர்முடியை எடுத்து வைத்துக் கொண்டிருப்பானோ?

"அவள் எந்தச் சரீரத்துடன் பிறந்தாளோ, அந்தச் சரீரம் இருந்த இடம் தெரியாமல் போன பின்னும், இந்த மயிர் முடிமட்டும் இங்கே, இப்படி இருப்பது என்பது விசித்திரமாக இல்லையா?

"அது என் கை விரல்களில் சுற்றிக் கொண்டது. என் சருமத்தை வருடிக் கொடுத்தது—பயங்கரமான விதத்தில். என்னை எதுவோ பாதிப்பது போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அழுகை வரும்போல் இருந்தது.

"வருத்தமும், வேதனையும் நிறைந்த உள்ளத்துடன் எழுந்து நடந்தேன். காதல் முத்தத்துக்குப் பிறகு, உள்ளத்திலே மிஞ்சியிருக்கிற வேதனை அது. பூர்வ காலத்தில் நான் வாழ்ந்திருந்தது போலவும், இந்தப் பெண்ணை நான் அறிந்திருந்தது போலவும் எனக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

"வில்லனின் கவிதையை என் வாய் முணுமுணுத்தது, துக்கம் நெஞ்சை யடைக்க:

எங்குற்றார்? எங்கொழிந்தார்?
    இங்கும் அங்கும்
எதிரொலிக்கும் வான் குரலே!
    இயம்பிடாயோ?
தங்கமென, தளிர்களென,
    தவள வண்ணத்
தண்பனியின் உருவமெனப்,
    பொலிந்த மாதர்
எங்குற்றார்? அவர் முகத்தில்
    எழிலைச் சிந்தும்
இன்பநகை, கண்சொரிநீர்
    இவைகளெல்லாம்
பொங்கி நுரை கொழித்துவிட்டுப்
    போனதெங்கே?
போயினநாள் பனி மறைந்த
    தெங்கே? எங்கே?

"வீட்டுக்குத் திரும்பியதும், என் அதிசயப் பொக்கிஷத்தைப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை எழுந்தது. அதை எடுத்துத் தடவிக் கொடுத்தேன். அதைத் தொட்டபோது, உடல் முழுதும் புல்லரித்தது.

"இந்த மயிர்முடியின் நினைவு என்னை விட்டு அகலவே இல்லையென்றாலும், கொஞ்ச காலம் வரை நான் சாதாரண நிலையிலேயே இருந்தேன். வீட்டுக்கு வரும்போதெல்லாம் என் முதல் ஆசை, அதைப் பார்த்து, ஸ்பரிசிக்க வேண்டும் என்பதுதான். இதன் அறையைச் சாவி கொண்டு திறக்கும்போதெல்லாம், காதலி இருக்கும் அறைக் கதவைத் திறக்கும் காதலனுக்கு ஏற்படுகிற சிலிர்ப்பு எனக்கு ஏற்படும். என் இரு கைகளும், உள்ளமும், செத்துப்போனவளின், மனோகரமான மயிர் முடியில் திளைத்து விளையாட, ஓர் அலாதியான, குழப்பமான, இடைவிடாத, உணர்ச்சி பூர்வமான ஆசையைக் கொண்டிருந்தன.

"அதை வருடிக் கொடுத்துவிட்டு, அதனுடைய இருப்பிடத்திலே திரும்ப வைத்த பிறகு, எனக்கு அங்கே ஏதோ ஓர் உயிருள்ள பொருள்தான் மறைக்கப்பட்டு,சிறை செய்யப்பட்டு இருக்கிறது என்று தோன்றும். அதை ஸ்பரிசிக்க ஸ்பரிசிக்க, இன்னும்

ஸ்பரிசிக்க வேண்டு மென்றே எனக்கு விருப்பம் ஏற்படும். ஜில் லிப்பான, பளபளக்கும், வேதனை தரும், வியப்புக்குரிய, மென்மை யான இந்த மயிர்க் கற்றையுடன் தொடர்புகொண்டு அலுத்துப் போகும்வரை, மறுபடியும் மறு படியும் அதைத் தொட்டுக் கொண்டும், உணர்ந்து கொண் டும் இருக்க வேண்டும் என்ற ஆசை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எழுந்து கொண்டே யிருக்கும்.

"இந்தப் பொருள் என்னை ஆட்டி அலைக்கழிக்க, ஒரு மாதமோ இரண்டு மாதமோ எவ்வளவு காலமோ—நிச்சய மாகத் தெரியாது—நான் இருந்து வந்தேன். காதலை எதிர்பார்த்து இருப்பதுபோலவும், ஆலிங்கனத் துக்கு முந்தி ஏற்படுகிற உள் ளுணர்ச்சியைப் போலவும், நான் மகிழ்ச்சியையும் வேதனையையும் ஒருங்கே அனுபவித்தேன்.

"அதனுடன் தனித்து இருப் பதிலேயே நான் நாட்டம் கொண்டேன். அதனுடைய ஸ்பரிசத்தை என் உடலிலே அனு பவிக்க, அதனுள் என் உதடு களைப் புதைத்துக் கொள்ள, அதைக் கொல்ல, அதைக் கடிக்க —நான் தனிமையை விரும்பி னேன். என் முகத்திலே அதைச் சுற்றிக் கொள்ளுவேன். அதை விழுங்குவேன். அதன் தங்க ரேகைகளில் என் கண்களைச் செருகிக் கொள்ளுவேன். கடை சியில், அதன் பின்னணியில், அதன் ஜீவனை நான் கண்டேன்.

"நான் அதைக் காதலித்தேன். ஆம், அதைக் காதலித்தேன். இனி, அதை விட்டுப் பிரிந்து வாழ என்னால் முடியாது. அதைப் பார்க்காமல் ஒரு மணி நேரம் அமைதியாகக் கழிக்க முடியாது. நான் எதையோ எதிர்பார்த்தேன் —எதையோ... எதை? எனக்குத் தெரியாது!—'அவ'ளையோ?

"ஓர் இரவு, நான் என் அறை யில் தனியாக இருக்கவில்லை என்று ஏதோ உணர்ச்சி தோன் றியது. நான் விழித்துக்கொண் டேன். நான் தனியேதான் இருந்தேன். ஆனால், என்னால் மறுபடியும் தூங்க முடியவில்லை. தூக்கமின்மையால் வேதனைப் பட்டுக்கொண் டிருந்த இந்தச் சமயத்தில், எழுந்து, அந்த மயிர்க் கற்றையைப் பார்க்கச் சென் றேன். வழக்கத்தைவிட அது இன்னும் இனிமையா யிருந்தது; அதிக ஜீவனுடன் விளங்கிற்று.

"மாண்டவள் திரும்புவாளா? அந்த மயிர்க் கற்றைக்குச் சூட் டைக் கொடுத்த என் முத்தங் கள், எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. அதை என் படுக்கைக்கு எடுத் துச் சென்று, பக்கத்திலேயே கிடத்திக் கொண்டேன். மனைவி யிடம் சுகம் அனுபவிக்க எண் ணும் கணவனைப்போல, உதடு களை இறுகப் பொருத்திக் கொண்டேன்.

"மாண்டவள் திரும்பினாள்! அவள் வந்தாள்! ஆம், அவளை நான் பார்த்தேன்; தொட்டேன்; பூர்வகாலத்தில் இருந்தது போலவே கம்பீரமாக, மெல்லிய லாளாக, வனப்புப் பூரிக்க, குளிர்ந்த மார்பகங்களுடனும், துடியிடையுடனும் இருந்த அவளை நான் அடைந்தேன். காலோடு தலை அவள் உடல் பூரா வும் நான் வருடிக் கொடுத்தேன்.

"ஆமாம். ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு பகலும் நான் அவளை அடைந்தேன். சாவிலிருந்து— அழகிய, அற்புதமான, மர்ம மான, அறிய இயலாத சாவி லிருந்து—அவள் திரும்பி வந்

தாள். ஒவ்வொரு இரவும் வந்தாள்.

"என்னுள்ளே அடக்கி வைக்க முடியாதபடி, என் மகிழ்ச்சி பெருகிப் போயிற்று. அவளிடத்திலே நான் ஓர் அமானுஷிகமான சந்தோஷத்தைப் பெற்றேன். பிடிக்க முடியாத, காண முடியாத மரணத்தைக் கைப்பிடியில் அடைந்திருப்பதில், விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. இதைவிட அதிக வெறியுடனும், வேகத்துடனும் வேறு எந்தக் காதலனும் சுகத்தை அனுபவித்திருக்க மாட்டான்.

"எப்படி என் மகிழ்ச்சியை அடக்குவது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த மயிர் முடியைவிட்டு அகலுவதைச் சகிக்க முடியாத அளவுக்கு என் காதல் வளர்ந்தது. என்னுடனேயே அதை எங்கும், எப்பொழுதும் எடுத்துச் சென்றேன். அதையே என் மனைவி போல எண்ணி, நகரம் முழுவதும் அதனுடனேயே சுற்றினேன். ஒருவன் தன் காதலியை அழைத்துச் செல்லுவது போல, நான் அதை நாடகக் கொட்டகைக்கும், ஓட்டலுக்கும் எடுத்துச் சென்றேன். அவர்கள் அதைப் பார்த்தார்கள். ஒருவாறு விஷயத்தை ஊகித்தார்கள். என்னை அழைத்துச் சென்று, சிறையிலே தள்ளினார்கள், ஒரு குற்றவாளியைப் போல. அதையும் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஐயோ!—எத்தனை துன்பம்!"

கையெழுத்துப் பிரதி இந்த இடத்திலே நின்றுவிட்டது. வியப்புடன் நான் வைத்தியரை ஏறிட்டுப் பார்த்தபோது, திடீரென்று, பயங்கரமான, ஏக்கம் நிறைந்த ஒரு கூச்சல் கிளம்பி, ஆஸ்பத்திரி முழுவதும் பரவியது.

"கேட்டீர்களா? ஒரு நாளைக்கு ஐந்து தடவை அந்தப் பைத்தியத்தின் தலையில் தண்ணீரைக் கொட்ட வேண்டும். செத்துப் போனவளிடம் காதல் கொண்ட சார்ஜென்ட் பெர்ட்ரான்ட்தான் அது!" என்றார் வைத்தியர்.

வியப்பும், பீதியும், அனுதாபமும் என்னைக் குழப்ப, தடுமாறிக் கொண்டே நான் கேட்டேன்: "அந்த மயிர் முடி—உண்மையிலேயே அது இருக்கிறதா?"

வைத்தியர் எழுந்து போய், மருந்துப் புட்டிகளும், கருவிகளும் நிறைந்த ஒரு அலமாரியைத் திறந்தார். பட்டுப்போன்ற அடர்ந்த ஒரு மயிர்க் கற்றையை என்னிடம் தூக்கி எறிந்தார். ஒரு பொற்பறவை பறந்து வருவது போல அது என்னிடம் வந்து விழுந்தது.

அது என்மேல் லேசாகப் பட்டதும், அந்த மிருதுத் தன்மையினால் நான் நடுங்கினேன். அருவருப்பும், ஆசையும் என் நெஞ்சை அலைமோதச் செய்தன. கொடுஞ் செயல் சம்பந்தப்பட்ட பொருள்களுடன் தொடர்பு கொள்ளும்போது நமக்கு ஏற்படுகிற அருவருப்பும், பிரபலம் அடையாத, மர்மமான ஒரு விஷயத்தைச் சோதித்துப் பார்க்கிற போது ஏற்படுகிற ஆத்திரம் நிறைந்த ஆசையும் எனக்கு ஏற்பட்டன.

தம் தோள்களைக் குலுக்கிக் கொண்டே வைத்தியர் சொன்னார்: "மனித புத்தி எதையும் செய்யக் கூடியதுதான்!"

✻

# தீபாவளி ரிலீஸ்



இவள்
காதலை
இருவர்
விரும்பி
னர்..

காசாசையால்
காதலைத் தியாகம்
செய்தான் கஞ்சன்,
கடைசியில்
அக்காசும்
அவனைக்
கைவிட்டது!

# கஞ்சன்

தயாரிப்பு: C.A. அய்யாமுத்து
டைரக்‌ஷன்: C.A. அய்யாமுத்து, T.R. கோபு

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள்
புதுக்கோட்டை சமஸ்தானம், விநியோக உரிமையாளர்கள்:
ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் மதுரை

ஜூபிடர் பிக்சர்ஸ் சார்க்யூட் மதராஸ் & திருப்பூர்..




# சக்தி

## மாதப் பத்திரிகை

○

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 | 8 |
| ஆறு மாதம் | 3 | 8 |
| ஒரு வருஷம் | 6 | 0 |
| 2 வருஷம் | 11 | 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

### பர்மா

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | [illegible] |
| ஆறு மாதம் | 4 | 0 |
| ஒரு வருஷம் | 7 | 0 |
| 2 வருஷம் | 13 | 0 |

### மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | 10 |
| ஆறு மாதம் | 4 | 0 |
| ஒரு வருஷம் | 8 | 0 |
| 2 வருஷம் | 15 | 0 |

○

**சக்தி காரியாலயம்**
**சென்னை 14**

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

இது ஒரு மனோதத்துவக் கட்டுரை. இந்தக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடும் இரண்டு விதமான நோய்கள் சமூகத்தில் பெரும்பாலரைப் பிடித்திருக்கின்றன. ஆகவே எல்லோரும், இந்த நோய்களின் மூதற் காரணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

# உயர்வு நோய் - தாழ்வு நோய்

சி.ந.வைத்தீஸ்வரன்

குழந்தை பிறந்திருக்கிறது என்ற நற்சேதி வருகிறது. உடனே ஆத்திரத்துடன் "பிள்ளையா, பெண்ணா, சிவப்பா கறுப்பா?" என்று கேட்க ஆரம்பித்துவிடுகிறோம். பெண் என்று கேட்டவுடன் முகத்தைச் சுளிப்பவர் உண்டு. கறுப்பென்றவுடன் பெரு மூச்சு விடுபவரும் உண்டு. ஏன்? பெண் என்றால் ஆணைப் போல் அவ்வளவு சிரேஷ்டமில்லை என்று நினைக்கின்ற மனப்பான்மை அனைவரிடமும் உண்டு. அதிலும் ஏற்கெனவே பெண் மக்களைப் பெற்றுத் துன்புற்றவருக்கு இம் மனப்பான்மை தீவிரமாகத் தோன்றும். பெண் என்றால் வருங்காலத்தில் தோன்றக்கூடிய பல பொறுப்புக்களும் இன்னல்களும் மனக் கண்முன் வருவதின் காரணமே இவ்வாறு ஒரு கசப்பை உண்டு பண்ணுகிறது போலும்! 'அங்ஙனமே சேப்பும் கறுப்பும்'. கறுப்பு மாப்பிள்ளையென்றால் வெறுக்காத பெண் இல்லை. கறுப்புப் பெண் என்றால் விரும்புகின்ற இளைஞன் இல்லை. ஏன்? வர்ணத்தில் நமக்கிருக்கும் ஒரு அதிசயப்பற்று. இது பரம்பரையாகப் பல ஆண்டுகளாக நம் அந்தரங்க மனதில் பதிந்து கிடக்கிறது. அவ்வாறே குழந்தையின் 'மூக்கு முழி'யைப்பற்றியும் கேலி பண்ண ஆரம்பிக்கிறோம். குழந்தை வளர வளர, ப்ரௌடிகளின் பேச்சில் கண்ணுங் கருத்துமாகக் கவனிக்கக் கவனிக்க, அவன் காதால் கேட்பது என்ன? "மூக்கைப் பார்! மூக்கே இல்லை! மொண்ணை மூக்கு! கறுப்புப் பாப்பா வேண்டாம் போ. பொட்டைக் குட்டி வேண்டாம் போம்" என்று கொஞ்சுவதுபோல் நம்முடைய அந்தரங்க வெறுப்பை நாம் அறியாமலே தெரிவித்து விடுகிறோம். இதைக் கேட்ட குழந்தை உள்ளம், 'ஹா! நம்மை நம்மவனோர் வேண்டா விருந்தாளியாகவே பாவிக்கின்றனரே? நமக்குப் புகலிடம் இது வல்ல போலும்! நாம் இங்கு பிறந்தபோதிலும் இவர்கள் நம்மை அன்புடன் ஏற்றுக் கொள்ளவில்லையே' என்றெல்லாம் பதிவு செய்து கொள்கிறது. 'இதெல்லாம் கட்டுக் கதை. நாம் கொஞ்சுவது சிசுவுக்கு அவ்வளவு தூரம்

அர்த்தமாகிறதா? அதற்குத் தான் பேசவே இன்னும் வராதே, இவ்வளவு ஊகிக்க முடியுமா? என்று எல்லோரும் நினைக்கலாம். இதில்தான் ஒரு புது அதிசயம் இருக்கிறது எனப் பெரிய பெரிய உள இயலார் கண்டு பிடித்திருக்கின்றனர். மௌனமாயிருக்கிற சிசுவானது ப்ரௌடிகளின் பற்பல மொழிகளையும் உள்ளே கிரஹித்துக் கொண்டு தன் உள்ளத்திலே அவற்றின் பொருளைப் பயன் படுத்திக்கொள்ளுகிறது. அதன் காரணமாகத்தான் ஒருநாள் திடீ ரென்று ஏதோ ஒரு சில வார்த் தைகளைப் பிதற்ற ஆரம்பிக்கி ருன். பிறகு பேச ஆரம்பிக்கிருன் மடை திறந்ததுபோல்! ஆனல் இவ்வாறு பேச ஆரப்பிப்பதற்கு முன்னதாகவே நாம் பேசுகிற பல பேச்சுக்களை வெகு நன்ருகப் புரிந்துகொள்ளுகிருன்; அதன் படி நடந்தும் கொள்ளுகிருன். அவ்வாறு செய்கிறவன் நாம் புகழ்கிற புகழ்ச்சியையும் இகழ் கிற இகழ்ச்சியையும் நன்குண ரும் சக்தி பெற்றவனகவே இருக் கிருன். இவ்வாறு சிறு பிராயத்தி லிருந்து அவனுக்குள் உயர்வு தாழ்வு என்ற ஒருவகை நோய் உள்ளூர வளர்ந்துகொண்டே வந்துவிடுகிறது. வயது அதிக மாக ஆக இந் நோயும் தளி ரும் பூவும் பெற்றுத் தழைக்க ஆரம்பித்து விடுகிறது.

சில சமயங்களில் குழந்தை யின் மேல் உள்ள வாஞ்சை யால் தாய்மார்கள் எல்லாக் காரியமும் குழந்தைகளுக்கா கத் தாங்களே செய்து வைக் கின்றனர். குழந்தையால் தனக்கு வேண்டியதைத் தான கவே செய்து கொள்ள முடியாத பருவத்தில் தாய்மாரோ தந்தை மாரோ செய்தால் இதை யாரும் குறை கூற முடியாது. சுமார் நான்காண்டுகள் குழந்தை தானகவே தலை வாரிக் கொள்ள விரும்புகிறது. பாவாடை சட்டை அணிந்து கொள்ள வேண்டு மென்கிறது. தானே சாப்பிட விரும்புகிறது. ஊட்டி னல் பிடிக்காது. தானே கைகளைக் கழுவ விரும்புகிறது. ஏன், என் கண் முன்னலேயே ஈராண்டுக் குழந்தை தான் உண்ட தட்டைக் கழுவ விரும்புகிறதைத் தினமும் காண்கிறேன். அறிவும் ஆற்றலும் உள்ள தாய்மார்கள் இதை ஏற்றுக் குழந்தைப் போக்கை அனுசரித்து ஒப்புக் கொள்ளுவார்கள். வழியும் காட்டுவார்கள். ஆனல் அன்பு மட்டும் நிறைந்த தாய்மார், 'ஐயோ! சிறு குழந்தை எப்படித் தானகவே சாப்பிட முடியும், கழுவ முடியும்? தாயார் தானே செய்துவிட வேண்டும்?'' என்று முன் வருவாள். இது மட்டும் அல்ல. பக்கத்து வீட்டு அம் மாளைக் கண்டபொழுது "எங்க சக்கு இருக்காளே, அவளாலே ஒண்ணுமே செய்ய முடியாது. நான் ஒரு நாளைக்கு இல்லாமல் போனு அவா அப்பாவாலே அவளுக்கு ஒண்ணுமே செய்ய முடியாது. சரியா சாப்பிட மாட்டா. சட்டை போட்டுக்கத் தெரியாது. தலை வாரத் தெரி யாது. எல்லாம் நான் தான் செய்து வைக்கணும்'' என்பாள். இந்த ஏழாண்டுகள் இப்படி கூறிக் கூறி வெகு ஜம்பமாக இந்தத் தாய் தன்னைப் புகழ்ந்து கொள்வாள். இப்படிப் பேசுவ தைக் கேட்கிற சக்கு என்ன நினைக்கிருள்? "ஆம்! நமக்கு இன்னும் சாப்பிடத் தெரி யாது; தலைவாரத் தெரியாது; சட்டை அணியத் தெரியாது;

அம்மா எப்போதும் நம்முடன் தான் இருக்க வேண்டும்'' என்று தனக் குள்ளே தீர்மானித்துக் கொள்ளுகிருள். அவளுக்கு அண்டை வீட்டில் உள்ள நிர் மலாவுக்கு வயது இரண்டு ஆகி றது. என்ன பேச்சு! என்ன ஓட் டம்! தானே ஸ்நானம் பண்ணு கிருள். சட்டை அணிகிருள். ஆனல் நாடா முடிய இன்னும் வராது. தானே சாப்பிடுகிருள். தட்டைத் தானே அலம்புகிருள். ஆனல் அவ்வளவு சுத்தமாக இருக்க முடியுமா? தலையும் வாரிக் கொள்ள முயலுகிருள். ஆனல் வகிடு நேராக வராது. இவள் ஓர் அதிசயமா? சக்கு மாத்திரம் மோசமா? இல்லை. நிர்மலாவின் தாயாருக்கு குடும்ப பாரம் அதிகம். நிர்மலாவைக் கவனிக்க அதிக நேரம் இல்லை. கொஞ்சவும் நேரம் இல்லை. மற்ற அக்காமார்களைக்கண்டு நிர்ம லாவே எதையும் செய்து கொள்ளுவதை நிர்மலாவின் தாய் தடுப்பதுமில்லை. இது ஒன்றே போதும். நிர்மலாவுக்குச் சுதந்தி ரம் கிடைத்தது. தன் இஷ்டம் போல் குழந்தை உள்ளம் வளர அவகாசம் கிடைத்தது. நிர்மலா வுக்கு, தன்னல் எதுவும் செய்ய முடியாது என்ற தாழ்வு நோய் தோன்றவே முடியாது. ஆனல் சக்குவுக்கு இதைச் செய்ய முடியாது, அதைச் செய்ய முடியாது என்ற தாழ்வு நோய் ஆதியிலிருந்து வேர் ஊன்றி விடு கிறது—தாய்மாரால். பிறகு வாழ்க்கை முழுதும் தன் சக்தி உணராத பெண்ணுகவே வளர் கிருள்.

இந்தச் சக்கு, செல்லப் பிள்ளை. ஒரே குழந்தை அக் குடும்பத் துக்கு. எல்லோரும் செல்லம் கொடுத்து உயர்ந்த நிலையில் வளர்க்கின்றனர். தன்னைப் போல் மற்றவர்கள் இல்லை என்ற எண்ணத்தையும் குழந்தை உள்ளத்தில் அகம்பாவ நீர் பாய்ச்சி வளர்த்தி விடுகின்றனர் பெரியோர். குழந்தையும் "நம்மைப் போல் நிர்மலாவும் மற்றவரும் உயர்ந்தவரல்லர்'' என்ற கருடப் பார்வை கொண்டு விடுகிருள். இது கொஞ்சங் கொஞ்சமாக உயர்வு நோயாக மாறுகிறது. இதை யெல்லாம் உணர்ந்து ஆராய்ந்த உள இயலார் உயர்வு நோய் (Superiority Complex) தாழ்வு நோய் (Inferiority Complex) என்று எடுத்துக் கூறுகின் றனர். இந்த இரு நோய்க் கும் காரணம் குழந்தை மையிலே தேடிக் கண்டுபிடி க்க வேண்டும்.

தாய் மொழி தாய் மொழி என்று எவ்வளவு முரசு கொட்டி ஞலும் இன்னும் எத்தனையோ பேர் டிக்கட் வாங்கப் போகும் போதும், ஒருவனைத் தோரணை யாகக் கண்டிக்கும் போதும் ஆங்கிலப் பதத்தையே உப யோகிக்கின்றனர். காரணம், ஆங்கில மொழியின் மேல் கொண்டுள்ள ஓர் உயர்வு மனப் பான்மையும், தாய் மொழியின் மேல் உள்ள தாழ்வு மனப் பான்மையுந்தான். இதை நேரடி யாக ஒப்புக்கொள்ள மனம் வராவிடினும் நம் மனத்தில் இளமையிலிருந்து ஊறியுள்ள இந்த இரு வகை நோயே இதற்குக் காரணம். அப்படியே இன்னும் பல வகைகளிலும். வெள்ளையன் வெளியேறத் தயா ராய் இருந்தபோதிலும் நாம் வெள்ளையனுக்கும் வெள்ளையர் உடுப்புக்கும் காட்டி வரும் மரியாதை ஒன்றே இந்தத் தாழ்வு நோய்க்கு ஒரு சான்ருகும்.

கிராமவாசியின் உடையைக் கண்டு ரயில் வண்டியில் 'அடுத்த வண்டிக்குப் போ!' என்று சொல்லுபவர் எத்தனை பேர்! அந்தக் கிராமவாசியை விட அறிவிலும் பதவியிலும் குறைந்த ஒரு தற்குறி மேலை நாட்டு உடை தரித்து வந்தால் வாய் மூடிக் கதவு திறந்து வரவேற்கின்றவர் எத்தனை பேர்! ஏன்? அதே தாழ்வு நோய்தான் காரணம்.

மகா யுத்தம் முடிந்தது. இரண்டாம் மகாயுத்தமும் முடிந்தது. இனி யுத்தம் வாராதென்பர் புண்பட்டோர். யுத்தம் வரும் என்கின்றனர் அறிவுடைய சிலர். யார் யாருக்கு? வெள்ளை யுலகத்துக்கும், கறுப்புலகத்துக்கும் என்கின்றனர். இவ்வாறு ஒன்று நடைபெறும் எனில் அமெரிக்கா, ஐரோப்பாவின் சில பகுதிகள் ஒரு புறமும், ஆப்பிரிக்கா ஆசியா ஆஸ்திரேலியா மறுபுறமும் கை கலக்கும் என யூகிக்கவேண்டியிருக்கிறது. இதன் முடிவென்னு கும் என எண்ணும்போதே ஐம்புலனும் நடுக்க முறுகிறது. இந்த யுத்தத்தின் தோற்றத்தை வேரோடழிக்க வேண்டுமாயின் இன்றே மருந்து தேடவேண்டும். மருந்தென்ன என்று கேட்கலாம். நிறத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள தாழ்வு நோய், (Inferiority Complex) வெள்ளையர் எல்லோரும் உயர்ந்தோர், மற்றவர் தாழ்ந்தோர், நாகரிக மற்றவர் என்ற மனப்பான்மை ஒழியவேண்டும். எல்லோரும் ஓர் குலம் என்று வாய்ப்பந்தல் போடும் அமெரிக்கர் நீக்கிரோக்களை எவ்வாறு நடத்துகின்றனர்? நம் நட்பு நிரந்தரமாக வேண்டும் என்று சொல்லும் பிரிட்டிஷார் ஆப்பிரிக்காவில் இந்தியரை எவ்வாறு நடத்துகின்றனர்? இந்தச் சூழ்நிலையில் வாழ்கின்ற மக்கள் மனத்தில் இந்த உயர்வு, தாழ்வு நோய்கள் தோன்ருவிடின் அடுத்த பரம்பரையிலாவது உலகத்தில் நிரந்தர சுதந்திரமும் அமைதியும் செல்வாக்கும் நிலைபெறும். இல்லையேல் மூன்ரும் யுத்தம் ஒரு முடிவிலா யுத்தமாகவே வளரும் என்பதற்கு ஐயமில்லை. உயர்வு தாழ்வு நோய்களைக் குழந்தைமையிலேயே தேடி அழிப்போமாக.

*

### யர்ருக்குக் கௌரவம்?

கவிஞர் புஷ்கினுக்குக் கௌரவம் அளிக்கும் மாதிரியில் ஒரு சிலை செய்பவருக்கு இவ்வளவு பரிசு அளிக்கப்படும் என்று ருஷ்யாவில் அறிவித்தார்கள். அநேக மாதிரிச் சிலைகளும் படங்களும் வந்தன. புஷ்கின் யோசித்துக்கொண்டிருப்பது போலவும், ஓய்வாகப் படுத்திருப்பது போலவும், கை விரல்களில் நெற்றியைத் தாங்கிக்கொண் டிருப்பது போலவும் சிலைகள் வந்தன.

ஆனல் பரிசு பெற்ற சிலை என்ன தெரியுமா? ஸ்டாலின் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண் டிருக்கும் சிலைதான். ஸ்டாலின் படித்துக் கொண்டிருந்த புத்தகம் புஷ்கின் எழுதியது!

—வால்டர் வின்ச்

### சகிப்புத்தன்மை நிறைந்தவன்

உலகத்திலேயே சகிப்புத் தன்மை நிறைந்தவன் 'இன்ஷ்யூரன்ஸ் ஏஜன்ட்' ஒருவன்தான்.

—கொரான்கோ ஊளப் & மெயில்.

# காஷ்மீரச் சிங்கம்

ஆண்ட்ரூ ரா்த்

"அப்துல்லா விடுதலை அடைந்தார்!" என்றசெய்திகாட்டுத் தீ போல ஸ்ரீநகரிலும், கிராமாந்தரங்களிலும் பரவிற்று. பதினாறு நீண்ட மாதங்கள் காத்திருந்த பின்னர் காஷ்மீர மக்கள் தெருக்களிலே குழுமினார்கள், ஆறு அடி நான்கு அங்குல உயரமுள்ள, கம்பீரமான தங்கள் தலைவனை வரவேற்க. ஸ்ரீநகரின் சந்து பொந்துகளி லெல்லாம் அப்துல்லாவின் கொடி—சிவப்புப் பின்னணியில் வெள்ளைக் கலப்பையைக் கொண்ட கொடி—தலை நிமிர்ந்து பறந்தது.

இந்தியா பூராவிலும், உள்ளூரில் மிக மதிப்புப் பெற்றுள்ள ஒரே தலைவர் அவர் என்பது அவருடைய விடுதலைக்கு முன்பே தெளிவாகத் தெரிந்தது. ஷேக் அப்துல்லாவின் மனைவியுடனும், அடுத்த தலைவர் ஷேக் பாக்ஷியுடனும் நான் கிராமங்களில்

---

இன்று இந்தியாவின் கவனம் முழுவதும் காஷ்மீரத்தை நோக்கித் திரும்பியுள்ளது. அந்த நாட்டில் மக்களின் ஏகோபித்த அபிமானத்துக்கும் அன்புக்கும் பாத்திரமாக உள்ள, அவர்களுடைய தனிப் பெருந் தலைவரான ஷேக் அப்துல்லாவின் வாழ்க்கைக் குறிப்புக்களும், இன்றைய காஷ்மீர நிலையின் விளக்கமும் அடங்கியது இக் கட்டுரை. இதில், மகாத்மா காந்தி சமஸ்தான அதிகாரிகளுடன் நடத்திய சம்பாஷணை விபரம் மிகவும் ரசமாக உள்ளது. ப்ரீ இந்தியாவிலிருந்து.

---

செய்த சுற்றுப் பிரயாணங்களின்போது, காஷ்மீரிகள் கோஷித்த 'ஷேக் அப்துல்லா வாழ்க!' என்ற கோஷம், மலைக் குன்றுகளிலே முட்டி எதிரொலித்தது. ஷேக் அப்துல்லா விரைவில் விடுதலையாவார் என்று நாங்கள் குறிப்பிட்ட போதெல்லாம், சோர்வுற்றிருந்த அவர்களுடைய முகங்கள் உற்சாகத்தினால் பிரகாசித்தன.

காஷ்மீரிகளைப் பொறுத்தவரை, ஷேக் அப்துல்லா, காந்திஜி, நேரு ஆகியோரின் கலப்படமாயும், நபியடிகளின் சிஷ்யராகவுமே தோன்றுகிறார். காந்திஜி மக்களின் உணர்ச்சிகளை எவ்வளவு லகுவில் உணருகிறாரோ அதே போலத்தான் அப்துல்லாவும் உணருகிறார். மக்களின் க்ஷேமத்தில் நேருவுக்கு உள்ள அக்கரை அப்துல்லாவுக்கும் உண்டு. வட இந்தியா முழுவதையும் நாசம் செய்திருக்கும், வகுப்புப் பூசல்களி லிருந்து, வனப்புமிக்க காஷ்மீரத்தை இவர் காப்பாற்றுவார் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

முஸ்லிம்களின் நலனுக்காக மட்டும் பேசுபவராகவே அப்துல்லா தம் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார் என்பது ஒரு வேடிக்கையே! ஒரு சால்வை வியாபாரியின் மகனாக 1905-ல் பிறந்த இவர் 1930-ல்

விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ருர். ஆனுல், சமஸ்தானம் கொண்டிருந்த தாரதம்மியக் கொள்கையினுல், இவருக்கு வேலே எதுவும் கிடைக்கவில்லே. இந்தத் தாரதம்மியத்தை எதிர்ப்பதற்காக, ஷேக் அப்துல்லாவும் அவருடைய நண்பர்கள் சிலரும் ஸ்தாபன ரீதியில் சேர்ந்துகொண்டார்கள். உள்ளூரில் இருந்த சில முஸ்லிம் மதத் தலேவர்களின் ஆதரவைப் பெற்ருர்கள். யோக்கியதை பெற்ற முஸ்லிம்களுக்கு உத்தியோகங்களில் தகுந்த அளவு ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்று இவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். மத்திய தர முஸ்லிம் வகுப்பினர் இவருடைய கிளர்ச்சியினுல் விழிப்படைந்தார்கள். கிளர்ச்சி தொடங்கியபோது, பாமர மக்கள் சேர்ந்து கொண்டார்கள்.

1931-ல் ஷேக் அப்துல்லா சிறைப்பட்டார். 1932-வரை காஷ்மீரத்திலே நிலேமைகள் சகிக்கொணுததாக இருந்தன. ராணுவச் சட்டம், கூட்டுஅபராதம் முதலிய, அடக்கு முறையின் எல்லா அம்சங்களும் தாண்டவமாடின. இறுதியில், ஒரு சிபாரிசுக் கமிட்டி விசாரணே செய்து, மக்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகப் பிரதிநிதித்துவம் தரவும், முஸ்லிம்களின் ஸ்தானங்களே அதிகரிக்கவும் முடிவு செய்தது. இந்தச் சிபாரிசுகளே அனுஷ்டானத்தில் கொண்டு வரும்படி சர்க்காரை நிர்ப்பந்திப்பதற்காக, ஷேக் அப்துல்லாவும் அவருடைய நண்பர்களும் முஸ்லிம் மகாநாடு என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவினுர்கள்.

அநேக முஸ்லிம் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டும் கூட, மக்களின் நிலே அபிவிருத்தி அடையவில்லே என்பது வெளிப்படை ஆயிற்று. நம்ப முடியாத அளவுக்குத் திறமையற்ற ஆணவம் பிடித்த டோக்ரா வம்சத்தின் ஆட்சி தொலேந்து, மக்களின் ஆட்சி காஷ்மீரத்தில் நிலவ வேண்டியதே முக்கியமானது என்பதை ஷேக் உணர்ந்தார். உலகத்தின் வேறு எந்தப் பாகத்தையும் விடக் காஷ்மீரத்திற்குத்தான் 'உலகத்தின் சுவர்க்கம்' என்ற பெயர் அதிகமாகப் பொருந்தும். இமயமலேச் சாரலிலே உள்ள காஷ்மீரத்தில் அழகிய மலேகளும், ஏரிகளும், இயற்கைக் காட்சிகளும், நிரம்பியுள்ளன. இது யாத்திரிகர்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலம் ஆகும். வேகம் மிகுந்த இந்நாட்டு அருவிகள் மின்சார உற்பத்திக்குச் சிலாக்யமானவையாக விளங்குகின்றன. செழுமை நிறைந்த காஷ்மீர மண்ணே, எத்தனேயோ வகையான உபயோகமுள்ள தாவரங்களே ஊட்டி வளர்க்கின்றன. மலேப் பிரதேசமான பட்டணத்தில் தேக்கு மரம் நிறையக் கிடைக்கிறது. தங்கமும் வைரமும் கிடைக்கக்கூடிய சுரங்கத் தொழிலுக்கும் கூட லாயக்கான பூமி காஷ்மீரம். அதன் மக்கள் உழைப்பாளிகள் என்பது மட்டுமல்லாமல், ஆசியாவிலேயே சிறந்த கலே நயம் வாய்ந்த கைத்தொழிற் சாமான்கள் செய்யக்கூடியவர்களும் ஆவர். இவ்வளவும் இருந்தும், அதன் வறுமை—இந்தியாவின் மற்றப் பாகங்களில் நிலவும் வறுமையை ஆராய்ந்து தெரிந்து கொண்டவர்களுக்குக்கூட—நம்ப முடியாததாக இருக்கிறது! யுத்த ஆரம்பத்தில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரப்படி, சராசரி காஷ்மீரியின் வருமானம், சராசரி இந்தியனின்

வருமானத்தில் ஐந்தில் ஒரு பாகம் தான் என்று தெரிகிறது.

இதை உணர்ந்த ஷேக் அப்துல்லா, பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதற்காக, சமஸ்தானத்தில் இருந்த முன்னேற்றப் போக்குள்ள ஹிந்துக்களுடன் சேர்ந்து கொள்ள நிச்சயித்தார். 1939-ல், முஸ்லிம் மகாநாடு, தேசிய மகாநாடு என்று பெயர் மாற்றப் பட்டது. ஹிந்து, சீக்கியர்களுக்கும் தலைமைப் பதவிகள் கொடுக்கப் பட்டன. "மேன்மை தங்கிய மகாராஜாவின் பொதுவான கண்காணிப்புக்கு உட்பட்ட" பொறுப்பாட்சியை அது கோரிற்று. வயது வந்தோர் அனைவராலும் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சட்ட சபையையும், அதற்குப் பொறுப்பான விதத்தில் ஒரு மந்திரி சபையையும் நிறுவ வேண்டுமென்று இந்தத் தேசிய மகாநாடு கேட்டது. தேர்தல்கள், சிறுபான்மையினருக்குப் போதிய ஸ்தானங்கள் ஒதுக்கப் பட்டுக் கூட்டுத் தொகுதி முறையில்—பிரிட்டிஷ் இந்தியாவில் இருப்பதைப்போல வகுப்புவாரி முறையில் இல்லாமல்—நடைபெற வேண்டுமென்றும் இந்த மகாநாடு சொல்லிற்று.

ஷேக் அப்துல்லா, இந்தியத் தேசியக் காங்கிரசுடன் நெருங்கிய உறவு பூண்டார். பிரிட்டிஷ் பிடியிலிருந்தும், பெரும்பாலும் பிரிட்டிஷாரின் கையாட்களாகவே இருக்கும் மன்னர்களின் பிடியிலிருந்தும் இந்தியாவை விடுவிக்கும் முயற்சியில், சமஸ்தான மக்களின் போராட்டங்களை ஆதரிப்பதும் ஓர் அம்சமெனக் காங்கிரஸ் கருதிற்று. காங்கிரஸ் கூட்டங்களில் ஷேக் அப்துல்லா அடிக்கடி கலந்து கொண்டார். பண்டித நேருவின் நெருங்கிய நட்பும் அவருக்கு ஏற்பட்டது.

தேசிய மகாநாடு நாளுக்கு நாள் பலம் பெற்று வருவதைக் கண்டு மகாராஜாவின் அரசாங்கம் நடுங்கியது. 1944-ல் மகாநாடு "புதிய காஷ்மீரம்" என்ற ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. "எல்லாவிதமான சுரண்டுதல்களி லிருந்தும் விடுபடுவதன் மூலம்" மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய ஜனநாயக சமதர்ம நாடாகக் காஷ்மீரம் மாற வேண்டும் என்று அது கூறியது. சோவியத் கொள்கையில் இருக்கும் சிறப்புக்களை வெளிப்படையாக அப்துல்லா ஒப்புக்கொண்டார். சோவியத் ருஷ்யாவின் பால் அப்துல்லாவுக்கு இருந்த சிநேகபாவம், பிரிட்டிஷ் சர்க்கார் வட்டாரங்களைக் கலக்கிற்று. காஷ்மீரம் "பத்திரமான" கைகளில் இருக்க வேண்டுமென்பதில் அவர்கள் அதிகச் சிரத்தை கொண்டார்கள்.

மகாராஜாவுக்கும் ஷேக் அப்துல்லாவுக்கும் இருந்த தகராறு 1946 மே மாதத்தில் உச்சத்தை அடைந்தது. யுத்த காலத்தில் ஒத்துழைத்ததற்குப் பிரதியாக, சர்க்கார் அளித்த பிரதிநிதித்துவப் பொறுப்பு, தேசீய மகாநாட்டுக்குத் திருப்தி அளிக்கவில்லை. நான்கு வருஷ காலமாகக் காங்கிரஸ் செய்துவந்த 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற கிளர்ச்சிக்கு இந்தியாவுக்கு வந்த மந்திரி சபைத் தூது கோஷ்டி செவி சாய்த்ததால், ஓரளவு சுதந்திரம் இந்தியாவுக்குக் கிட்டும் என்று அப்துல்லா அறிந்தார். ஆகையினால், அவரும், "காஷ்மீரைவிட்டு மகாராஜா

வெளியேற வேண்டும்" என்ற கோஷத்தைக் கிளப்பினர்.

மகாராஜாவின் ஆட்சிக்கு முடிவு கட்டும்படி கிளர்ச்சி செய்ததின் மூலம், மற்றச் சமஸ்தான மக்களின் போராட்டங்களுக்கும் ஷேக் அப்துல்லா வழி காட்டினர். இ. தே. காங்கிரசால் ஆதரிக்கப்பட்ட சமஸ்தானப் பிரஜைகள் காங்கிரசின் கொள்கை, மன்னர்களை வெறும் சட்ட ரீதியான முறையில் மட்டுமே மன்னர்களாக வைத்து, மற்றப்படி பொறுப்பாட்சி வழங்க வேண்டும் என்பதே யாகும். பண்டித நேருவுக்கு அப்துல்லாவின் 'குவிட் காஷ்மீர்' இயக்கத்தைப் பற்றிச் செய்தி கிட்டியதும், அவரை டில்லிக்கு ஆலோசனைக்காக வரும்படி அழைத்தார். வழக்கைத் தலையரான மகாராஜாவின் பிரதம மந்திரி பண்டித ராமச்சந்திர கக் பொறுத்திருக்கவில்லை. தேசிய மகாநாட்டை நசுக்குவதற்கான ஏற்பாடுகளைப் பல மாதங்களாகவே அவர் செய்துவந்தார். மே மாதம் 21-ம்தேதி ஷேக் அப்துல்லா டில்லிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார். சமஸ்தானம் பூராவும் 'வேட்டை' ஆரம்பமாயிற்று. முன்னூறு தேசிய மகாநாட்டுத் தலைவர்கள் கைதியானர்கள். தலைநகரமாகிய ஸ்ரீநகரின் எல்லா முக்கியப் பகுதிகளையும், இரும்புத் தொப்பி அணிந்த கூர்க்கப் படைகளும், டோக்ராத் துருப்புக்களும் வளைத்துக்கொண்டன.

காஷ்மீரத்தில் பிரவேசித்ததற்காகப் பண்டித நேரு கைது செய்யப்பட்டதும், உலகத்தின் கவனம் முழுவதும் இங்கே திரும்பிற்று. ஷேக் அப்துல்லாவைப் பாதுகாப்பதற்காகவே தாம் வருவதாக அவர் அதிகாரிகளுக்குத் தந்தி மூலம் தெரிவித்திருந்தார். ஆனல், காஷ்மீர எல்லையை அடைந்த போது, அவருக்குத் தடை விதிக்கப் பட்டது. தடையை முறித்துக் கொண்டு பிரவேசிக்க முயன்றதும், அவரைத் தடிகளினல் வழி மறித்தனர். நேரு கைதியானர்.

இறுதியில், காஷ்மீரத்துக்குள் பிரவேசிக்க நேருவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஷேக் அப்துல்லாவுக்கு எதுவும் நேராது என்று அவருக்கு உறுதியும் அளிக்கப்பட்டது. இந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான், அவர் ஷேக் அப்துல்லா இரண்டு வாரங்களில் விடுதலையாகிவிடுவார் என்று தேசிய மகாநாட்டுக்குச் சொன்னதாகத் தெரிகிறது. இடைக்காலத்தில் பிரதமர் அறிவித்திருந்த தேர்தல்களுக்குத் தயாராகும்படியும் நேருஜி அவர்களுக்குப் புத்திமதி கூறினர். "காஷ்மீரை விட்டு வெளியேறு" என்பதற்கு, சட்ட ரீதியில் மட்டும் அரசர் தொடர்ந்து இருக்கலாம் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதாகத்தான் அர்த்தம் என்று கூறும்படியாகவும் நேரு சொன்னர்.

ஆனல், 'மகாராஜா எதிர்ப்பு' இயக்கத்தைக்குலைப்பதில்வெற்றி அடைந்து விட்டதைக் கண்ட சமஸ்தான அதிகாரிகள் தங்கள் வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டனர். ஷேக் அப்துல்லாவுக்கு மூன்று வருஷச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இன்று நிலைமை பெருத்த அள வுக்கு மாறியிருக்கிறது. சமஸ்தானம், சாதகத்துக்கு மேல் சாதகமாக ஷரத்துக்கள் கொண்ட உடன்படிக்கைகளை டில்லிக்குத் தூதர்கள் மூலமாக அனுப்பிக் கொண்டே யிருக்கிறது. ஷேக் அப்துல்லா சிறையிலிருந்து ஸ்ரீ நகரில் வெறும் காவல் கைதியாக மட்டும் இருந்து, பிறகு விடுதலையும் செய்யப்பட்டார். ஷேக் அப்துல்லா இல்லாத காலத்தில் தேசிய மகாநாட்டுக்குத் தலைவராக இருந்த ஷேக் பக்ஷி குலாம் முகமது, பதினாறு மாதங்கள் நாடு கடத்தப்பட்டு இருந்த பிறகு, திரும்பி வர அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இரண்டு காரணங்களால் இந்த முடிவு கிட்டியிருக்கிறது. ஒரு காரணம் பாகிஸ்தானின் துர்ப்பிரவேசம்; மற்றொரு காரணம் ஜனநாயக இயக்கத்தின் குன்றாத பலம்.

பாகிஸ்தான் ஏற்பட்டதால் ஒரே ஒரு சிறிய இடை வெளியைத் தவிர, காஷ்மீரத்தின் மற்றப் பகுதிகள் அனைத்தும், இந்திய யூனியனிலிருந்து துண்டிக்கப் பட்டுவிட்டன. உண்மையில், காஷ்மீரின் செய்தி, போக்குவரத்து முழுமையும் பாகிஸ்தான் பிரதேசத்தின் வழியாகவே செல்லுகின்றன. சமஸ்தானத்தின் ஜனத் தொகையில் எண்பது சதவிகிதத்தினர் முஸ்லிம். பாகிஸ்தானும், காஷ்மீரத்தில் உள்ள அதன் ஆதரவாளர்களும் தம் முடைய 'ராஜ்ய'த்துக்குச் சாவு மணி அடித்து விடுவார்கள் என்று மகாராஜா பயப்படுகிறார்.

ஸ்ரீமான் ஜின்னா மகாராஜாவுக்குச் சாதகமாக வாக்குறுதிகள் நிறைய அளித்தும்கூட அவர் பயப்படுகிறார். சமஸ்தானப் பிரச்னையில் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் கொள்கையில் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. காங்கிரஸ் 'இரட்டைக் கொள்கை'யை அனுசரித்து வந்திருக்கிறது. ஒரு புறம், இந்திய சர்க்கார் பேரம் செய்தபடி, அவர்களுடைய நிர்வாகத்தைக் கை விடுவதற்காக நிறைய வசதிகள் செய்து தருவதாகச் சொல்லி வந்திருக்கிறது. மறு புறம் காஷ்மீரத் தேசிய மகாநாட்டைப் போல, மன்னரை எதிர்த்து நடக்கும் சமஸ்தானக் காங்கிரஸ் இயக்கங்களையும் கைப்பிடியிலே வைத்துக்கொண் டிருக்கிறது. மன்னர்கள் பணியாதபோது, தொடர்ந்து இயக்கங்களை நடத்தியும் வந்திருக்கிறது.

ஆனால், ஸ்ரீ ஜின்னாவின் கொள்கையோ, மகாராஜாக்களின் ஆட்சியைத் தொடர்ந்து நடத்த அனுமதிப்பதின் மூலம் சமஸ்தானங்களைப் பாகிஸ்தான் யூனியனுடன் இணைப்பதாகவே இருக்கிறது. 1947-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ம் தேதி ஸ்ரீ ஜின்னாவின் அந்தரங்கக் காரியதரிசியான குர்ஷித் காஷ்மீர் முஸ்லிம் லீக்கிளையின் தலைவரான ஸ்ரீ ஷௌகத் அலிக்கு எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. "நம்முடைய ஒரே நண்பர் (மிக மிக அவசியமாக) இந்தச் சமயத்தில் ஸ்ரீ கக் தான். நீங்கள் அவரை நம் பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்தான் நம்முடன் பேரம் செய்ய வேண்டியவர்..." என்று அந்தக்கடிதம் கூறுகிறது.

பொதுஜன வாக்கு எடுக்கப் பட்டால் காஷ்மீரம் இந்திய யூனியனில்தான் சேரும் என்பதை ஸ்ரீ ஜின்னா அறிவார். இந்திய யூனியனிலிருந்து விலகி நிற்பதற்காக ஒரு விசேஷச் சலுகை

யாக், மகாராஜாவுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கவும் அவர் தயங்கவில்லை. சமஸ்தானத்தின் பெரும்பான்மை மக்களான முஸ்லிம்கள் இறுதியில் காஷ்மீரத்தைப் பாகிஸ்தானத்தில் சேர்த்து விடுவார்கள் என்றும் அவர் நம்பினர். ஆனல், மகாராஜா, தாம் ஒரு ஹிந்துவாதலால், முஸ்லிம் பெரும்பான்மையினரை அடக்கியாளும் புனித உரிமை ஹிந்துவுக்கு உண்டு என்ற நம்பிக்கையில் ஸ்ரீ ஜின்னுவின் அழைப்பை மறுத்துவிட்டார்.

இந்திய யூனியனை முழு மனத்துடன் ஆதரித்தது, காஷ்மீரத் தேசிய மகாநாடு. இடைவிடாத கைதுகளுக்கும், கொடுமைக்கும், பயமுறுத்தலுக்கும் பணிந்துவிடாமல், மகாராஜாவின் யதேச்சாதிகார ஆட்சியையும், தேசிய மகாநாட்டை நசுக்க அது செய்யும் முயற்சிகளையும் எதிர்த்து வந்தது. இதுவே. போலிஸ் வேவுகாரர்கள் ஸ்ரீநகர் முழுவதும் நிறைந்தும்கூட, தேசிய மகாநாட்டின் 'யுத்தக் கமிட்டி' நகரம் முழுவதும் சுவரொட்டிப் பிரசுரங்களை ஒட்டியும், எதிர்ப்பை உச்ச ஸ்திதியிலேயே வைத்தும் வந்தது.

ஷேக் அப்துல்லா கடைசி முறையாகச் சிறையில் இருந்தபோது, ரகசியமாக வெளியே அனுப்பிய செய்தி ஒன்றுதான், தலைமறைவு வேலைகளுக்கு ஊக்கம் அளித்தது.

"ஆயுதம் தாங்கிய அன்புள்ள தோழர்களே, இது இறுதிப் போர். ஒன்று, நம் லட்சியத்திலே நாம் வெற்றி பெறவேண்டும்; அல்லது செத்து மடியவேண்டும். நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதை இப்போதும் சொல்ல விரும்புகிறேன். மகாராஜா ஹரிசிங்குக்கு நம்மை ஆளத் தார்மிக உரிமை எதுவும் கிடையாது. அவருடைய சட்ட பூர்வமான உரிமையையோ நம்மால் முடிந்தபோதெல்லாம் எதிர்ப்போம்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவிலிருந்து வெளியேறியவுடன், மக்கள் கைக்குத் தானுகவே ஆட்சி வந்துவிடுகிறது. மக்களுடன் புதிய முறையில் நட்புக் கொள்ளுவது காஷ்மீர மகாராஜாவின் பொறுப்பாகும்.

"இந்தப் புது உறவு, மக்களின் கோரிக்கைகளை மகாராஜா ஏற்றுக் கொள்ளுவதால்தான் ஏற்படுமேயன்றி, வேறு எதனுலும் ஏற்பட முடியாது.

"இந்த அறிக்கையை அவர் சுவரிலே வாசிக்க வேண்டும். அல்லது மக்களுடன் இறுதிவரை போராடவேண்டும். மக்களா அல்லது தற்போதைய பிரதமர் ராமச்சந்திர கக்கா என்பதை அவர் தீர்மானிக்க வேண்டும். பின்னவர், பிரதம மந்திரி என்ற வேஷத்தில் இருக்கும் வரை காஷ்மீரத்தில் அமைதி நிலவ முடியாது.

"தோழர்களே! எனவே, பிற்போக்குக்கும் காட்டுமிராண்டித் தனத்துக்கும் கோட்டையாக விளங்கும் இதன் மேல் உங்களுடைய இறுதித் தாக்குதலுக்குத் தயாராகுங்கள். கடைசியில் வெற்றி நமதே என்பது நிச்சயம் என்று எண்ணுங்கள்.

"இந்தத் தர்ம யுத்தத்தில் தனிப்பட்ட நபர்களின் சிரமங்கள் ஒரு பொருட்டல்ல. உங்களுடைய உள்ளங்களில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற வேண்டியது, நம்முடைய உன்னதமான லட்சியம்தான்.

"புரட்சி நீடுழி வாழ்க!
"காஷ்மீரை விட்டு வெளியேறு!
"அமிருதசரஸ் உடன்பாட்டை உடை!

எஸ். எம். அப்துல்லா"

இந்தக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்காக மகாராஜா இரண்டு பெரிய காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்தார். சென்ற மே மாதத்தில் ஆசாரிய கிருபலானியும், ஆகஸ்டு மாதத்தில் மகாத்மாவும் காஷ்மீரத்துக்குச் சென்றனர். காந்திஜிக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. எல்லையிலிருந்து ஸ்ரீநகர் வரை—கிட்டத்தட்ட 140 மைல்கள்—அடைத்துக் கொண்டு, "மகாராஜா ஒழிக!" "அப்துல்லா வாழ்க!" என்று வான் முட்டக் கோஷமிட்டனர். காந்திஜி, மகாராஜாவுடனும் மந்திரிகளுடனும் பேட்டி காணச் செல்லவில்லை. அவர்களையே தம்மிடம் வரும்படி செய்தார். ஸ்ரீநகர் மக்களிடம், அவர்களையும், ஷேக் அப்துல்லாவின் மனைவியையுமே தாம் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னார்.

காந்திஜியின் இருப்பிடத்திற்குப் பழம், உணவு, பூ முதலியன மகாராஜா கொடுத்தனுப்பியதாயும், காந்திஜி அவற்றைத் திருப்பி அனுப்பி விட்டதாகவும் சொல்லப் படுகிறது. மறுநாள் காலைக் காந்திஜியைப் பார்க்கச் சென்றார். ஒரு மணி நேரம் காத்திருந்த பின்னர் காந்திஜியைச் சந்தித்தார். காந்திஜியிடம் கக், தாம் "மக்களைக் காப்பாற்ற முயலும் ஒரு நல்ல மனிதர்" என்று சொல்லிக் கொண்டாராம். அதற்குக் காந்திஜி, "நீங்கள் நல்லவர் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள். நான் உங்களிடம் அவநம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால், மற்ற எல்லா வகுப்பினரும், எல்லாக் கட்சியினரும் உங்களைக் கெட்டவர் என்றே சொல்லுகிறார்களே?...... மக்களின் நல்லெண்ணத்தை நீங்கள் பெறுங்கள். அவர்கள் உங்களை நல்லவர் என்று சொல்லட்டும். பிறகு, நீங்கள் சொல்லாமலேயே நான் உங்களை நம்புகிறேன்" என்று பதில் சொன்னாராம். காஷ்மீரம் பாகிஸ்தானில் சேருவதா அல்லது இந்திய யூனியனில் சேருவதா என்பதுபற்றிச் சர்வஜன வாக்கு எடுக்கப்பட வேண்டும் எனக் காந்திஜி யோசனை சொன்னார். "ஆனால், பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்கள். அவர்கள் பாகிஸ்தானில்தான் சேருவார்கள்" என்று கக் ஆட்சேபித்தார். "அப்படியானால், அவர்கள் போகட்டும். மக்கள் பாகிஸ்தானை விரும்பினால், அவர்களுக்கு அது கிடைக்கத்தான் வேண்டும்" என்று காந்திஜி பதில் அளித்தாராம்.

காந்திஜி மகாராஜாவைப் பார்க்க விரும்புவதாக யாரிடமும் சொல்லவில்லை. மகாராஜா மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதன்மேல் அவர் விருப்பத்துக்கு இணங்கினார். ஆனால், அவரிடமிருந்து உணவு, பழம், முதலியன ஏற்க மறுத்து விட்டார். மகாராஜா வற்புறுத்தியபோது, "உங்கள் பிரஜைகள் உங்கள் மீது கோபங்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உங்களை ஏற்காதவரை, நான் உங்களிட மிருந்து எதையும் ஏற்க மாட்டேன். உங்கள் மக்களைத் திருப்தி செய்யுங்கள். பிறகு, நான் வந்து, உங்கள் அரண்

மனையிலேயே பத்து நாட்கள் தங்குகிறேன்'' என்று பதில் கொடுத்தாராம்.

தேசிய மகாநாட்டையும், ஷேக் அப்துல்லாவையும் குறை கூறிக்கொண்டே இருந்த மகாராஜாவைத் திருப்பிக் கேட்டாராம் காந்திஜி. "உங்கள் ராணுவத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' "பதினையிரம்'' என்று மகாராஜா பதில் சொன்னாராம். "அதில் எவ்வளவு பேர் காஷ்மீரிகள்?'' என்று மகாத்மா கேட்டதற்கு, "அநேகமாக ஒருவரும் இல்லை'' என்று பதில் வந்ததாம். "அப்போது, ஷேக் அப்துல்லாவின் கட்சிதான் சரி. அந்நிய பலத்தைக்கொண்டு நீங்கள் உங்கள் பிரஜைகளை அடக்குகிறீர்கள். இதிலிருந்தே நீங்கள் அவர்களிடம் பயப்படுகிறீர்கள் என்று தெரிகிறது'' என்றாராம் மகாத்மா!

அப்துல்லாவுடன் தாம் சமரசம் செய்துகொள்ள விரும்புவதாகவும் ஆனல் அப்துல்லா "காஷ்மீரைவிட்டு வெளியேறு'' என்ற கோரிக்கையை விட்டுவிட வேண்டுமென்றும் மகாராஜா காந்திஜியிடம் தெரிவித்தாராம். இதற்குக் காந்திஜி அளித்த பதிலாவது: "உங்கள் மக்கள் விரும்பும் பட்சத்தில் நீங்கள் போகக் கூடாது என்று கூறுபவர்களில் நானும் ஒருவன். நீங்கள் உங்கள் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, நீங்கள் இருப்பதை அவர்கள் விரும்புவார்களே யானல் ஷேக் அப்துல்லா உங்கள் வெளியேற்றத்தை வற்புறுத்தவே முடியாமற் போகுமே!''

தம் பேட்டி நேரம் முழுவதும் காந்திஜி, மக்களின் விருப்பம் தான் காஷ்மீரத்தின் பிரதம சட்டம் என்று வற்புறுத்தினர். பிற்பாடு விடுத்த ஓர் அறிக்கையில்; மகாராஜா பொதுஜன ஆட்சிக்குச் சம்மதித்ததாகவும் சொல்லியிருந்தார். இந்த அறிக்கை மறுக்கப்படவில்லை.

காந்திஜி சென்ற சில தினங்களில், பிரதமர் கப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தேசிய மகாநாட்டின் தற்காலிகத் தலைவரான ஷேக் பக்ஷியும் சமஸ்தானத்துள் பிரவேசிக்க அனுமதிக்கப் பட்டார். அவருடன் நாட்டுப்புறங்களில் நான் செய்த சுற்றுப் பிரயாணங்களின் மூலம், தேசிய மகாநாட்டுக்குக் காஷ்மீரிகளின் ஆதரவு எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை உணர்ந்தேன். பக்கத்திலே உள்ள பஞ்சாப்பில் நடக்கும் ரத்தக் களரிகள் காஷ்மீர் எல்லையிலே நிற்கின்றன. வெகு சில இடங்களில் எல்லைக்கு இப்பாலும் வந்தன. பக்ஷி தாம் பேசிய பொதுக் கூட்டங்களிலெல்லாம் வகுப்பு ஒற்றுமையைக் காப்பாற்றுவதன் அவசியத்தை வற்புறுத்தினர். அடிக்கடி "ஹிந்து—முஸ்லிம் ஐக்கியம் வாழ்க!'' என்ற கோஷம் கிளம்பி, அந்தப் பிரம்மாண்டமான கூட்டங்களிலே வான் முட்டும் எதிரொலிகளைப் பெற்றது. பஞ்சாப் கலவரங்களினல் ரயில், ரஸ்தா போக்கு வரத்துக்கள் பாதிக்கப் பட்டிருப்பது, காஷ்மீரத்துக்குப் பொருளாதார நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது. ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர் ஷேக் பக்ஷி. ஜனநாயக அரசாங்கம் ஒன்றினல் தான், காஷ்மீரத்தை எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார, வகுப்புப் பிரச்னைகளைச் சமாளிக்க முடியும் என்று

அவர் குறிப்பிட்டார். அநேகப் பொதுக் கூட்டங்களில், குடியானவர்கள் எழுந்து நின்று, உணவுப் பஞ்சத்துக்கு என்ன செய்வது என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சமஸ்தானத்தில் உள்ள முஸ்லிம் லீக் கிளை வகுப்புச் சமாதானத்தில் அவ்வளவு சிரத்தை கொள்ளவில்லை. வகுப்பு உணர்ச்சியைத் தூண்டி விட்டு, பெரும்பான்மையினரைத் தாங்கள் முதலில் முஸ்லிம்களே, பிறகே காஷ்மீரிகள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதன் மூலம் தான் காஷ்மீரைப் பாகிஸ்தானில் சேர்க்க முடியும் என்று சில லீக் தலைவர்கள் நினைக்கவும் செய்கிறார்கள்.

செப்டம்பர் மாத ஆரம்பத்தில் ஷேக் அப்துல்லாவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக, சர்க்கார் அவரை ஓர் இடத்தில் காவல் கைதியாக வைத்தது. அவருடைய காவல் இடத்திலிருந்து ரகசியமாக வெளிக் கொணரப்பட்ட ஒரு கடிதத்தில் ஷேக் அப்துல்லா, தாம் மகாராஜாவுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயாரென்றும், ஏனெனில், அழகிய காஷ்மீர நாட்டை, பரவி வரும் வகுப்புக் குரோதம் குலைக்க இருக்கும் இந்தச் சமயத்தில் தாம் வெளியே இருப்பது அவசியம் என்று தாம் கருதுவதாயும் அவர் கூறியிருந்தார். லாகூரையும் அமிருதசரஸையும்போலச் சின்ன பின்னமான நிலையில், காஷ்மீரத்தைக் காஷ்மீரிகள் பெறக் கூடாது என்று அவரும், அவருடைய மற்றச் சகாக்களும் விரும்புகின்றனர். அதற்கு இப்போது அவருக்குச் சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது.

✲

### யார் அம்மா?

இருபது வருஷங்கள் சேர்ந்து வாழ்க்கை நடத்திய ஒரு தம்பதிகள், இருபதாவது வருஷ பூர்த்தியைக் கொண்டாட நிச்சயித்தார்கள்.

கணவன் பக்கத்திலிருந்த அறையில் எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பினான். அந்த அறையில் ஒரு கிழவி உட்கார்ந்து எதையோ தைத்துக்கொண்டிருந்தாள்.

"இதோ பார்! உன் அம்மாவை இங்கேயே விட்டுவிட்டு இன்றைக்கு ஒரு நாளாவது நாம் மட்டும் தனியாக ஏதாவது ஓர் ஊருக்குப் போய் வரலாமே? என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் கணவன்.

"அது என் அம்மாவா? நாசமாய்ப் போயிற்று! அவள் உங்கள் அம்மாவாக்கும் என்றல்லவோ இத்தனை நாளாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று கத்தினாள் மனைவி!

—பெர்னார்கைன் கில்டீடி

### பர்வம்!

சில பெண்கள், தாம் ஐம்பதாம் வயதில் எப்படி இருப்போம் என்பதை நினைத்து, தம் இருபதாம் வயதிலேயே கவலைப்படத் தொடங்கி முப்பதாம் வயதில் கிழடாகப் போய் விடுகிறார்கள்!

—பி. எஸ். பிரென்னர்

# யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

**2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா**

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 2-கோடி |
| ரிசர்வ் நிதி | ரூ. 30-லட்சம் |

**ஸ்ரீ. ஜி. டி. பிர்லா**
(சேர்மன்)

**பி. டி. தாகூர்**
ஜெனரல் மானேஜர்

தென் கிளைகளின் தொகுதி:
சென்னை (மெயின்), சௌகார்பேட்டை,
பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை,
காரைக்குடி, புதுக்கோட்டை, மைசூர்

தென் கிளைகளின் மானேஜர்:
**ஸ்ரீ. கே. ஆர். கே. ஐயங்கார்**
*310-11, லிங்கி செட்டி தெரு,*
சென்னை

**எல்லாவிதமான நாணயமாற்று அலுவல்களும் வியாபார விஷயங்களும் கையாளுவதற்குத் தகுதியுள்ளவர்கள்**

எங்கள்
**3 வருட**
காஷ் சர்டிபிகேட்டுகளில்
முதலீடு செய்யுங்கள்

இந்தியாவிலும், பர்மாவிலும் கிளைகள் எங்கும் உள்ளன.
உலகம் முழுவதும் ஏஜன்ஸி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

88877

# வலியும் வனப்பும்

*ஜான் கிப்ஸன்*

வலியும் வேதனையும் எல்லோருக்கும் பொதுதான். வீட்டில் சுத்தியால் கையை நசுக்கிக் கொண்ட அக்காவின் அழுகுரல், வாத நோயால் துடிக்கும் தாயின் தவிப்பு, பல் வலியால் அவஸ்தைப்படும் தந்தை, அடிக்கடி தலைவலியால் கஷ்டப்படும் வயோதிகர்கள்— இப்படி அநேக குடும்பங்கள் பல வலிகளாலும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சியே அதிகமாக இருக்கும். ஆனால் நாம் அனுபவிக்கும் அவஸ்தை அளவுக்கு மீறியதாகும். நாம் எவ்வளவு கஷ்டப்பட வேண்டுமோ அதைவிட இரட்டிப்பாகக் கஷ்டத்தை வெளிப்படுத்திக் கொள்ளுகிறோம். வலி ஏற்படும் விதத்தையும், வழி முறைகளையும் நாம் தெரிந்து கொண்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

உடலின் மேற்பரப்பு முழுவதும், 'வலி தரும்' நுண்ணிய இடங்களால் மூடப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில்தான் நரம்புகள் முடிகின்றன. இந்த நரம்பு நுனிகளுக்கு ஏதாவது அதிர்ச்சியோ, அடியோ ஏற்பட்டால், உடனே அந்தச் செய்தி மூளைக்குக் கொண்டு செல்லப் படுகிறது. மூளை இதை எடை போட்டுப் பார்த்து, அதற்குத் தகுந்த மாதிரி வலியை உண்டாக்குகிறது. இது அல்லாமல் வலி யேற்படுவது இருதயத்தின் தன்மையையும் பொறுத்திருக்கிறது. மனம் நிம்மதியற்றிருந்தாலும், கலவரமாக இருந்தாலும் அதிகமான வலியைத் தரும். அப்படியில்லாது மனம் அமைதியாக இருந்தால் வலியும் குறைந்துதான் இருக்கும். வேதனைப்படும் ஒரு மனிதன் சற்றுக் களைப்பாறி அமைதியோடு இருந்தால், முக்கால் பாகம் வலி குறைந்துவிடும் என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். கட்டு மீறிய எந்த உணர்ச்சியும் இரத்த ஓட்டத்தைப் பாதித்து, வலி தரும் நரம்புகளின் மேல் அதிகமாக அழுக்கும். ஏதாவது வலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, மனம் வேறு ஏதாவதொன்றில் லயித்துவிட்டால், நாம் அவ்வளவாக வலியைப் பொருட்படுத்துவதில்லை. வலியே நமக்கு அப்போது தெரியாது. வீடு தீப்பற்றி எரியும்போது, பிடுங்கியது மிச்சம் என்ற ஒரே எண்ணத்தோடு நாம் இருப்பதால்தான், நுழைந்தால் நெருப்புச் சுட்டுத் தீய்த்துவிடும் என்ற பயத்தையும் கருதாமல், நாம்

> கையில் கத்தி விழுந்து காயம் ஏற்பட்டு விட்டால். உடனே நமக்கு வலி ஏற்படுகிறது. இப்படி நேர்வதற்குக் காரணம் என்ன என்பதைக் கூறி வலியுணர்ச்சியைப் பற்றி ஆராய்கிறார் கட்டுரையாளர். ஏஷியாடிக் டைஜஸ்ட்டில் வெளி வந்ததின் சாரம்.

நுழைந்து பொருள்களைக் காப்பாற்ற முயலுகிறேம். சில இந்திய நாடோடிப் பிச்சைக்காரர்கள், தங்கள் நகங்களில் குண்டூசிகளைக் குத்திக் கொள்ளுகிறார்கள். அவர்கள் அதனுல் ஏற்படும் வலியைப் பொருட்படுத்துவதே இல்லை. காரணம் என்னவென்ருல், வேறு ஏதோ ஒரு லட்சியத்திலேயே மனம் ஈடுபட்டிருப்பதால்தான். இப்பேர்ப்பட்ட சமயங்களில், வலி தரும் நரம்புகள் கொண்டுவரும் வேதனைச் செய்திகளை வரவேற்க மூளை மறுத்து விடுகிறது. வலி இரண்டு விஷயங்களைப் பொறுத்துத்தான் ஏற்படும். முதலாவதாக நாம் தாக்கப்பட்ட அளவைப் பொறுத்தது, நாம் ஏற்படுத்திக் கொண்ட காயம். வியாதியின் தன்மைக்கு தகுந்தபடி வலியின் அளவும் மாறும். அடுத்தாற் போல மனத்தின் தன்மை. முதல் விஷயம் நம் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனுல் மனத்தை நாம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். எவ்வளவுதான் அதிகமான வலியாக இருந்தாலும் மனத் திண்மை இருந்தால், வலி குறைந்தே இருக்கும். இது மட்டுமல்லாது, சங்கீதமும் வலியைக் குறைக்கும் சாதனம் என்று விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். பல பல் வைத்தியர்கள், நோயாளிகளைப் படுக்க வைத்து, அடுத்த அறையில் சங்கீதத்தை இசைக்கச் செய்து, நோயாளி அதைக் கேட்டு இன்புற்றிருக்கும்போது, சிகிச்சை செய்து விடுகிருர்கள். பல ஆபரேஷன்களிலும் இம் முறை மிகவும் பயன்படுகிறது என்றும் கண்டிருக்கிருர்கள்.

சங்கீதம் மூலமாக வலியைக் குறைக்கும் இந்த முறை பிரசவ விஷயங்களில் அதிகமாகப் பயன் தருகிறது. அமெரிக்காவில் எட்வர்ட் கார்னல் என்ற டாக்டர் இம் முறையை ஒரு தடவை கையாண்டு, பதினன்கு நிமிடங்களில், மிகவும் வெற்றிகரமாக, தாய்க்கும் சேய்க்கும் எவ்விதக் கஷ்டமு மில்லாமல் பிரசவம் ஆகும்படியாகச் செய்து காட்டியிருக்கிருர். ஆனுல் இம் முறை எல்லா விஷயங்களுக்கும் சரி வராது என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம். சில சங்கீத ஒலிகள் வலியை அதிகப்படுத்தி விடுவதும் உண்டு.

வலியைக் குறைப்பதற்கு வலி தரும் நரம்புகளின் மேல் பனிக் கட்டியை வைத்துக் கட்டி விடுவதும் உண்டு. இப்படிச் செய்வதால் நரம்புகள் அதிகக் குளிரால் விறைத்து, செய்தியை மூளைக்கு அனுப்ப முடியாமல் வலுவிழந்து விடுகின்றன. இன்னெரு விசேஷம் என்னவென்ருல், உடலுக்கு எவ்வித மான காயமோ, அடியோ இல்லாமலேயே மூளையிலேயே வலி ஏற்படுவதும் உண்டு. இதைச் சாதாரணமாகத் தண்ணீரைக் கொண்டு ஊசி போட்டே, டாக்டர்கள் சரிப்படுத்திவிடுகிருர்கள்.

இவ்வளவும் சொன்ன பிறகு, ஆச்சரியம் என்னவென்ருல் பல பேர் வலியை உணர்வதே இல்லை. அவர்கள் தங்கள் வாழ்நாளிலேயே, கொஞ்சங்கூட வலியை உணர்ந்தது கிடையாது. இந்த விசித்திரமான நிலைமைக்குக் காரணம் என்ன என்பது இன்னும் டாக்டர்களுக்குப், புரியாத புதிராகவே இருக்கிறது. ஆனுல் இப்படி வலியையே உணராத பேர்வழிகள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று நினைத்தால் அது சுத்தத் தப்பு. வலியை

உணர முடியாதவர்கள் தான் மற்றவர்களை விட அதிகமான காயங்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை கங்கின், சாப்மன் போன்ற பெரிய டாக்டர்கள் சொல்லுகிறார்கள். சமீப காலத்தில் ஒரு ருசிகரமான சம்பவம் நடந்தது. வலியை உணர முடியாத ஒரு படைத் தலைவன் மரம் வெட்டும்போது கோடரியால் தன் காலை வெட்டிக் கொண்டான். வலியை உணராமலேயே இருந்தான். தன்னைச் சுற்றிலும் இருந்த தரை முழுக்க, வெட்டுண்ட காலிலிருந்து வடிந்த ரத்தம் நிறைந்திருந்ததைப் பார்த்த பிறகு தான், அந்த மனுஷனுக்கு உண்மை விளங்கிற்று. நல்லவேளையாக, உதவி வரும் வரையில் பிழைத்திருந்தான். பல குழந்தைகளுக்குக் கூட இது மாதிரி வலியை உணர முடிவதில்லை. சிறு பருவத்திலிருந்தே, அடுத்தடுத்து ஏதாவது வலியேற்பட்டு அதனால் அவர்கள் வேதனைப்படுவது அவர்களுக்கே தெரிவதில்லை. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

இதையெல்லாம் பார்த்தால் வலியை உணர்ந்து அனுபவிப்பது தான் மிக நல்லது என்று முடிவு கட்டத் தோன்றுகிறது. வலி சில சமயங்களில் வேதனை தந்தாலுங் கூட, துன்பத்திற்குப் பிறகு கட்டாயம் இன்பம் வருமல்லவா? மனம் மட்டும் உறுதியாகவும் அமைதியாகவும் இருந்தால், அந்தக் கொஞ்ச காலத் துன்பத்தைச் சமாளித்துக் கொண்டு வலிக்குப் பிறகு, வளரும் வனப்போடு வாழ முடியும்.

✻

## கொழுத்த விதம்

மிகவும் கொழுத்துப் போன ஓர் ஆசாமி தெரு வழியே போய்க் கொண்டிருந்ததை இரண்டு பேர் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

முதல் மனிதன், "டே, அவன் எவ்வளவு கொழுத்திருக்கிறான்!" என்றான்.

"ஒன்றும் ஆச்சரியமில்லை. பல மாதங்களாக உருளைக் கிழங்காலேயே அவன் உயிரோடு இருக்கிறான்"

"அது முடியாதே; அவன் அதையேயா சாப்பிடுகிறான்?"

"இல்லை, இல்லை! அதைத் தான் அவன் விற்றுப் பிழைக்கிறான்."

—ஸண்டே கைம்ஸ்

## முதல் வேலை

ஒரு பெண்மணிக்கு ஒரு போட்டியில் 900 பவுன் பரிசு கிடைத்தது. இந்தச் சமாச்சாரத்தை டெலிபோன் மூலம் அந்த அம்மாளுக்குச் சொன்னார்கள். அந்த அம்மாள் வீட்டில் இல்லாததால், வேலைக்காரன் பதில் சொன்னான்.

"பணத்தை வைத்துக் கொண்டு முதல் வேலையாக உங்கள் எஜமானி என்ன செய்வாள்?" என்று கேட்டார் பந்தய அதிகாரி.

"கிடைத்தவுடன் சரியாயிருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்பது தான் முதல் வேலை" என்றான் வேலைக்காரன்.

# மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி:
"HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ.
219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள் :

## மோஹன் ராம் கம்பெனியாரின்

சேலைகள், வேஷ்டிகள், கைக்குட்டைகள், பெட்ஷீட்டுகள்

✻

## M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸ்லிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ்
சின்டஸ் வகையரா

✻

## சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✻

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்




# அயோடிசால்

மிகச் சிறந்த

## ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

தொடர் கதை



# சாக்கடையிலிருந்து

பீ. கேசவதேவ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

"விலகு! எனக்கு ஏன் அபராதம் விதித்தார் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும்". மாதவன் அறைக்குள் பிரவேசிக்க முயன்றான். காவற்காரன் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். மாதவன் அவனை அடித்தான். மேஸ்திரிகளும், சேவகர்களும் அங்கே கூடினர். அவர்கள் மாதவனை நையப் புடைத்தனர். அவன் மயங்கி விழுந்தான். மயக்கம் தெளிந்து அவன் கண்களைத் திறந்ததும் ஒரு போலீஸ்காரன் தனக்குமுன்னே நிற்பதைக் கண்டான். அவனைப் பிடித்துக்கொண்டு போனான், போலீஸ்காரன்.

பதினான்கு மாதங்களுக்குப் பிறகு மாதவன் சிறையிலிருந்து விடுதலை அடைந்தான். அவனை வரவேற்க சிறைவாசலில் யாரும் இருக்கவில்லை. அவன் சுதந்திர உணர்ச்சியை யாரும் பாராட்டவில்லை. இதை அவன் எதிர் பார்க்கவும் இல்லை. பஞ்சாலைக்கு முன் நிமிர்ந்த பார்வையுடன் அவன் சிறிது நேரம் நின்றான். அவன் நண்பர்கள் வேலைக்குச் செல்லும் நேரம் அது. அவர்கள் யாரும் அவனிடம் பேசவில்லை. அவர்கள் அவனைப் பார்க்கவும் இல்லை. வீரமும், தன்மதிப்பும் நிறைந்த அந்தக் கண்களைக் காண அவர்களுக்குத் தைரியமில்லை. குற்றவாளிகளைப் போல் அவர்கள் தலைகுனிந்து உள்ளே சென்றனர்.

அவன் அங்கிருந்து மெதுவாக நடந்தான். உணவைப் பற்றி மாத்திரம்தான் அவன் அப்பொழுது சிந்தித்தான். வாழ்க்கையைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

அது ஒரு பிரச்னையும் அல்ல. நிராசையின் கரிய நிழல் அவன் முகத்திற்கு என்றும் திரையிடவில்லை. எதிர்காலத்தைப் பற்றி அவன் கவலைப்படவும் இல்லை. துக்கப்பட வேண்டிய இறந்தகாலம் அவனுக்கு இருக்கவில்லை. அவன் அகராதியில் "நேற்று", "நாளை" என்ற இரண்டு சொற்கள் இடம் பெறவில்லை. அவன் அன்றாடம் வாழ்க்கை நடத்துகிறவன். அவன் ஒரு ரிக்ஷாவை வாடகைக்கு வாங்கினான். அதை இழுத்துக் கொண்டு அவன் துறைமுகத்திற்குச் சென்றான். அன்றிலிருந்து அவன் ரிக்ஷாக்காரன்.

மாதவனுக்கு ஓய்வு கிடைக்கவில்லை. அந்த ரிக்ஷா சதா வாயு வேகத்தில் நகரத்து வீதிகளில் பாயும். ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு அவன் ஓடுவதைக் கண்டால், அவன் கால்கள் நிலத்தைத்

தொடுகின்றனவா என்ற சந்தேகம் தோன்றும். மாதவனுக்கு நடக்கத் தெரியாது என்பார்கள் ஏனைய ரிக்ஷாக்காரர்கள். அது உண்மைதான். ஓடி ஓடி அவன் நடப்பதை மறந்து விட்டான்.

வண்டியில் பிரயாணிகள் ஏறினதும் போர் முரசைக் கேட்ட போர்க் குதிரையைப் போல் அவன் உற்சாகம் அடைவான். வெயிலிலும், மழையிலும் அவன் ஓடுவான். இடது கையால் ரிக்ஷாவை அழுத்திப்பிடிப்பான். வலது கை அலட்சியமாக மணியைப் பிடிக்கும். தேகத்தைச் சிறிது முன்னே வளைப்பான். தலையை உயர்த்துவான். அவன் ஓடும் அழகே ஒரு கண்காட்சியாக இருக்கும்.

ரயில்வே ஸ்டேஷனிலும், பஸ் ஸ்டாண்டிலும், துறைமுகத்திலும்,சினிமாக் கொட்டகைக்கு முன்னும், கோர்ட்டு வாசலிலும் —எங்கெல்லாம் ரிக்ஷா தேவையோ அங்கெல்லாம் மாதவன் தயாராக இருப்பான். ரயிலும், பஸ்ஸும் படகும் வரும் பொழுது அவனுக்கு நல்ல வருவாய். புதிய படம் வந்தால் அது எவ்வளவு நேரம் ஓடும், எத்தனை "ரீல்கள்" இருக்கின்றன என்பன போன்ற தகவல்களை அவன் சொல்லுவான். பிரயாணிகளுக்காக ஏனைய ரிக்ஷாக்காரர்களைப் போல் அவன் போர் புரிய மாட்டான். அலட்சியமாகச் சிரித்துக் கொண்டு அவன் ரிக்ஷாவுக்கு முன் நிற்பான். ஒரு தரம் மாதவன் ரிக்ஷாவில் ஏறினவர் பிறகு அவன் ரிக்ஷாவில்தான் ஏறுவார்.

மாதவனுக்கு எளிதில் பணம் கிடைத்தது. கிடைத்த பணத்தை அவன் காப்பிக் கடைக்காரனிடம் கொடுத்தான். சாப்பாடும், படுக்கையும் அங்கே தான். அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பன் காப்பிக் கடைக்காரன். அவன் கொடுக்கும் பணத்தில் செலவு போக மீதியிருப்பதை கடைக்காரன் மாதவன் கணக்கில் வரவு வைத்துக் கொண்டான்.

"மாதவா! என்றும் ரிக்ஷா வாடகைக்கு வாங்குவது நஷ்டமல்லவா?" என்று ஒரு நாள் கடைக்காரன் கேட்டான்.

"எனக்கு என்ன நஷ்டம்? கிடைப்பதில் ஒரு பகுதி உடையவனுக்குக் கொடுத்தால் போதுமல்லவா?"

"சொந்த ரிக்ஷா இருந்தால் பிறகு கூலி கொடுக்க வேண்டிய அவசியம் இராது."

"சொந்த ரிக்ஷா வைத்துக் கொள்ளப் பணம் வேண்டும் அல்லவா?"

"வேண்டும்."

"பணம் யாரிடம் இருக்கிறது?"

"என்னிடம் இருக்கிறது."

"உனக்கு எங்கிருந்து பணம் கிடைத்தது?"

"நீ என்னிடம் கொடுத்த பணம் இருக்கிறது."

"என் செலவுக்காகத் தானே நான் பணம் கொடுத்தேன்!"

"உன் செலவு போக பாக்கி இருக்கிறது."

"ரிக்ஷா வாங்கப் போதுமா?"

"போதும். ஒரு ரிக்ஷா விலை பேசி இருக்கிறேன். நாளைய தினம் அதை வாங்குவோம்."

மறு நாள் சொந்த ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு மாதவன் வீதியில் ஓடினான்.

3

அந்தி நேரம். வீதி அல்லோல கல்லோலப்பட்டது. மோட்டார்களும் குதிரை வண்டிகளும்,

மாட்டு வண்டிகளும், ரிக்ஷாக் களும்—புதுமையின் இளமையும், பழமையின் முதுமையும்—முட்டி மோதிக் கொண்டும், ஊர்ந்து கொண்டும், பாய்ந்து கொண்டும், அங்கு மிங்கும் சென்றன. இந் தக் கோலாகலத்திற்கு மத்தி யில் வாழ்க்கை மெதுவாகவும், சாய்ந்தும், சரிந்தும், அழுது கொண்டும், சிரித்துக் கொண்டும் பிரயாணம் செய்தது.

மாதவன் ரிக்ஷா, பிரயாணி களுக்கு மத்தியிலும், வாகனங் களுக்கு மத்தியிலும் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றது. அவன் வலது கை மணி மீது இருந் தது. ஆனால், அவன் மணி அடிக்கவில்லை. வாகனங்கள் மீதும், பிரயாணிகள் மீதும் அடிக்காமல் லாகவமாக அவன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு ஓடும் அற்புதக் காட்சியைக் காண ஆயிரம் கண்கள் வேண் டும். ரிக்ஷாவில் இருப்பவர்கள் ரிக்ஷா, மோட்டாரில் மோதாமல் இருக்க வேண்டுமென்று பிரார்த் தனை செய்வார்கள். ரிக்ஷா தங் கள் மீது இடிக்கு மென்று பிர யாணிகள் நினைப்பார்கள். ஆனால், அது யாரையும் மோதித்தள் ளாது. பிரயாணிகளை ரிக்ஷா அணு கியதும் மாதவன் அலட்சியமாக அதை வேறு பக்கம் திருப்புவான். உடனே அவன் சிரிப்பான். மறு கணம் ரிக்ஷா தன் போக்கில் கம்பீரமாகச் செல்லும். பலனை எண்ணி நடுங்காதவனுக்கு மாத் திரம் தான் இத்தகைய சாகஸங் களைச் செய்ய முடியும். மாதவன் இந்த இனத்தைச் சேர்ந்தவன்.

அந்தி நேரம். ஒரு பிர யாணியை ஏற்றிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந் தான் மாதவன். ரயில் வந்து விட்டது. ஐந்து நிமிடங்கள் தான் ரயில் அந்த ஸ்டேஷனில் நிற்கும். அவன் பஸ் ஸ்டாண்டை அடைந்து விட்டான். இன்னும் மூன்று நிமிடங்கள் அவன் வேக மாக ஓடினால் தான் உரிய காலத் தில் ஸ்டேஷனை அடைய முடியும். பிரயாணியை அந்த ரயிலில் ஏற்ற அவன் வாக்கு அளித்திருந்தான்.

"ரயில் கிடைக்குமா?" என்று பொறுமை இழந்த பிரயாணி கேட்டான். மாதவன் பதில் சொல்லவில்லை. மூச்சுக் கூட விடாமல் அவன் வேகமாக ஓடி னான்.

"இங்கே ரயில் எவ்வளவு நேரம் நிற்கும்?"

இந்தக் கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை.

பிரயாணி பொறுமை இழந் தான். "ரயில் கிடைக்கு மென்று நான் நினைக்கவில்லை."

ரிக்ஷா திடீரென்று நின்றது. "நீங்கள் பேசாமல் உட்காருங் கள்!" என்றான் மாதவன். அவ னைப் பிறர் சந்தேகிப்பதையோ, அவன் திறமையைப் பிறர் சந் தேகிப் பதையோ அவன் பொறுக்க மாட்டான்.

பிரயாணி அதற்குப் பிறகு ஒன்றும் கேட்கவில்லை. மாதவன் கோபத்துடன் வண்டியைப் பின்னே தள்ளினான். பிறகு, வேகமாக முன்னே இழுத்தான். "ஐயோ!" என்ற அலறல் கேட் டது. அதைத் தொடர்ந்து அங்கே நின்றவர்களும் "ஐயோ!" என்று அலறினார்கள். தூரத்தில் இருந்தவர்கள் அங்கே ஓடி வந்தனர். அவன் ரிக் ஷாவை நிறுத்தி விட்டு அந்த இடத்திற்கு ஓடினான்.

ஒரு சிறுமி சாக்கடையில் விழுந்து கிடந்தாள். அவன்

சிறுமியை வாரி எடுத்தான். பீதி அடைந்த சிறுமி சுற்று முற்றும் பார்த்தாள். "அரிசி—அரிசி—அரிசி போய் விட்டதே!" என்று சிறுமி துடித்தாள்.

சிறிது தூரத்தில் ஒரு கூடை கிடந்தது. அதற்கு அருகில் கொஞ்சம் அரிசியும், மூன்று மிளகாய்களும், ஒரு பிடி உப்பும் சிந்திக் கிடந்தன.

"அரிசியும், உப்பும் மிளகாயும் போய் விட்டதே!" சிறுமி கூடையை நோக்கி ஓடினாள். "வீட்டுக்குப் போனால் அம்மா என்னை அடிப்பாள்!" என்று கதறி அழுதாள். சிந்தின அரிசியை வாரி எடுக்க ஆரம்பித்தாள்.

அவன் கலங்கினான். சிறிது நேரம் அசையாது சிலை போல் நின்றான். மாதவன் ரிக்ஷா இழுக்க ஆரம்பித்துப் பதினெட்டு மாதங்களாயின. அந்தக் காலத்தில் எந்த விதமான சம்பவமும் நிகழவில்லை. அவன் சிறுமி மீது இரக்கப் பட்டான். தன் நல்ல பெயர் உடைப் பட்டு விட்டதற்காக வருந்தினான்.

"ரயில் புறப்படும் நேரமாய் விட்டது" என்றான் பிரயாணி. அவன் தன்னுணர்வு பெற்றான். பிரயாணியை உரிய காலத்தில் ஸ்டேஷனில் சேர்க்க வேண்டும்; குழந்தையைத் திருப்திப் படுத்தவும் வேண்டும். அவன் திகைத்தான். "போனது போகட்டும் நீ அழாதே. நான் உனக்கு அரிசி வாங்கித் தருகிறேன்."

"ராத்திரி சமைக்க வேறு அரிசி இல்லை. அம்மா என்னை அடிப்பாள்."

"அம்மா உன்னை அடிக்க மாட்டாள். அரிசியும், உப்பும், மிளகாயும் நான் வாங்கித் தருகிறேன். நீ இங்கேயே இரு. நான் சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்." அவளை வீதி ஓரத்தில் நிறுத்தி விட்டு அவன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு ஓடினான்.

சிறுமி அழுதாள். பல சிறுவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். அனுதாபத்துடன் அவர்கள் பல கேள்விகள் கேட்டனர். எந்த ரிக்ஷா அவள் மீது மோதிற்று? அவள் எங்கே விழுந்தாள்? அவளுக்கு அடிபட்டதா? கூடையில் எவ்வளவு அரிசி இருந்தது? அவள் வீடு எங்கே? அவள் பெயர் என்ன? இந்த விவரங்களெல்லாம் அவர்களுக்குத் தெரிய வேண்டும். ஆனால், அவள் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. சிந்திக் கிடந்த அரிசியைப் பார்த்துக் கொண்டு அவள் கண்ணீர் வடித்தாள்.

சம்பவத்தை நேரில் கண்ட சிறுவன் "மாதவன் ரிக்ஷாதான் அவளைக் கீழே தள்ளிற்று" என்றான். ஆனால், இதை யாரும் நம்பவில்லை. அவன் ரிக்ஷா அது வரையில் யார் மீதும் மோதினதில்லை—இனி மோதவும் மோதாது என்பது அவர்கள் தீர்ப்பு. இதைப் பற்றிப் பலத்த வாக்கு வாதம் நடந்தது. கடைசியில், சிறுமியை அடித்துத் தள்ளினது மாதவனின் ரிக்ஷா தான் என்று ஒரு பிச்சைக்காரி சாட்சி சொன்னாள். இது விவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தது. தான் உடனே திரும்பி வருவதாகவும், அரிசி வாங்கித் தருவதாகவும் மாதவன் சிறுமிக்கு வாக்களித்திருப்பதாகவும் பிச்சைக்காரி சொன்னாள்.

"சிறுமியைத் தேற்றுவதற்காக அவன் கொடுத்த வாக்குறுதி இது" என்றான் ஒருவன்.

"மாதவன் ஜகஜாலன்!" என்ருன் இன்னெருவன்.

விவாதம் சிறுமியை ஆகர்ஷித்தது. இதே விவாதம் அவள் மனதிலும் நடந்து கொண்டிருந்தது. "உனக்கு அவனைத் தெரியுமா?" என்று அருகிலிருந்த சிறுவனிடம் அவள் கேட்டாள்.

"தெரியும். சொன்ன சொல் தவருதவன் மாதவன்" என்ருன் சிறுவன்.

இன்னெருவன் சிறுவன் மீது பாய்ந்தான், "சொன்ன சொல் தவருதவன் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"அடுத்த மாமாங்கத்தன்று தான் இனி அவனை நீ காணமுடியும்" என்ருன் மற்றெருவன்.

சிறுமி கதறி அழுதாள். "ராத்திரி சமைக்க அரிசி இல்லை" அம்மா என்னைக் கொல்லுவாள்.

"உங்களுக்கு இங்கே என்ன வேலை?" என்று கேட்டுக் கொண்டே மாதவன் ஓடி வந்தான். உடனே சிறுவர்கள் மூலைக்கு ஒருவராக ஓடினர். அவன் சிறுமியின் கண்ணீரைத் துடைத்தான். "நீ இன்று ஏதாவது தின்ருயா?" என்று கருணை நிறைந்த குரலில் கேட்டான் மாதவன்.

"ஆம்; மத்தியானம் ஒரு சொம்பு ஜலம் குடித்தேன்"

"வா!" என்ருன் மாதவன். கூடையுடன் சிறுமி அவனைப் பின் தொடர்ந்தாள்.

மாதவன் ஆறு வாழைப்பழங்கள் வாங்கி சிறுமியிடம் கொடுத்தான். ஆம்; முதல் தரமான ஆறு வாழைப் பழங்கள்! அவள் வரண்ட அதரங்களில் புன்னகை பூத்தது. பழங்களை அவள் கூடையில் வைத்தாள்.

"நீ ஏன் பழத்தைத் தின்னவில்லை?"

"வீட்டிற்குச் சென்று தின்னுவேன்." அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

"இப்பொழுது ஏன் தின்னக் கூடாது?"

"வீட்டில் அம்மா இருக்கிருள். நானும், அம்மாவும் தின்னுவோம்!"

சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் நடந்தான். அவன் கேட்டான்; "உனக்கு அப்பா இருக்கிருரா?"

"இல்லை"

"உன் உடன் பிறந்தவர்கள் இருக்கிருர்களா?"

"இல்லை"

"உன் வீடு எங்கே?"

"அங்கே?" அவள் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினுள்.

"உன் பெயர் என்ன?"

"கமலம்"

"உன் அம்மா பெயர் என்ன?"

"கல்யாணி"

அவன் ஒரு கடையில் பிரவேசித்தான். "கூடையில் எவ்வளவு அரிசி இருந்தது?" என்று அவன் கேட்டான்.

"உழக்கு அரிசியும் உப்பும், மிளகாயும் இருந்தன"

ஒரு படி அரிசியும், அதற்குத் தேவையான உப்பும், மிளகாயும் கொடுக்கும்படி அவன் கடைக்காரனிடம் சொன்னுன். "இது எங்கிருந்து கிடைத்தது என்று அம்மா கேட்டால் நான் என்ன பதில் சொல்லவேண்டும்?"

"நீ என்ன சொல்லுவாய்?"

"நான் என்ன சொல்லவேண்டும்?"

"நீ நடந்ததைச் சொல்லவேண்டும்"

"உங்கள் பெயர் என்ன?"

"மாதவன்"

"மாதவன்—மாதவன். உங்கள் வீடு எங்கே இருக்கிறது?"

"எனக்கு வீடு இல்லே"

"வீடு இல்லேயா?" அவளுக்குச் சிரிப்பு வந்தது. "அம்மா இருக்கிறாளா?"

"இல்லே"

"அப்பா இருக்கிறாரா?"

"இல்லே"

"பொய்—பொய்." அவள் சிரித்தாள். மாதவனும் சிரித்தான்.

அரிசியை அளந்து கூடையில் போட்டான் கடைக்காரன். அதன் மீது இரண்டு பொட்டலங்களேயும் போட்டான். தன் கையிலிருந்த வாழைப்பழங்களேயும் கமலம் கூடையில் வைத்தாள். பிறகு, கூடையைத் தலேயில் வைத்துக் கொண்டாள்.

"நான் போகட்டுமா?"

"நீ தனியே போவாயா?"

"போவேன்"

"அப்படியானுல் போ"

நன்றி யறிதலுடன் கமலம் மாதவனேப் பார்த்தாள். பிறகு, அவள் நடந்தாள். மாதவனும் அவளேத் தொடர்ந்து சிறிது தூரம் நடந்தான். அப்படி நடக்க அவன் ஆசைப்பட்டான்.

"நீ நாளேய தினம் வருவாயா?"

"எதற்காக?"

"சும்மா வா"

"நீங்கள் என்னேக் கீழே உருட்ட மாட்டீர்களே!" அவள் சிரித்தாள்.

"மாட்டேன்!" மாதவனும் சிரித்தான்.

"அப்படியானுல் நான் நாளேய தினம் வருகிறேன்."

மாதவன் நின்முன். அவள் நடந்தாள். கமலம் கண்ணுக்குத் தெரியாமல் மறையும் வரையில் மாதவன் அவளேப் பார்த்துக் கொண்டு நின்முன். அவள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்த பிறகு கூட அவள் தன் முன் நிற்பதாக அவன் நினேத்தான். அந்தக் களங்கமற்ற சிரிப்பும், நன்றியறிதலான பார்வையும்....

"நாளே.........நாளே" "என்று அவன் உச்சாடனம் செய்தான். அதுவரையில் அவன் வாழ்க்கையில் "நாளே" இடம் பெறவில்லே. அன்று தான் முதன்முதல் அவன் வாழ்க்கையில் "நாளே" இடம் பெற்றது.

"நாளே...நாளே" என்று உச்சரித்துக் கொண்டே அவன் நடந்தான்.

## 4

மறு நாள். அந்தி நேரம். மாதவன் வாயு வேகத்தில் ஓடி வந்தான். வழியில் இரண்டு பிரயாணிகள் நிற்பதை அவன் கண்டான். ஸ்டேஷனுக்குச் செல்ல அவர்களுக்கு ரிக்ஷா வேண்டும். ஒரு ரிக்ஷாக்காரன் அங்கே இருந்தான். இன்னெரு ரிக்ஷா அவர்களுக்கு வேண்டும். அவர்கள், ரிக்ஷாவை எதிர்பார்த்துக் கொண்டு நின்ற பொழுதுதான் மாதவன் வந்தான். "மாதவா—மாதவா!" என்று அழைத்தான் ரிக்ஷாக்காரன்.

"என்ன?" என்று கேட்டான் மாதவன். ஆனுல், அவன் நிற்கவில்லே.

"ஸ்டேஷனுக்கு இவர்கள் போக வேண்டும். வருகிருயா?"

"நான் வரமுடியாது. நான் இன்னெரு இடத்திற்குப் போகிறேன்!" அவன் நிற்காமல் ஓடினுன்.

சம்பவம் நடந்த அதேஇடம்! அந்த இடத்தை அடைந்ததும் மாதவன் நின்முன். அவன் நெடுமூச்சு விட்டான். நிமிர்ந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். அவன் யாரை தேடுகிருன்?

பழம் வாங்கின கடைக்கு வேக மாகச் சென்றான். அந்தப்பக்க மெல்லாம் அவன் தேடினான். அரிசி வாங்கின கடைக்கும் சென்றான். பிறகு, ரிக்ஷா இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தான். அவன் அங்கே நின்று மீண்டும் சுற்று முற்றும் பார்த்தான்.

"நேற்றுக் கீழே விழுந்த சிறுமி இன்றும் வந்திருந்தாள்" என்றான் ஒரு சிறுவன்.

"எங்கே? அவள் எங்கே?" என்று அவன் ஆவேசத்துடன் கேட்டான்.

"தன்னைக் கீழே தள்ளின ஆள் எங்கே என்று அவள் என்னைக் கேட்டாள். எனக்குத் தெரியாது என்றேன் நான். அதன் பிறகு அவள் போய் விட்டாள்?

"அவள் இங்கிருந்து போய் வெகு நேரமாகிறதா?"

"சிறிது நேரத்திற்கு முன் தான் போனாள்."

அவன் முகத்தில் நிராசையின் நிழல் தென்பட்டது. தன் வாழ்க்கையில் முதன் முதல் உதித்த "நாளை" அஸ்தமித்து விட்ட தென்று அவன் முடிவு செய்தான். துக்கம் அவன் இருதயத்தை ஊடுருவிச் சென்றது. வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டு அவன் சிறிது நேரம் நின்றான். பிறகு, ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு மெதுவாக நடந்தான்.

நாட்களும், வாரங்களும் ஓடி மறைந்தன. ஒரு நாள் இரவு சிறிய சந்தில் ரிக்ஷா மீது மாதவன் உட்கார்ந்திருந்தான். அந்த ரிக்ஷாவில் வந்தவன் ஒரு வீட்டில் பிரவேசித்தான். அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு மாதவன் அங்கே இருந்தான்.

"கொஞ்சம் மண் ணெண்ணெய் தருவீர்களா?" என்று கேட்டது ஒரு குரல். மாதவன் திரும்பிப் பார்த்தான். அவன் யாரையும் காண வில்லை.

"யாரது?" என்று கேட்டான் மாதவன்.

இருளிலிருந்து ஒரு சிறுமி வெளிச்சத்திற்கு வந்தாள். "இந்த விளக்கில் கொஞ்சம் மண்ணெண்ணெய் ஊற்றுங்கள்." சிறுமி சிறிய விளக்கை நீட்டினாள்.

"யார்? கமலா?" மாதவன் குதித்து எழுந்தான். "கமலம்! உனக்கு என்னைத் தெரிகிறதா?"

"தெரியும்...தெரியும்" என்று சிறுமி பூரிப்புடன் கூறினாள். அவள் ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள். "அன்று என்னை வரச்சொன்னீர்களே! ஆனால், அன்று நீங்கள் வரவில்லை!"

"நான் வரும் வரையில் நீ ஏன் காத்திருக்கவில்லை?"

"நான் ஒருவனைக் கேட்டேன். நீங்கள் வரமாட்டீர்கள் என்று அவன் சொன்னான்"

"போகட்டும். உன் வீடு எங்கே?"

"அதோ!" அவள் இருளில் ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டினாள். "உங்களைப் பார்க்க வேண்டுமென்று அம்மா சொன்னாள்."

"நாம் போகலாம், வா."

"அங்கே வெளிச்சமில்லை."

"அந்த விளக்கில் மண்ணெண்ணெய் ஊற்றுகிறேன்." மாதவன் விளக்கை வாங்கினான். ரிக்ஷாவில் இருந்த விளக்கை எடுத்து அதிலிருந்த மண்ணெண்ணெயை அந்த விளக்கில் ஊற்றினான். பிறகு, விளக்கைக் கொளுத்தி அவளிடம் கொடுத்தான். அவள்



"நீ இவரை எங்கே கண்டாய்?" என்று கல்யாணி கேட்டாள்.

"மண்ணெண்ணெய் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நான் போனேன். கமலம் என்று அழைத்தார் இவர். அப்பொழுது தான் எனக்கு ஆளைத் தெரிந்தது"

"அவரை உட்காரச் சொல், மகளே!"

முன்னே நடந்தாள். மாதவன் பின்னே நடந்தான்.

இடிந்து தகர்ந்த சிறிய குடிசை அது. அவர்கள் திண்ணை மீது ஏறினார்கள். உளுத்துப் போன கதவுக்குப் பின்னே நின்றுகொண்டு கல்யாணி கேட்டாள்: "கமலம்! யார் அது?"

"அன்று ஒரு படி அரிசியும், உப்பும், மிளகாயும் வாங்கித் தந்தவர் அல்லவா?" என்று நன்றி நிறைந்த குரலில் அவள் கேட்டாள். "மகளே! அந்தப் பலகையை எடுத்துப் போடு. அவர் உட்காரட்டும்."

விளக்கைக் கீழே வைத்து விட்டு, கமலம் பலகையை நீக்கினாள். ஆனால், மாதவன் உட்காரவில்லை. அந்த இடிந்த குடிசையையும், கதவுக்குப் பின்னே நின்ற கல்யாணியின் முகத்தையும் கமலத்தின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு அவன் மௌனமாக நின்றான்.

"வேண்டாம். நான் இங்கே நிற்கிறேன்" என்றான் மாதவன். அவன் ஒரு பீடியை எடுத்துக் கொளுத்தினான். "கமலத்தின் தந்தை இறந்து எவ்வளவு காலமாகிறது?"

"அவளுக்கு ஐந்து வயது ஆகிறது. அவளுக்கு மூன்று வயதான பொழுது தந்தை இறந்தார்."

"நீங்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துகிறீர்கள்?"

"கடவுள் கருணையால் ஒரு விதமாகக் காலம் கழிக்கிறோம்...வஜ்ரம் போன்றிருந்த அவரைக் கடவுள் கொண்டு போய் விட்டார்..." அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. "நாங்கள் இப்படிக் கஷ்டப்பட வேண்டும் என்பது அவர் விருப்பம் போலும்!"

பீடி அணைந்தது. அவன் மீண்டும் பீடியைக் கொளுத்தினான். "நீங்கள் இன்று சாப்பிட்டீர்களா?"

" என்று சாப்பிட்டோம் என்பதையே மறந்து விட்டேன். கமலத்தின் தந்தை இறந்த பிறகு நாங்கள் கஞ்சியைத் தவிர வேறெதையும் காணவில்லை...... எனக்கு இனி ஒரு ஆசைதான். ஒரு நேரமாவது என் குழந்தைக்கு வயிறு நிறைய உணவு கொடுக்க வேண்டும்.'' அவள் பெருகி வரும் கண்ணீரைத் துடைத்தாள்.

மாதவன் பெரு மூச்செறிந்தான். கமலம் ஒன்றும் பேசாமல் விளக்கைப் பார்த்துக் கொண்டு அசையாது நின்றாள்.

ரிக்ஷாவின் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. அவன் ரிக்ஷாவில் வந்தவர் அவனை அழைத்தார். மாதவன் கதவை அணுகினான். மடியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்தான். பிறகு, அவன் சொன்னான்: ''இதை வாங்கிக் கொள்ளுங்கள், கமலத்திற்கு வயிறு நிறையச் சோறு போடுவதற்காக.''

கல்யாணி தயங்கினாள்.

" தயங்காதீர்கள். நீங்கள் இருவரும் நிறைய உண்ண வேண்டும். இதை வாங்கிக் கொள்ளுங்கள் ''

கல்யாணி கையை நீட்டினாள். மாதவன் ரூபாயை அவளிடம் கொடுத்தான். பிறகு, கமலத்தை அருகில் நிறுத்தி அவள் தலையைத் தடவிக் கொண்டே சொன்னான்: ''குழந்தாய்! நான் நாளைய தினம் வருகிறேன்.''

" நாளைய தினம் வருவீர்களா?'

" வருகிறேன் — கண்டிப்பாக வருகிறேன் ''

" எப்பொழுது?''

" மத்தியானம் ''

மீண்டும் மணிச் சத்தம் கேட்டது. மாதவன் வேகமாகச் சென்றான்.

* * *

காலையிலிருந்து கமலம் மாதவனை எதிர் பார்த்துக் கொண்டு வாசலில் நின்றாள். ''அம்மா! அவரை நான் எப்படி அழைக்க வேண்டும்?'' என்று கல்யாணியிடம் கேட்டாள் கமலம்.

" மாமா என்று அழை ''

" மாமா! ...மாமா! மாமா என்று அழைத்தால் போதும் ''

வீதியில் ரிக்ஷா போனால் அவள் தாயை அழைப்பாள். 'அம்மா! மாமா வருகிறார்! ''

கல்யாணி வெளியில் வந்து பார்ப்பாள். " அது அவரல்ல. நீ சும்மா இரு. மத்தியானம் வருகிறேன் என்றுதானே சொன்னார்''

கல்யாணி வீட்டில் அன்று விருந்து. தன் புதல்விக்கு வயிறு நிறைய உணவு கொடுக்கும் புனித மான தினம் அது. அவள் சொன்னாள்: " உனக்கு வயிறு நிறைய உணவு தருவேன். போய் விளையாடு''

''அம்மா! மாமா வந்த பிறகு சாப்பிட்டால் போதும். மாமாவும் நம் வீட்டில் சாப்பிட வேண்டும்.''

" நம் வீட்டில் அவர் சாப்பிடுவாரா, மகளே!''

''சாப்பிடுவார். நான் சொன்னால் மாமா சாப்பிடுவார்.''

''அப்படியானால் நாம் பிறகு சாப்பிடுவோம். நீ போய் குளித்து விட்டுவா.'

கமலம் குளித்து விட்டு வந்தாள். கல்யாணியும் குளித்தாள்.

''மாமா வரும் பொழுது நீ இந்த வேஷ்டியை உடுத்திக்

கொண்டர் நிற்கப் போகிருய்?'' என்று கேட்டாள் கமலம்.

"வேறு என்ன செய்வது? நம் மிடம் நல்ல வேஷ்டி இல்லையே!''

''அம்மா! உனக்கு வேஷ்டி வாங்கித் தரும்படி நான் மாமா விடம் சொல்லட்டுமா?''

மகளின் கேள்வி கல்யாணி யின் மனதைப் புண்படுத்திற்று. அவள் புதல்வியைக் கடிந்தாள்.

''மாமா நமக்கு யாருமல்ல வென்ருல், அவர் ஏன் அரிசி வாங் கித் தந்தார்? நமக்கு ஏன் பணம் தந்தார்? இங்கே இன்று ஏன் வருகிருர்?''

"நாம் கேட்காமல் அவைகளைத் தந்தார். நாம் ஒன்றும் கேட்கக் கூடாது. அவராகத் தருவதை வாங்கிக் கொள்வோம்.''

ஒரு ரிக்ஷா வாசலில் நின்றது. மாதவன் உள்ளே பிரவேசித் தான்.

''மாமா... மாமா'' கமலம் ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள். ''மாமா...மாமா'' அவள் அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

மாதவன் கையில் ஏதோ இருந் தது. அதை அவன் கமலத்திடம் கொடுத்தான்.

"இது என்ன, மாமா?"

''நீயே சொல்!''

அவள் பொட்டலத்தைப் பிரித் தாள். ஒரு பாவாடையும், ஜம் பரும்! பூரிப்புடன் அவள் குதித் தாள். "அம்மா! எனக்குப் பாவாடையும், ஜம்பரும்!''

இன்பத்தை மறைத்துக் கொண்டு அவள் அடுக்களைக்குச் சென்ருள். "அம்மா! இதைப் பார்!''

கல்யாணியின் கண்கள் குளிர்ந் தன. "அதை இப்பொழுதே உடுத்திக் கொள்ளாதே. அழுக் காய்விடும். எங்கேயாவது போகும் பொழுது உடுத்திக் கொள்ளலாம்."

மாதவன் இதை அனுமதிக்க வில்லை. "அவள் அதை உடுத்திக் கொண்டிருக்கட்டும். எங்கேயா வது போகும் பொழுது உடுத்திக் கொள்வதற்காக இன்னொரு பாவாடை வாங்கித் தருகிறேன்."

கல்யாணி கமலத்திடம் சொன் ஞள்: "மகளே! மாமாவைச் சாப் பிடக் கூப்பிடு.''

"சாப்பிட வா, மாமா.'' கமலம் அவன் கையைப் பிடித்து இழுத் தாள்.

அவன் சாப்பிட உட்கார்ந் தான். மாதவனும், கமலமும் ஒரே தட்டில் உணவு அருந்தினர் கள். சாப்பாடு முடிந்ததும் மாதவன் கேட்டான்: ''உனக்கு வயிறு நிறைந்ததா?"

''நிறைந்தது. வயிறு வெடித்து விடும்போல் இருக்கிறது." அவள் சிரித்தாள்.

"இனி என்றும் நீ வயிறு நிறை யச் சாப்பிடலாம். தெரிகிறதா?''

''மாமாகூட இருந்து சாப்பிட் டால்தான்என் வயிறு நிறையும்.''

மாதவன் பதில் சொல்லவில்லை. அவன் சிந்தித்தான்.

சிறிது நேர மானதும் மாதவன் எழுந்திருந்தான். "நீ ராத்திரி வருவாயா, மாமா?''

மாதவன் பதில் சொல்லவில்லை. அவன் மீண்டும் சிந்தித்தான்.

"ராத்திரியும் நான் மாமா வுடன் சாப்பிட வேண்டும்.''

கல்யாணியும் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் கதவுக்குப் பின்னே நின்ருள். "எனக்கு நாள்தோறும் சாப்பாடு போடு வீர்களா?'' என்ருன் மாதவன்.

(தொடரும்)


மேலான வைரங்கள்
சவரம் பொன் நகைகள்
அசல் வெள்ளிசாமான்கள்
பசுமர்த்தி கன்னையய செட்டி & சன்
PHONE: 4025.
GRAMS: "GOLDWORKS."
ஜுவலரி மான்ஷன்
மதறாஸ்.


பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது
அது மைசூர் பட்டானால் ஸ்பர்சத்
திற்கு மிருதுவாயுள்ளதுடன்
உயர்ந்த நெசவு, அதிகநாள்
உழைப்பு, மேலான ரகம்
எல்லாம்சேர்ந்து மிக அழ
கானதாகும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மேன்ட் தயாரிப்பு
கவர்ன்மேன்ட் சில்க் வீவிங் பாக்டரி; மைசூர்.

# புத்தக உலகம்

**சுயராஜ்ய சாஸ்திரம்:** [ஆசிரியர்: வினோபா பாவே, கிடைக்குமிடம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூபாய் இரண்டு]

இந்நூலை ஸ்ரீ மு. அருணாசலம் தமிழ்ப்படுத்தியிருக்கிறார். அவர் தம் முகவுரையில், "உண்மையான சுயராஜ்யம் எது என்பதையும், அது எவ்வாறு கைகூடும் என்பதையும் தெளிவாய் உரைக்கும் இந்நூலைச் சாஸ்திரம் என்று சொல்வது, எல்லா வகையிலும் பொருந்துவதாகும்" என்று கூறுகிறார். ஸ்ரீ வினோபா பாவே இந்நூலில் விளக்கம் செய்யும் சுயராஜ்ய முறை, ஏறக்குறைய பழைய கிராமக் குடியரசுகளின் புனருத்தாரணத்தை வற்புறுத்தும் மாதிரியிலேயே இருக்கிறது. அந்த முறையை ஒரு காலத்தில் அனுஷ்டித்து வந்த இந்தியாவின்மீது, அதே முறையின் இயல்பாக இருந்த பலவீனத்தின் காரணமாகத்தான் பிற நாட்டினர் மேலும் மேலும் படையெடுத்து வந்து, கடைசியில் இந்தியாவை அடிமைப்படுத்தவும் முடிந்தது என்று தக்க ஆதாரங்களைக் காட்டிப் பல அரசியல் சாஸ்திரிகள் கூறியிருக்கிறார்கள். அது ஒரு புறமிருக்க, ஸ்ரீ வினோபா பாவே கற்பனை செய்யும் சுயராஜ்யம் ஒரு நாட்டில் அமுலுக்கு வரமுடியுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. தவிரவும் இன்று சமூகத்திலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிச் சமூகத்திற்குச் சுபிட்சம் நல்குவது எப்படி என்னும் விஷயத்தை விரிவாக ஆராயாமல், அந்த விஷயத்தை ஏதோ ஒவ்வோரிடங்களில் மாத்திரம் தொட்டுக் காட்டிவிட்டு, ஜனங்கள் அஹிம்சையோடும், உண்மையோடும் வாழவேண்டும் என்றுதான் மாறி மாறிக் குறிப்பிடுகிறார். பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கு வழிகாட்டும் முறையில், பணக்காரர்களிடமிருந்து பலாத்காரமாகச் சொத்தைப் பிடுங்குவது சரியல்லவென்று கூறி, சில புது உபாயங்களைக் கடைப்பிடிக்கும்படி போதிக்கிறார். பணக்காரர்களுடைய செல்வம் மக்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்ற உறுதியை அரசாங்கம் அளித்தால், அவர்களுக்குத் தாங்களும் மக்களுக்கு உபயோகமாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் உண்டாகிவிடுமாம். பிறருக்கு வட்டிக்குப் பணம் கொடுத்தால் பணம் பெருகுகிறதுபோல, பணக்காரன் தன் சொத்தைப் பகிர்ந்தளிப்பதால் அது முன்னிலும் அதிகமாகப் பெருக வழி உண்டு என்று பணக்காரர்களுக்கு உபதேசம் செய்யும் முறையில் கூறுகிறார். இந்த உபதேசத்தினால் மட்டும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிவிட முடியும் என எதிர்பார்ப்பது கனவையும் நனவையும் ஒன்று எனச் சொல்லி வழக்காடும் முயற்சியே. ஸ்ரீ பாவே அரசியல், பொருளாதார அம்சங்களையே விரிவாக ஆராய்ந்து, காரிய சாத்தியமானதும், மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதுமான மார்க்கங்களைக் கண்டுபிடித்திருக்க வேண்டுமே ஒழிய, ஹிம்சை அஹிம்சைப் பிரச்னையிலேயே அரசியலையும் பொருளாதாரத்தையும் திணித்திருக்கக் கூடாது.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

பொதுவுடைமை முறைக்கும் நாஜிஸத்துக்கும் வேற்றுமையில்லை என்றே கருதுகிறார் ஸ்ரீ பாவே. காரணம் இவற்றில் எதுவும் மக்களுக்கு நன்மை தர முடியாது என்று கூறுகிறார். பொதுவுடைமை முறை ஒரே இடத்தில் செல்வத்தைக் கொண்டு வந்து குவித்து அப்புறம் பல இடங்களுக்கும் வினியோகம் செய்வது பல கஷ்டங்களுக்கு இடம் அளிக்கும் என்று கூறுகிறார். அப்படியானால்

சேகரிப்பு, விநியோகம் ஆகிய இரண்டிலும் சில சீர்திருத்தங்களைச் செய்ய முயல வேண்டுமே ஒழிய, நாஜிஸமும் கம்யூனிஸமும் வேறு வேறு என்பது பிரமை, என்று முடிவுகட்டுவது எப்படி நியாய மாகும்? கம்யூனிஸத்தைப் பூண்டோடு ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண் டிருக்கும் முதலாளித்துவப் பிரதிநிதிகள்கூட, நாஜிஸத்தையும் கம்யூனிஸத்தையும் ஒரே தராசில் எடைபோடத் துணிய வில்லை.

ஸ்ரீ பாவே தம் புத்தகத்தில் ஒன்றை ஆதரிப்பதற்கும், ஒன்றைக் குறை கூறுவதற்கும் தர்க்கரீதியான, ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங் களையோ ஆதாரங்களையோ காட்ட வில்லை. அத்துடன் தம் மனதுக்கு இத மானஓர் ஆட்சிமுறையை வற்புறுத்து வதற்காக, ஏதேதோ சொல்லிக் காரி யத்தை முடித்துக் கொள்ள அவசரப் படுவதுபோலவே புத்தகம் முழு வதையும் எழுதியிருக்கிறார். ஹிம்சை, அஹிம்சை என்பது கொள்கையளவில் முறையே கெட்ட தாகவும், நல்லதாகவும் இருக்கின் றன என்றாலும், ஓர் அரசாங்கம் பொது மக்களின் நன்மைக்காக, அவற்றை வேறு வழியின்றிப் பிர யோகம் செய்யும்போது அவை கேவ லம் கருவிகளாக மாறி விடுகின்ற னவே ஒழிய, லட்சியங்களாக இருப்ப தில்லை. ஏனென்றால் மனிதனுக்கு நலம் பயப்பது பொது நன்மையே ஒழிய, சில கொள்கைகளல்ல. ஆகவே, நல்ல காரியத்தின் பொருட்டுப் பிரயோகிக்கப்படும் அஹிம்சையோ, ஹிம்சையோ முறையே தம்முடைய நல்ல தன் மையையும் கெட்ட தன்மையையும் ஓரளவுக்கும் பேரளவுக்கும் இழந்து பொருள்மாற்றமே அடைந்து விடு கின்றன.

பொருளாதாரச் சுபிட்சத்துக்குக் காரியசாத்தியமான நல்ல வழிகளைக் காட்டியும், பணக்காரர்களுக்கு உடம் பில் தைக்காதபடி பொன்னே பூவே என்று உபதேசம் செய்யாமல், தாம் சரியல்ல அல்லது சரி என்று சொல்லுகிறவற்றை ஆதார பூர்வ மாகச் சொல்லியும், விரிவாக இப் புத் தகத்தை எழுதியிருந்தால்தான் முத லில் ஸ்ரீ விநோபா பாவே சொல்லு வது நிறைவேறுமா நிறைவேறாதா என்று யோசிக்கவாவது முடியும். இப்போது புத்தகம் உள்ள அரை குறை நிலையானது, சர்ச்சைக்கோ ஆராய்ச்சிக்கோகூடப் போதாத அளவில் இருக்கிறது.

புதுமைப் பதிப்பகத்தார் வழக்கம் போல மிகமிக அழகாகப் புத்தகத்தை வெளியிட் டிருக்கின்றனர். ஸ்ரீ மு. அருணாசலம் அவர்களின் மொழி பெயர்ப்பு, தெளிவாகவும் ஒரு முன் மாதிரியாகவும் இருக்கிறது.

**1. ஜமீனும் இனாமும் ஒழிக:** தமிழ்நாடு கிஸான் சபைக் காரியதரிசி ஸ்ரீ பி. சீனிவாசராவ் எழுதியுள்ள இந்தச் சிறு பிரசுரத்தில் ஜமீன்களும், இனாம்களும் தோன்றிய கதை, அவற் றில் அளவுக்குமீறி வரி வசூல் செய் யப்படும் கொடுமை, சுதந்திர இயக் கத்துக்கு அவை செய்த தீமைகள், அவை ஒழிய வேண்டியதின் அவசி யம் முதலியவற்றை மிகவும் தெளி வாக எடுத்துக் கூறியிருக்கிறார். இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்ட யாரும் ஜமீனுக்கும் இனாமுக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். தேசத் தின் நலனைக்கருதிப் பாடுபடும் அர சாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இந்தப் பிரசுரம் இன்று வழி காட்டி யாக இருக்கிறது. விலை அணா 4.

**2. நேரு சர்க்காருக்கு ஆபத்து!:** பண்டித நேருவின் அரசாங்கத் துக்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில் பஞ்சாபில் ராக்ஷ சத்தனமான கலகங்களைக் கிளப்பி யவர்கள் இந்துக்கள்தான் என்று லீகர்களும், முஸ்லிம்கள்தான் என்று மற்றவர்களும் பெரும்பாலும் நினைத் துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தப்பான அபிப்பிராயத்தினால் தேசத் தின் பிற பகுதியில் நிலவும் சகோதர பாவத்துக்கும் ஆபத்தாக இருக்கிறது. உண்மையில் இந்தக் கலகத்தைக் கிளப்பிய சதிகாரர்கள் யார்,

அவர்களை எப்படி முறியடிக்க வேண்டும் என்பனவற்றைத் துல்லியமாக விளக்குகிறது இந்தப் புத்தகம். சுதந்திர அரசாங்கம் நிலைபெற்று நிற்கவும் தேசத்தின் எதிர் காலத்துக்கு ஆபத்து ஏற்படாதிருக்கவும், தப்பபிப்பிராயங்களைப் போக்குவதுடன் மட்டும் நில்லாது, உண்மை விஷயங்களை அறிந்து மக்கள் ஆக்க வேலையில் ஈடுபடவும் வேண்டும். அதற்கு வழி காட்டி உதவி புரிகிறது 'கம்யூனிஸ்ட்' எழுதிய இந்தப் புத்தகம். விலை அணா 8.

**பாரதி வழி:** தேச நலனுக்காகப் பாரதி ஆற்றிய கவிதைப் பணியை எடுத்துக் காட்டி விமரிசனம் செய்யும் நூல் இது. இந்த முறையில் பாரதியைப்பற்றிச் சுருக்கமான அளவிலேனும் வெளிவரும் முதல் புத்தகம் இதுதான். இந்தப் புத்தகத்தின் பிரதிகள், எட்டயபுரம் பாரதி மண்டபத் திறப்பு விழாவின்போது ஒரே நாளில் மட்டும் 1800-க்கு மேல் விற்பனையாகி உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம். இந் நூலின் ஆசிரியரான ஸ்ரீ ப. ஜீவானந்தம் அவர்களின் பேச்சைப் போலவே எழுத்தும், தமிழ்ப் பண்பும், காம்பீரியமும், முற்போக்கு வேகமும் நிறைந்துள்ளது. 40 பக்கங்களுள்ள இந்தப் புத்தகத்தின் விலை 4 அணாத்தான்.

மேற்கண்ட மூன்று புத்தகங்களும் சென்னை, ஜனசக்தி காரியாலயத்தில் கிடைக்கும்.

**இருபா இருபஃது:** [ஆசிரியர்: ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார். கிடைக்குமிடம்: தருமபுர ஆதீனம். விலை தெரியவில்லை.]

அகவற்பாவையும் வெண்பாவை ஒன்றுக்குப் பின் ஒன்றாய் அமைத்து, ஆத்ம விசாரத்தைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்ட இந்நூலில் ஆத்ம ஞான ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும் விஷயங்கள் ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பும் உள்ளது. புத்தகத்தின் அச்சும், அழகும் நன்றாக இருக்கின்றன.

**தொண்டை நாட்டுத் தேவாரம்:** [கிடைக்குமிடம்: கணபதி வாசக சாலை, 69, கச்சேரி (கொச) வீதி, காஞ்சிபுரம். விலை அணா 12.]

தொண்டைநாட்டின் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள் 32 சம்பந்தமாக தேவாரத்திலுள்ள பாடல்கள்யாவும் அழகிய புத்தக வடிவமாக தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இலக்கியத் துறையிலும், சமயத் துறையிலும் ஈடுபட்டவர்களுக்குப் பயன்படும் நல்ல நூல். 116 பக்கங்களுள்ள இந்த நூலுக்கு மிகக் குறைவாக 12 அணா என்று விலையிட்டு வெளியிட்ட கணபதி வாசகசாலையினரைப் பாராட்ட வேண்டும்.

**சிவாஜி (13-வது ஆண்டு மலர்)** [ஆசிரியர்: திருலோக சீதாராம். சிவாஜி காரியாலயம், பெரிய கடைத் தெரு, திருச்சினாப்பள்ளி. விலை ரூபாய் 2.]

இந்த ஆண்டு மலரில், ந. சிதம்பர சுப்ரமண்யம், ந. பிச்சமூர்த்தி கொத்தமங்கலம் சுப்பு, ப. கோதண்டராமன், கலைவாணன், 'சிட்டி' சுகி முதலிய பல எழுத்தாளர்களும் எழுதியிருக்கிறார்கள். கதை, கவிதை, கட்டுரை முதலிய சகல அம்சங்களும் செறிந்துள்ளன. கதைகளும் கட்டுரைகளும் நன்றாக இருக்கின்றன. ஆனால் கொத்தமங்கலம் சுப்பு தாம் எழுதியுள்ள பாட்டில் இனம்களை ஒழிக்கக் கூடாது என்று கூறுகிறார். அவர் கூறுகிறபடி சைவமும் தமிழும் தழைப்பதற்காகவும், மற்றும்பல நல்ல காரியங்களுக்காகவும் இனம்கள் வழங்கப்பட்டிருந்தாலும், இன்று இனம்கள் மேற்படி லட்சியங்களுக்காகப் பாடுபடவில்லை.

மலர் சகல அம்சங்களிலும் சிறப்பாக இருக்கிறது. இவ்வளவு பெரிய மலருக்கு இரண்டு ரூபாய் விலை மிக அம் குறைவுதான்.

—கு. அ.

# சக்தி வாய்ந்த நூல்கள்

**லெனின் பிறந்தார்** : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்ருல் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிருர். படங்களுடன்

விலே ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

**இனி நாம் செய்யவேண்டுவது யாது?**

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்ரும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு

விலே ரூ. மூன்று — தபால் செலவு தனி

**உலோகமும் நாமும்** : மு. அருணுசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலே ரூ. ஐந்து — தபால் செலவு தனி

**ஹிந்து பத பாதுஷாஹி**

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலே ரூ. 3-12-0 — தபால் செலவு தனி

**தயாராகின்றன**

**ஆசிய நாடுகள்** — கு. அழகிரிசாமி எழுதியது.

ஆசியாவிலுள்ள முப்பத்து நான்கு நாடுகளைப் பற்றிய சரித்திர, பூகோள, இலக்கிய, அரசியல் விவரங்களைத் தெரிவிப்பது இந் நூல். ஆசிய உறவு மகா நாட்டு நிகழ்ச்சி முறையும், சொற்பொழிவுகளும் அடங்கியது. பல படங்களோடு வெளிவரும்,

**முத்ரா ராக்ஷஸம்**

வடமொழியில் விசாக தத்தர் எழுதிய சிறந்த அரசியல் நாடகத்தின் அழகான மொழிபெயர்ப்பு.

சக்தி காரியாலயம் சென்னை 14.

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது.





Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras 14.

# உங்கள் குழந்தை!



இந்த உலகத்தில் ஒரு

- ★ அறிஞன்
- ★ விஞ்ஞானி
- ★ அரசியல் தலைவன்
- ★ வழிகாட்டி
- ★ கவிஞன்

உண்மையா என்று கேட்கிறீர்களா! ஆம். முற்றிலும் உண்மை. உண்மையாக வேண்டுமானால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். குழந்தையின் மன நிலை யறிந்து தக்கவாறு அறிவை வளர்க்க வேண்டும். அறிவை வளர்க்க உங்களால் ஓரளவுதான் நேரத்தைச் செலவிட முடியும். முழு நேரத்தையும் அவர்களுக்காகச் செலவிட ஒருவர் உண்டு. அவர்தான் 'அணில்.' வாரம் ஒரு முறை உங்கள் வீட்டுக்கு வருவார். அவருக்கு நீங்கள் கொடுக்க வேண்டியது சன்மானமாக வருடத்திற்கு ரூ. மூன்றுதான். உங்கள் ஊர் 'அணில்' விற்பனையாளரிடம் வாரந்தோறும் ஓரணாக் கொடுத்தால் போதும்.

சக்தி காரியாலயம், சென்னை—14.

என்ற விலாசத்திற்கு ரூபாய் அனுப்புங்கள்.



# ராஜ மோடியான சம்பத்து

ரத்தினாபரணங்களை அணிவது ராஜ மோடியான சம்பத்து. ஆபரணங்கள் அழகுமட்டுமா செய்கின்றன?

உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும் ஆபரணங்களின் பொருள் மதிப்பு மாறுவதில்லை. சென்றவிடமெல்லாம் சிறப்புத்தான்! ஆபரணங்களைப்போன்ற சேமநிதி ஒன்று உண்டா?

கடந்த ஐம்பது வருஷ காலமாக இந்தியாவிலும் பர்மாவிலும் பொது ஜனங்களுக்கு திருப்தி யளித்து வரும் எங்கள் ஆபரண வியாபாரம் நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது. நாணயத்துக்கும் நீடித்த சௌந்தர்ய சம்பத்துக்கும் எடுத்துக் காட்டுகள் எங்கள் ஆபரணங்கள்.

## ஸூராஜ்மல்ஸ்

313, எஸ்பிளனேட், மதராஸ்